Volume-7 Issue-8

# வைகறை வெளிச்சம்

ஆகஸ்டு 2018 - துல்கஃதா-துல்ஹஜ்ஜா 1439

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

விலை ரூ. 20/-

## "Shariah The Threat to America" சிலுவை யுத்தம் 2.0



## விடுதலைப் போரின் மறுப்பக்கம்

## பசுவின் பெயரால் படுகொலைகள்

## வாக்காளர் பட்டியலும் காணாமல் போகும் முஸ்லிம் பெயர்களும்



## கத்தார் மீதான தடை! வென்றது யார்?

## மீண்டும் சிரியா...!

## சுவிஸ் வங்கியில் குவியும் பணம் யாருடையது?

بسم الله الرحمن الرحيم

# வைகறை வெளிச்சம்

ஆகஸ்டு 2018 துல்கஃதா-துல்ஹிஜ்ஜா 1439



கவர் ஸ்டோரி

## விடுதலைப் போரின் மறுப்பக்கம்

பக்கம் 04

இந்தியாவும் இஸ்லாமும்

பக்கம் 09

சுதந்திரப் போராட்டத்தில் ஆலிம்களின் பங்குகள்

பக்கம் 13

அன்றைய விடுதலைப் போரில் இன்றைய தேசப் பக்தர்கள்

பக்கம் 16

விடுதலைப் போரின் மறுப்பக்கம் 01

பக்கம் 19

விடுதலைப் போரின் மறுப்பக்கம் 02

பக்கம் 21

விடுதலைப் போரின் மறுப்பக்கம் 03

பக்கம் 25

விடுதலையடைந்த இந்தியாவில் முஸ்லிம்கள்



**தனி இதழ்: ரூ.20.**

**ஆண்டுச் சந்தா**

**உள் நாடு: ரூ.240.**

**வெளி நாடு: ரூ.3000.**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

http:/www.facebook.com/vaigaraivelicham






**கத்தார் மீதான தடை! வென்றது யார்?**

பக்கம் 27

பசுவின் பெயரால் படுகொலைகள்

பக்கம் 30

வாக்காளர் பட்டியலும் காணாமல் போகும் முஸ்லிம் பெயர்களும்

பக்கம் 32

இந்துக்களை மைனாரிட்டியாக அறிவிக்க முயற்சி

பக்கம் 35

உங்கள் பெயரை வாக்காளார் பட்டியலில் இருந்துஎப்படி நீக்குகிறார்கள்?

பக்கம் 43

சுவிஸ் வங்கியில் குவியும் பணம் யாருடையது?



ஆசிரியர்

**மு.குலாம் முஹம்மது,M.A.,**
Journalism & Communication

துணை ஆசிரியர்

**கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,**

விபரங்களுக்கு;

VAIGARAI VELICHAM

52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts



தொடர்கள்

பக்கம் 48

இஸ்லாம்! அரசியல்! அதிகாரம்! அரபுலக எழுச்சி!

பக்கம் 50

இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?

பக்கம் 55

இஸ்லாமிய வங்கி முறை

பக்கம் 61

வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்)

பக்கம் 64

சிலுவைப் போர் 2.0


**அவர்கள், தங்களிடம் ஞானம் (வேதம்) வந்த பின்னர், தங்களுக்கிடையேயுள்ள பொறாமையின் காரணமாகவேயன்றி அவர்கள் பிரிந்து போகவில்லை; (அவர்கள் பற்றிய தீர்ப்பு) ஒரு குறிப்பிட்ட தவணையில் என்று உம்முடைய இறைவனின் வாக்கு முன்னரே ஏற்பட்டிருக்காவிடில், அவர்களிடையே (இதற்குள்) நிச்சயமாக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும்; அன்றியும், அவர்களுக்கு பின்னர் யார் வேதத்திற்கு வாரிசாக்கப்பட்டார்களோ நிச்சயமாக அவர்களும் இதில் பெரும் சந்தேகத்தில் இருக்கின்றனர்.(42:14)**



# விடுதலைப் போரின் மறுப்பக்கம்

# இந்தியாவும்! இஸ்லாமும்!!

இந்திய விடுதலைப் போரில் முஸ்லிம்கள் ஆற்றிய பங்கு பணிகளையும் களத்தில் அவர்கள் காட்டிய வீர தீரங்களையும், உவந்தளித்த உயிர் தியாகங்களையும் நம்மில் பலர் சிந்து பாத், அம்புலிமாமா கதைகளைக் கேட்பதைப் போல உணர்ச்சியோடு கேட்டு கலைந்து சென்று விடுகின்றனர்.

இன்னும் சிலருக்கு விடுதலைப் போருக்கும் இஸ்லாத்திற்கும் என்ன சம்மந்தம்? வெள்ளையனிடமிருந்து நாம் வாழும் நிலப்பரப்பை மீட்டெடுப்பதற்கான போரில் உயிர் நீர்த்த முஸ்லிம்கள் அல்லாஹ்வின் பாதையில் உயிர் நீர்த்த ஷஹீதுகளாக எப்படி ஆக முடியும்? அவர்கள் ஷஹீதுகள் என்று அப்போதுள்ள உலமாக்கள் பத்வா வழங்கியது சரியா?

ஆங்கிலம் படிப்பது ஹராம் என்று அப்போதைய ஆலிம்கள் கூறக் காரணம் என்ன? அறிவு வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமையும் மொழியறிவை தடுத்தது சரியா? இது இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் தரப்பட்ட தீர்ப்புதானா? என்று அடுக்கடுக்கான ஐயங்களை எழுப்புகின்றனர். இந்த வினாக்களுக்கு விடை காண வேண்டுமானால் சில அடிப்படை விடயங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாத்திற்கும் இந்தியாவிற்கும் உள்ள உறவும், இந்தியாவிற்கும் வெள்ளையனுக்கும் உள்ள உறவும் தான் நாம் அறிந்திட வேண்டிய அடிப்படை.

நம் உத்தமத் தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் ஏறக்குறைய கி.பி.570ல் பிறந்து கி.பி. 632ல் உலகைத் துறந்தார்கள். அவர்கள் வாழ்ந்து

கொண்டிருந்த காலங்களிலேயே இஸ்லாம் தன் அருள் முகத்தை இந்தியாவிற்குள் காட்டிவிட்டது.

பாபாரத்தான்(**BABARATAN**). இவர் இந்து மதத்தைச் சார்ந்தவர். புனித மக்காவுக்கு இரண்டு முறை பயணம் செய்தவர். நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் நபிப் பட்டம் பெறுவதற்கு முன்பும் அதன் பின்புமாக இருமுறை அண்ணலாரை சந்தித்தவர். இரண்டாவது முறை நபி(ஸல்) அவர்களை சந்திக்கும் போது இஸ்லாத்தை ஏற்றவர். அதன் பின் இந்தியா திரும்பி அதிகமாக 700 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்கள்.

(ஆதாரம்: இப்னு ஹஜர் அஸ்கலானியின் ‘அல் இஸாபா’, ‘தஜ்ரீத்’ ஆகிய நூல்களை மேற்கோள் காட்டி பிஷப் ஜான் ஏ. சுப்ஹான் கூறுவதாக, தூத்துக்குடி மன்பவுஸ்ஸலாஹ் அரபிக் கல்லூரி

வெள்ளி விழா மலர் 2000ல், செ. திவான் எழுதிய 'இந்திய மண்ணில் இஸ்லாம்' கட்டுரை பக்கம் 19)

மேலும் அண்ணல் நபிகளார்(ஸல்) அவர்கள் அப்போதைய மக்களின் வேண்டுகோளை ஏற்று அல்லாஹ்வின் பேருதவியால் விண்ணகத்துச் சந்திரனைப் பிளந்து காட்டிய அந்த அற்புதக் காட்சியை இப்போதைய கேரளத்துப் பகுதியில் அப்போது ஆட்சி செய்துக் கொண்டிருந்த மன்னர் சேரமான் பெருமாள் அண்ணலாரைக் கண்டு இனிய இஸ்லாத்தை இதயம் குளிர ஏற்றுக் கொண்டார் என்பதும் சரித்திரத்தில் யாரும் சரித்திட முடியாத சரியான செய்தியாகும்.

அவனி போற்றும் அறுதித் தூதர் வாழ்ந்துக் கொண்டிருந்த அந்த பொற்காலத்திலேயே இந்திய மண்ணுக்குள் இஸ்லாம் தடம் பதித்து விட்டது என்பதையே மேற்கண்ட வரலாறு நமக்கு போல அரேபியர்கள் இஸ்லாத்தை இங்கு இறக்குமதி செய்யவில்லை. மாறாக இங்கே பிறந்து இங்கே வாழ்ந்து கொண்டிருந்த, சத்தியத்தை ஏற்கத் தயங்காத நல்லுள்ளம் கொண்ட இந்தியர்களே இஸ்லாத்தை இங்கு எடுத்து வந்தனர் என்ற பொன்னரிய தகவலையும் அந்த வரலாறுகள் நமக்கு எடுத்துரைப்பதை கவனிக்கத் தவறாதீர்கள்.

இந்திய விடுதலைப் போரில் முஸ்லிம்கள் ஆற்றிய பங்கு பணிகளையும் களத்தில் அவர்கள் காட்டிய வீர தீரங்களையும், உவந்தளித்த உயிர் தியாகங்களையும் நம்மில் பலர் சிந்து பாத், அம்புலிமாமா கதைகளைக் க்ஏட்பதைப் ப்ஓல உணர்ச்சியோடு கேட்டு கலைந்து சென்று விடுகின்றனர். காலப்போக்கில் ஒரு பள்ளிவாசலின் தேவை ஏற்படுமளவுக்கு முஸ்லிம்களின் எண்ணிக்கை இங்கு பெருகியது. காலத்தின் பருவங்களை அறிந்து, பருவ மாற்றங்களுக்கு ஏற்ப வீசியடிக்கும் காற்றின் திசை புரிந்து பூமியின் பல்வேறு பாகங்களுக்கு சென்று அரபு முஸ்லிம்கள் வியாபாரம் செய்து வந்தனர். வணிகப் பொருட்களோடு புனித இஸ்லாத்தையும் எடுத்து வந்து மக்களிடம் அறிமுகம் செய்து வந்தனர் அந்த அரபுக்கள்.

கேரளாவுக்கும் தென் தமிழ் நாட்டின் கடலோரப் பகுதிகளுக்கும் (காயல்பட்டிணம், பாசிப்பட்டிணம்) வணிக நிமித்தமாக அரபுலக முஸ்லிம்கள் வந்துள்ளனர் என்பது ஆதாரம் கூறத் தேவையில்லாத அளவுக்கு வரலாற்றின் வெளிச்சமான பக்கங்கள் கூறும் உண்மையாகும்.

முஸ்லிம்கள் மட்டுமல்ல, கிருஸ்தவர்கள், யூதர்கள், ஸாபியீன்கள், சிலை வணங்கிகள் எனப் பல்வேறு நம்பிக்கை கொண்டவர்களும் தென்னகப் பகுதிகளுக்கு வந்திருந்தாலும் முஸ்லிம்களின் நம்பிக்கையான இஸ்லாம் மட்டுமே தன் அற நெறிகளால் மக்கள் மனதில் தடம் பதித்தது. கி.பி.643 ஜூன் 7ஆம் தேதி கேரளாவின் காசர்கோட்டில் மாலிக் பின் தினார் ஒரு மஸ்ஜிதை எழுப்பினார்கள். கடல் வழியாக வணிம் செய்ய வந்த இஸ்லாமிய பிரச்சாரகர் அவர். அதுதான் இந்திய மண்ணில் முதல் பள்ளிவாசல். இலங்கையின் ஈழத்திலும் முஸ்லிம்களின் வணிகக்கொடி பறந்தது.

ஒரு முறை ஈழத்திலிருந்து கலீஃபா உமர்(ரழி) அவர்களுக்காக பொருட்களை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்றை அப்போதைய சிந்து மன்னன் வழிப்பறி செய்தான் அநியாயமாக. இவனின் வாரிசுகள் தான் இன்று முஸ்லிம்களை கொள்ளைக்காரர்கள், படையெடுப்பாளர்கள் என்று கூறி பிதற்றித் திரிகிறார்கள். வெட்கக்கேடு வரம்பு மீறுவதும், கொள்ளையடிப்பதும் அவர்களின் பாரம்பரியத்தின் எச்சம். ஒரு உண்மை முஸ்லிம் அநீதி இழைக்க மாட்டான். அநீதியைக் கண்டு வாளாவிருக்கவும் மாட்டான். அக்கிரமத்திற்கு எதிரான போரில் உயிரை துறப்பானே தவிர அணு அளவு கூட சமரசம் செய்து கொள்ளமாட்டான். ஏனென்றால் அவன் நம்புகின்ற இஸ்லாமியக் கோட்பாடு அதைத்தான் அவனுக்கு வலியுருத்துகின்றது.

அந்த வகையில் நீதியின் பாசறையில் வார்த்தெடுக்கப்பட்ட இரண்டாம் கலீஃபா உமர்(ரழி) அவர்களும் நியாயம் கேட்டு தூது அனுப்பினார்கள். ஆண்டுகள் பல கடந்தும் பதில் இல்லை. ஹஜ்ஜாஜ் இப்னு யூசுஃப் அவர்களின் காலத்தில் கி.பி. 712ல் முஹம்மது பின் காஸிம் தலைமையில் முஸ்லிம்களின் படை சிந்து பகுதிக் குள் நுழைந்ததற்குக் காரணமே சிந்து மன்னன் செய்த வழிப்பறிதான்.

முஹம்மது பின் காசிமின் படை சிந்து மன்னனை வீழ்த்தி அப்பகுதியில் நாகரிகமான இஸ்லாமிய அரசொன்றை நிறுவிக் கொண்டது. இதுதான் இந்தியாவில் நிறுவப்பட்ட முதல் இஸ்லாமிய அரசு.(காண்க; அதே நூலில் திவானின் அதே கட்டுரை)

இந்த முஸ்லிம் படையின் வருகைக்கான காரணத்தை திட்டமிட்டு திரை போட்டு மறைத்து முஸ்லிம்களின் படையெடுப்பு என்று மட்டுமே குறிப்பிட்டு இங்குள்ள வரலாற்றாசிரியர்கள் சிலர் கருத்தியல் வன்முறையை வளர்த்து வருகின்றனர்.

கி.பி 711ல் தாரிக் பின் ஸியாத் அவர்களின் தலைமையில் அரசை நிலை நாட்டியது. அடுத்த வருடம் இந்தியாவில் இஸ்லாமிய அரசு ஏற்பட்டது. பன்னூற்றாண்டு காலம் அது தொடர்ந்தது. இந்த அரசாங்கத்தில் மற்ற மதத்தவர்களுக்கு வழிபாட்டு உரிமைகள் உட்பட

அனைத்து உரிமைகளும் வழங்கப்பட்டன. முஹம்மது பின் காசிமின் ஒரு வருட கால் ஆட்சியில் மட்டுமல்ல, அவர் ராஜ்ஜிய காரணங்களுக்காக அரபுலகம் சென்ற பின்னர் தொடர்ந்த இங்குள்ள இஸ்லாமிய ஆட்சியிலும் அந்த நயமிக்க நாகரிகத்தின் நிலை மாறிடவில்லை.

அந்த பொன்னரிய நன் நாட்களில் முஸ்லிம்களின் அதிகாரம் அரசியல் ரீதியாக இங்கே ஆணித்தரமாக நின்றிலங்கியது. இஸ்லாமும் மெச்சத்தகுந்த மேன் முறையில் இங்கே பின்பற்றப்பட்டது. துருக்கியில் கிலாபத் நிலைக் கொண்டிருந்த காலமாகவும் அது இருந்ததால், முஸ்லிம் இந்தியாவை அசைத்துப் பார்க்கும் துணிச்சல் எவருக்கும் வந்ததில்லை.

இங்கே இந்தியாவில் முஸ்லிம்களுக்கு ஒரு சின்னஞ்சிறிய பிரச்சினை என்றாலும் துருக்கியில் உள்ள தங்களது கலீஃபாவுக்கு அதை அவர்கள் தெரிவிப்பார்கள். உலக முஸ்லிம்களின் ஒரே தலைமையான கலீஃபாவும் அங்கே இருந்து கொண்டே அதற்குத் தீர்வு காண்பார். இந்த இடத்தில் ஒரே தலைமையின் மேன்மையை விளக்கும் ஒரு வரலாற்றுச் செய்தியைச் சொல்வது சாலப் பொருத்தமாக இருக்கும் என கருதுகிறேன்.

பாண்டிச்சேரி மாநிலம் காரைக்காலுக்கு அண்மையிலிலுள்ள நிரவி என்ற ஊரில் பள்ளிவாசல் அமைந்துள்ள தெருவின் வழியாக தாரை தப்பட்டை முழக்கத்துடன் சாமி ஊர்வலம் நடத்திட சிலர் முயற்சித்தனர். இது நடந்தது சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்.

அப்போது பிரஞ்சு அரசின் காலணியாதிக்கத்தில் அப்பகுதி இருந்து வந்தது. அந்த ஊர்வலத்துக்கு பிரஞ்சு அரசும் அனுமதி வழங்கி விட்டது முஸ்லிம்களின் எதிர்ப்பை கண்டுக் கொள்ளாமல். உடனே அப்போதைய கலிஃபா அப்துல் ஹமீது கான் அவர்களுக்கு நிரவி வாழ் முஸ்லிம்கள் இந்த அசம்பாவிதத்தை தடுத்து நிறுத்திடுமாறு தகவல் தந்தனர். ஐரோப்பாவில் இருக்கும் பிரஞ்சு அரசுக்கு நம் கலீஃபா வேண்டுகோள் வைத்தார். ஊர்வலம் நிறுத்தப்பட்டது.

மேலும் இனி பள்ளிவாசலின் அருகே எந்த ஆராவாரமும் முழக்கமும் இருக்கக்கூடாது என ஒரு உத்தரவும் போட்டது பிரஞ்சு அரசு. இத்தடை 1970 வரை அங்கே நீடித்தது. முதலில் அந்த தடையை மீறியவர்கள் முஸ்லிம்கள் தான். இன்று சாமி ஊர்வலங்கள் அந்த வீதியில் மேள தாளத்துடன் வருவதற்கு காரணம் நம்மவர்கள் தான்.(காண்க; விடியல் வெள்ளி நவம்பர் 1999, எம்.ஏ. ஹாஜி முஹம்மது நிரவி, வாசகர் கடிதம்)


மீண்டும் அடிப்படைத் தகவல்களுக்கு நான் வருகிறேன். கி.பி.711ல் ஸ்பெயினில் நிறுவப்பட்ட இஸ்லாமிய அரசை வாய்மாலங்கள், சூழ்ச்சிகள், குள்ளநரித் தந்திரங்கள், சித்து விளையாட்டுகள் இன்னபிற கீழறுப்பு வேலைகள் செய்து 1492ல் வெள்ளையர்கள் வீழ்த்தினர்.

நாகரிகத்தின் நிலைக்களனாக நின்று நிலவிய, ஆழமாகவும் அகலமாகவும் வேர் பரப்பிய, புகழ்மேவிய ஸ்பெயினையே முஸ்லிம்களிடமிருந்து பிடுங்கி அங்கே இஸ்லாமிய நன்னெறி நடப்புகளை கடந்த கால செய்தியாக மாற்றியமைக்க வெள்ளையர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பின்னர் இனி உலகின் ஒவ்வொரு பாகங்களிலுமுள்ள இஸ்லாமிய அரசுகளை அப்புறப்படுத்தி



விடலாம் என்ற நம்பிக்கை பிறந்தது அவர்களுக்கு. ஸ்பெயினில் இஸ்லாத்தை வீழ்த்திய அதே அனுபவத்தோடு கி.பி.1620ல் இந்தியாவுக்குள் அடியெடுத்து வைத்தனர் வெள்ளையர்கள்.

கிழக்கிந்திய கம்பெனி என்ற பெயரில் நான்கு பிரிட்டிஷ்காரரர்கள் சேர்ந்து 80,000 பவுண்ட் முதலீடு போட்டு ஒரு வியாபார நிறுவனத்தை கல்கத்தாவில் தொடங்கினர். வணிகம் செய்யும் நோக்கத்தோடு இந்தியாவுக்குள்ளே வந்த வெள்ளையனுக்கு இந்த மண் மீது ஆசை பிறந்து இங்குள்ள வளங்களை நிரந்தரமாக கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு சில சதி வேலைகளைச் செய்து இங்கு ஒரு



சாம்ராஜ்யத்தையே நிறுவிக் கொண்டனர். என்பது தான் அண்மைக் காலம் வரை கூறப்பட்ட வரலாறு.

ஆனால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஜே. அக்பர் தனது "வாளின் நிழலில்" எனும் நூலில் இந்திய மண்ணிலிருந்து இஸ்லாமிய பிடிப்பை அகற்றவும் இஸ்லாமிய அரசை அழிக்கவுமே வெள்ளையன் இந்தியாவிற்குள் வந்தான். வியாபார நிறுவனம் தொடங்கியதெல்லாம் தங்களின் தீர நோக்கத்தை மறைத்துக்கொள்ளவே எனக் கூறுகிறார்.

கிழக்கிந்திய கம்பெனியை வெள்ளையர்கள் இங்கே தொடங்கிய காலக்கட்டங்களில் இப்போதுள்ள பூகோள அமைப்பில் இந்தியா இருக்கவில்லை. ஆஃப்கானிஸ்தான், நேபாளம், பாகிஸ்தான், பங்களாதேஷ் இவை அனைத்தையும் உள்ளடக்கியதாக இருந்தது. இந்து ராஜாக்கள் பலர் பல பகுதிகளில் ஆட்சி நடத்தி வந்தனர். வியாபார நோக்கத்தில் வந்தோம் எனக் கூறிக்கொண்ட கிழக்கிந்திய கம்பெனியினர் இங்குள்ள முஸ்லிம்களுக்கு எதிராக பல இனத்தவர்களை தூண்டி விட்டனர். அப்போது கொல்கத்தா பகுதியில் முஸ்லிம்கள் ஆட்சி செய்துக் கொண்டிருந்தனர்.

இந்த முஸ்லிம் ஆட்சியாளர் களுக்கு எதிராக வீரத்திற்கு பெயர் போன இராஜ புத்திரர்கள், சீக்கியர்கள், இந்து மன்னர்கள் என அனைவரையும் சண்டையிட வைத்தனர் ஆங்கிலேயர்கள். மேலும் இரு அரசர்கள் தங்களுக்குள் மோதிக்கொள்ளும் போது இருவரில் ஒருவரிடம் ஒப்பந்தம் பேசுவார்கள் வெள்ளையர்கள்.

இந்தப் போரில் நாங்கள் உனக்கு ஆதரவாக எங்கள் படைகளைத் தருகிறோம். அதற்கு கூலியாக போரில் நீ ஜெயித்து விட்டால் எதிரி அரசனிடமிருந்து நீ அபகரித்துக் கொள்ளும் நிலப்பரப்பில் பாதியை எங்களுக்கு தர வேண்டும் என்ற அடிப்படையில் அமையும் அந்த ஒப்பந்தம்.

இப்படி தந்திரமாகப் பெறப்பட்ட நிலங்களில் தான் ஒரு சாம்ராஜ்யத்தையே நிறுவிக்கொண்டனர் ஆங்கிலேயர்கள். சற்றேறக் குறைய நூறு ஆண்டுகள் மட்டுமே வியாபார நிறுவனமாக கம்பெனியை நடத்தினார்கள். அதுவரை கம்பெனி மூலம் மட்டுமே கொள்ளையடித்து சென்ற ஆங்கிலேயர்கள் அதன் பின்னர் சாம்ராஜ்யத்தை அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளையடித்தனர்.

இந்தியாவிற்கு ஆள வந்த அரேபியர்கள் இங்குள்ள செல்வங்களை வைத்து இந்த நாட்டை வளப்படுத்தினர். அவர்களும் இங்கேயே தங்கி விட்டனர். ஆனால் வன் நெஞ்சம் கொண்ட வெள்ளையரோ இங்கிருந்து கொள்ளையடித்துச் சென்றனர். இதற்கு மேல் இங்கு சுரண்டுவதற்கு எதுவுமில்லை என்ற நிலை வந்தவுடன் சுதந்திரம் கொடுத்து விட்டு தப்பித்தோம் பிழைத்தோம் என ஓடிவிட்டனர். ஆனால் முஸ்லிம்களுக்கு எதிராக

வரலாற்றைத் திரிப்பதில் சுகம் காண்கின்ற சிலர் முஸ்லிம் ஆட்சியாளர்களை கொள்ளையர்களாக சித்தரித்து சரித்திரத்தை தங்கள் மனம் போனப் போக்கில் இழுத்து செல்கின்றனர். அதற்கு செய்தி ஊடகங்களும் துணை போகின்றன.

அவர்களைப் போல் நமக்கும் மீடியா பலம் இருக்குமேயானால் அல்லது இப்போதுள்ள மீடியாக்கள் நியாயப் பார்வையுடன் நமது எதிர் விமர்சனங்களையும் வெளியிடுமானால் அந்த வரலாற்றை சிதைக்கும் வானரங்களால் நமக்கு எதிரான களத்தில் ஒரு மணி நேரம் கூட தாக்குப் பிடிக்க முடியாது. இதை நாம் சவாலாகவே அறை கூவி முன் வைக்கின்றோம்.

1700களின் மத்திய காலத்தில் கல்கத்தாவை ஒட்டிய பகுதிகளில் ஆங்கிலேயர்கள் நிறுவிய அரசுக்கெதிராக 1757ல் கல்கத்தாவிலிருந்து குரல் ஒலித்தது. மௌலானா சிராஜுத் தௌலா(ரஹ்) அவர்கள் தான் பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கு எதிர் முழக்கமிட்ட முதல் சுதந்திரப் போராட்ட வீரர். ஆலிம்கள் தான் விடுதலைப் போருக்கு வித்திட்டவர்கள்.

1757 முதல் 1857 வரை முஸ்லிம்கள் தான் குறிப்பாக ஆலிம்கள் தான் விடுதலைப் போரை நடத்தினார்கள். இஸ்லாத்தை அழித்திடும் வஞ்சக நோக்கில் வந்து அதிகாரத்தையும் தனதாக்கிக் கொண்ட ஆங்கிலேயருக்கு எதிராகப் போரிட்டு மீண்டும் இஸ்லாமே இங்கே ஆளுகின்ற அறனெறியாகத் திகழ்ந்திட வேண்டும் என்பதே ஆலிம்களின் நோக்கம்.

அநீதிக்கு எதிராக போராடியே ஆக வேண்டும் என்ற இஸ்லாத்தின் அழுத்தமான போதனையே ஆலிம்களை சமர்களத்திற்கு இழுத்து வந்தது. மாறாக சிலர் நம்புவது போல தேசியவாதம் என்ற படத்தனமான மனித கண்டுபிடிப் உலமாக்களை போராடத் தூண்டவில்லை.ஏனெனில் தேசிய வாதம் என்ற பிற்போக்குத்தனம் தோன்றியதே 1800களில்தான், வெள்ளையனின் ஆதிக்க அக்கிரமத்துக்கு எதிரான ஜிஹாத் 1757லேயே தொடங்கி விட்டது.இந்த பிண்ணனியில் தான் ஆங்கிலேயருக்கு எதிரான போர் ஜிஹாத். அந்தப் போரில் உயிர் துறப்போர் ஷஹீதுகள் என்ற ஃபத்வாவையும் நாம் பார்க்க வேண்டும்.

ஆங்கிலேயர்கள் மீது கொண்ட வெறுப்பினால் மட்டும் தான் ஆங்கிலம் படிப்பது ஹராம் என உலமாக்கள் ஃபத்வா வழங்கினர் எனக் கூறுவது சரியல்ல. ஒரு மொழியைப் பயின்றால் அதன் கலாச்சாரமும் நம்மைத் தொற்றிக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது. ஆங்கில மொழியின் வழியாக அந்தக் கேடுகெட்ட கலாச்சாரமும் இங்கே நுழையுமானால், அதுகாறும் பேணப்பட்டு வரும் தூய இஸ்லாமிய வழிமுறை பட்டுப்போக வழியேற்படும் என்பதால் மக்களை கலாச்சார சீர்கேட்டிலிருந்து காக்கவே அந்த ஃபத்வா வழங்கப்பட்டது.

இஸ்லாத்தை ஒழிப்பதே வெள்ளையனின் லட்சியம் என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்த பின் அவனுடைய இராணுவத்தில் முஸ்லிம்கள் பணியாற்றுவது ஆகுமா? எனவே பிரிட்டிஷ் ராணுவத்தில் முஸ்லிம்கள் பணியாற்றக் கூடாது எனவும் தீர்ப்பு வழங்கினர் உலமாக்கள். வெள்ளையனின் அதிகார வரம்புக்கு உட்பட்ட நிலப்பரப்புகள் 'யுத்த பூமி'(தாருல் ஹர்பு) தான் என்ற ஃபத்வா அளிக்கப்பட்டதையும் இதே கண்ணோட்டத்திலேயே காண வேண்டும்.

சுதந்திரப் போர் என்பது முஸ்லிம்களின் போர். 1857க்குப் பிறகு தான் மற்ற சமூகத்தவர்கள் இந்தப் போரில் பங்கேற்றனர். வெள்ளையர்கள் இந்தியாவில் கால் ஊன்றிய பிறகு தான் மற்ற சமூகத்தவர்கள் இந்த போரில் பங்கேற்றனர். வெள்ளையர்கள் இந்தியாவில் கால் ஊன்றிய பிறகுதான் துருக்கியில் நிலைக்கொண்டிருந்த உலக முஸ்லிம்களின் ஒரே தலைமையான கிலாஃபத்தை உடைத்தெரியும் திராணியும் தைரியமும் ஆங்கிலேயனுக்கு வந்தது. கிலாஃபத்தை வீழ்த்தியும் காட்டினார்கள்.

கிலாஃபத்தின் வீழ்ச்சி உலக முஸ்லிம்களின் உம்மத்தின் வீழ்ச்சியாகவே அமைந்து விட்டதை நாம் கவலை நிறைந்த இதயத்துடன் கண்டு வருகின்றோம். இப்படியாக ஆங்கிலேயன் இந்தியாவில் கால் ஊன்ற அனுமதிப்பது உலக முஸ்லிம்களின் சரிவுக்கு வழி வகுத்து விடும் என்பதை தீர்க்கமாக முன் கூட்டியே அனு மானித்துக் கொண்ட உலமாக்கள் வெள்ளையர் ஆட்சியை எதிர்ப்பதில் வேகம் காட்டினர். ஆனால் சுதந்திர இந்தியாவில் முஸ்லிம்களை அந்நியர்களாகக் காட்சிப்படுத்தும் நன்றிகெட்ட வேலைகள் தொடர்கின்றன. அறிவுக்களத்தில் நமக்கெதிராக ஏவப்படும் அம்புகளை சந்திக்கவும் எதிர்த்தாக்குதலுக்கும் நாம் தயாராக வேண்டும்.

அநீதிகளைக் கண்டு அஞ்சி நடுங்குவதும், அக்கிரமங்கள் தலைத்தூக்கும் போது பேடிகளாக பதுங்கிக் கிடப்பதும், பாதக செயல்கள் பேயாட்டம் போடும் போது பிண்டங்கள் போல் வீழ்ந்து கிடப்பதும் முஸ்லிமின் பண்பு அல்ல. அநியாயத்திற்கு எதிரான போரில் வெற்றி வாகை சூடுவது அல்லது வீர மரணம் அடைவது இதுவே இஸ்லாம் நமக்கு போதிக்கும் பாடம். வரலாற்றுக் களத்தில் திணிக்கப்படும் அடக்குமுறைக்கும் இது பொருந்தும்.

**பேராசிரியர். கா.மு. இலியாஸ் ரியாஜி,M.A.,**

# சுதந்திர போராட்டத்தில் ஆலிம்களின் பங்கு



சுமார் 150 வருட காலம் முழு இந்தியாவில் தொடர்ந்து ஆட்சி நடத்திய ஆங்கிலேயன் கடைசியில் தேர்தல் முறை அரசியல் அமைப்பை செயல்படுத்தினான்.

இந்தியத் தலைவர்களை அழைத்து பல முறை பேச்சு வார்த்தைகளை நடத்தி பிரிவினை உண்டாக்கி லார்ட் மவுண்ட் பாட்டன் இங்கிலாந்துக்கு திரும்பிச் சென்று விட்டார்.. அன்னியன் ஆட்சி காலம் முடிந்து விட்டது.

1947ல் இந்தியா விடுதலை அடைந்தது. மக்கள் ஜனநாயக சுதந்திர ஆட்சி அமைக்கப்பட்டது. உலக வல்லரசாக திகழ்ந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கு 1939-1945 வரை நடந்த இரண்டாவது உலகப்போர் ஓர் அடிப்படை காரணமாகும்.

தன் பொருளாதார நிலையை தக்க வைத்துக் கொள்ளவும் இந்தியா உட்பட இதர நாடுகளிலிருந்து தன் ஆட்சியை பிரிட்டிஷ் விக்டோரியா அரசு விலக்கிக் கொண்டது.

இந்தியாவில் ஆட்சி மாற்றம் செய்யப் படுவதற்கு 20 ஆண்டுகள் தேவைப்பட்டன. பல கமிஷன்கள் அமைக்கப்பட்டன. பல திட்டங்கள் விவாதிக்கப்பட்டன. இந்தியாவின் நேஷனல் காங்கிரஸ் மற்றும் முஸ்லிம் லீக் பிரதான கட்சிகளாக முன் வந்தன.

இந்தப் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொண்டவர்கள் தான் பிறகு ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார்கள். இன்றைக்கு அந்த தலைவர்கள் விடுதலைப் போர் வீரர்களாகவும் சுதந்திர நாட்டுத் தலைவர்களாகவும் போற்றப்படுகின்றனர். மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, மௌலான அபுல் கலாம் ஆஸாத், சர்தார் பட்டேல் போன்ற சிலர் இந்திய சுதந்திர வரலாற்றில் அதிமுக்கிய இடம் பிடித்துக் கொண்டார்கள்.

சிப்பாய் கலகம் என்றும் கிளர்ச்சிப் போர் என்றும் வர்ணிக்கப்படும் மக்கள் சுதந்திர போராட்டம் 1857ல் நடந்தது. அதன் உண்மை காரணங்களும் பின் விளைவுகளும் சரித்திரத்தில் மங்கிப் போய் மறைக்கப்பட்டு விட்டன.

ஏற்றுமதி இறக்குமதி நிறுவனமான ஈஸ்ட் இந்தியா கம்பெனி எப்படி ஆட்சியைப் பிடித்தது? அது ஆட்சியில் அமர்ந்த முதல் நாளிலிருந்து தொடர்ந்து இறுதி வரை ஒரு நூற்றாண்டு காலத்திற்கும் மேல் போராடிக் கொண்டிருந்தவர்கள் யார்? அவர்களைப் பற்றிய விவரங்கள் ஏன் மறைக்கப்பட்டன? இந்திய

சுதந்திரப் போரில் அவர்கள் பங்கு என்ன? இதைப் பற்றி ஆராய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

உண்மைகள் வெளி வந்தால் தான் இந்திய நாட்டில் முஸ்லிம்களின் உண்மை நிலை, அரசியல் முக்கியத்துவம், சட்ட உரிமைகளின் உண்மைப் பின்னணி நாட்டு மக்களுக்கும் சமுதாயத்துக்கும் இளையத் தலைமுறையினருக்கும் விளங்கும். இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தை ஐந்து காலக்கட்டங்களாகப் பிரிக்கலாம்.

01.1609 - 1759 ஈஸ்டு இந்தியா கம்பெனி.

02.1759 - 1801 ஆட்சி அதிகாரத்தில் ஊடுருவல்.

03.1803 - 1857 கொடூரமான அடக்குமுறை ஆட்சி.

04.1857 - 1921 சாம்ராஜ்ய உச்சக்கட்டம்.

05.1926 - 1947 ஆட்சி மாற்றம்.

படிப்படியாக ஏற்பட்ட மாற்றங்களின் பின்னணிகளையும் எதிர்விளைவுகளையும் நாம் ஆராய வேண்டும்.

ஜஹாங்கீர்(1605), அவ்ரங்கஸேப்(1658) பிறகு பஹதூர்ஷா ஜஃபர்(1658) வரை ஒரு நூற்றாண்டு காலத்தில் டில்லியில் 20 பேரரசர்கள் ஆட்சி மாறிவிட்டார்கள்.

அரசனுக்கு ஏகப்பட்ட வருமானம் இருக்க மக்கள் நலத்திட்டங்கள் ஏதுமில்லாமல் சாப்பாட்டிற்கே வழியில்லாமல் இருந்தது. பண்ணையார்கள், ஜமீன்தார்கள் எல்லாம் ராஜாக்கள் நவாப்புகளாக மாறி சுதந்திரமாக செயல்பட ஆரம்பித்து விட்டார்கள்.

வருமானத்தை டில்லிக்கு அனுப்புவதற்கு பதிலாக தற்காப்பிற்காக கோட்டைகளைக் கட்டிக் கொண்டு படைகள் நியமித்துக் கொண்டார்கள். அவர்களும் ஆட்சி சுகங்களில் மூழ்கி விட்டார்கள். இந்த நிலையில் பெரும் அளவில் கொள்முதல் செய்து ஈஸ்டு இந்தியா கம்பெனி இந்தியாவில் நுழைந்தது.

ஈஸ்டு இந்தியா கம்பெனி வணிகக் கூடங்களும் தொழிற்சாலைகளும் அமைத்து வேலை வாய்ப்பை ஏற்படுத்தியது. கண்ணியமான பிரபுகளாக நடந்து ராஜாக்கள் நவாபுகள் இடத்தில் நெருக்கத்தை உண்டாக்கிக் கொண்டார்கள் ஆங்கிலேயர்கள்.

தனக்காக தனிப் படைகளையும் அமர்த்தினார்கள். தேர்ச்சி பெற்ற ராணுவப் படை வீரர்களை ஏற்பாடு செய்து கொடுப்பார்கள். பதிலுக்கு மிக விலையுயர்ந்த நிலங்களைப் பெற்றுக் கொள்வார்கள். வங்காள நவாபு சிராஜுத் தௌலா இவர்களின் சூழ்ச்சிகளைப் புரிந்து கொண்டு ஆங்கிலேயர்களை ஒடுக்க பெரும் படை திரட்டி போர்க்களத்தில் இறங்கினார்.

ஆனால் சூழ்ச்சி செய்து பிளாசி2 மைதானத்தில் அவனுடைய தளபதி மீர் ஜாபர் தௌலாவைக் கொன்றுவிட்டான். 1759ல் ஆங்கிலேயன் முஷீராபாத்தை பிடித்துக் கொண்டு முதல் ஆட்சி அமைத்தான். பல சிற்றரசுகளை தன் சூழ்ச்சியால் அழித்து பல கோட்டைகளைப் பிடித்தான். மற்றவர்கள் ஈஸ்டு இந்தியா கம்பெனி படைகளின் பாதுகாப்பில் வந்து விட்டனர்.

தென்னகத்தில் ஐந்து பெரும் போர்களில் திப்பு சுல்தான் வெள்ளையர்களை படுதோல்வி அடையச் செய்து ஓட ஓட விரட்டினார். மே 4ஆம் தேதி 1799 ஸ்ரீரங்கப்பட்டிணத்தில் சூழ்ந்து கொண்டு துரோகிகளை விலை கொடுத்து வாங்கி திப்பு சுல்தானைக் கொன்று விட்டார்கள்.

'இனி இந்தியா முழுவதும் நமதே' என்று வெள்ளைக்கார ஜெனரல் முழக்கமிட்டான். உண்மையில் அங்கிலேயர்களை எதிர்த்து போராட முழு இந்தியாவில் யாரும் இருக்கவில்லை. மராட்டியர்கள், ஆர்காடு நவாபு, ஹைதராபாத் நிஜாம், லக்னவ் நவாப் ஆகியோர்களை கைவசப்படுத்திக் கொண்டு புயல் வேகத்தில் கம்பெனிப் படைகள் 1801ல் டில்லி செங்கோட்டையில் நுழைந்தன. முகலாயப் பேரரசை அரண்மனைக் கைதியாக ஆக்கிவிட்டார்கள்.

இந்தியா முழுவதும் கம்பெனி ஆட்சியின் கீழ் வந்துவிட்டது. பொதுவாக இந்திய மக்கள் இதை வரவேற்றார்கள். துரோகிகளுக்கு நிலப்பட்டாக்களும் சன்மானங்களும் கொடுத்து ஏமாற்றினான் ஆங்கிலேயன். எதிர்ப்பவர்களை கைது செய்து தூக்கிலிட்டான்.

நீண்ட ரயில் பாதைகளை போட்டான். பாலங்கள் கட்டினான். ஆங்கிலப் படிப்பு மூலம் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தினான். பெருமளவு மக்களை ராணுவத்தில் சேர்த்துக் கொண்டான்.

மாபெரும் வருமானத்தை இங்கிலாந்து மக்களுக்கு கம்பெனி செலுத்திக் கொண்டிருந்தது. காலப்போக்கில் மக்கள் ஆங்கிலேய ஆட்சியின் தீய விளைவுகளை உணர ஆறம்பித்தனர். அவர்களை மூன்று வகையாக பிரிக்கலாம்.

01.நவாபுகள், ராஜாக்கள்

02.மதப்பற்றுள்ள பொதுமக்கள்

03.முஸ்லிம்கள்

ஆட்சி இழந்து விட்டவர்களில் முகலாய அரசர், பேகம் ஹஜ்ரத் மஹல் போன்றவர்கள் பழிவாங்கத் துடித்துக் கொண்டிருந்தார்கள். மேற்கத்திய கலாச்சாரம் மத வளர்ச்சிகளைப் பாதித்தது. குறிப்பாக;

*01.* நெடுஞ்சாலைகள் போடுவதற்கு கோவில்கள், பள்ளிவாசல்கள் இடிக்கப்பட்டன.

*02.* மருத்துவமனைகளில் பர்தா பேணுதல் மறுக்கப்பட்டன.

*03.* பிராமணர்கள் ரயில் பெட்டிகளில் கீழ் சாதி மக்களுடன் அமர்ந்து சாப்பிட சங்கடப்பட்டனர்.

*04.* விதவை கல்யாணம்.

*05.* ஒரே சிறையில் எல்லா சாதியினருக்கும் ஒரே சாப்பாடு.

*06.* மேற்கத்திய கல்வி முறையில் பெண்கள் கல்வி.

*07.* நிலங்கள் ஜப்தி.

*08.* பண்டிதர்கள் நீதி செய்யத் தடை.

*09.* உடன் கட்டை ஏறுதலுக்குத் தடை.

*10.* ராணுவ தொப்பிகளிலும் தோட்டா துப்பாக்கிகளிலும் தோல் துண்டுகள்.

இது போன்ற பல சட்டமுறைகள் மத உணர்ச்சிகளைப் பாதித்தது. மக்கள் ஆங்கிலேய ஆட்சியை வெறுக்க ஆரம்பித்தார்கள்.


இந்த உணர்ச்சிகள் எரிமலையாக மாறி 1857ல் பெரும் புரட்சிப் போராட்டமாக வெடித்தது. அதில் முஸ்லிம்கள், இந்துக்கள், சீக்கியர்கள் ஒன்று சேர கடும் போராட்டத்தில் பெரும் அளவில் உயிர் தியாகம் செய்தார்கள். முகலாய மன்னர் பஹதூர்ஷா ஜஃபர் டில்லியில் தலைமை தாங்கினார். வட இந்தியா முழுவதும் கலவரம் மூண்டது.

வெள்ளையன் ஆட்சி ஆடிப்போய் விட்டது. கொடூரமான படைப்பலத்தைக் கொண்டு போராட்டத்தை இராணுவக் கால்களின் கீழ் நசுக்கி அடக்க முயற்சித்தான்.

1857 கலவரத்திற்கு பிறகு குறிப்பாக முஸ்லிம்களை தொடர்ந்து 10 வருடங்களுக்கு கடும் தண்டனைகள் விதித்து கொடுமைப் படுத்தினான்.

டில்லியை தொடர்ந்து ஐந்து மாதங்களாக அழித்து நொறுக்கி மயானமாக்கிவிட்டான். வாரிசையாக நிற்க வைத்து பீரங்கி குண்டுகளால் தாக்கினான். நெற்றியிலும், நெஞ்சிலும் சுட்டுக் கொன்றான். ஆயிரக்கணக்கான மக்கள் தூக்கில் தொங்க விடப்பட்டனர்.

வலுக்கட்டாயமாக பன்றி, நாய் இறைச்சியை வாயில் நுழைத்து பிறகு சுட்டான். வாழ்நாள்



கைதிகளாக நாடு கடத்தினான். நீண்ட ஜுப்பா அணிந்த தாடிக்கார ஒரு முஸ்லிமையும் விட்டு வைக்கவில்லை.

இதைக் கொண்டு அவன் ஜிஹாத் என்ற உணர்ச்சியை நிரந்தரமாக அழித்து விட முற்பட்டான். முஸ்லிம்களை எதிரிகளாக கருதினான். 1857ல் விடுதலைப் போரின் இந்தக் கடைசி அம்சத்தைத்தான் இங்கே குறிப்பிட்டு விளக்கம் அளிக்க விரும்புகின்றோம்.

ஆங்கிலேயர்களை எதிர்த்தவர்கள் எல்லாம் நாட்டின் சுதந்திரத்திற்காக போராடினார்கள் என்று

*சொல்லி விட முடியாது. சில குறிப்பிட்ட மதத்திற்கு முரணான செயல்முறைகளை எதிர்த்தார்கள்.*

*ஆனால் பொதுமக்களுக்கும், பெரும் பான்மையான இந்துக்களுக்கும் ஆட்சி மாற்றத்தால் பாதிப்பு எதுவும் கிடையாது. நாட்டிற்கு ஏற்பட்ட பொருளாதார பேரிழப்பை சில மேதைகள் மற்றும் படித்தவர்கள் மட்டும் உணர்ந்திருந்தார்கள்.*

*ஆனால் நேரடியாக ஆட்சியை சவால் விட்டு விடுதலையை நாடி கடும் போராட்டத்தில் இறங்கியவர்கள் ஆலிம்களான மார்க்க அறிஞர்கள் மட்டுமே, இதில் எந்த சந்தேகமும் கிடையாது.*

*அவர்கள் தான் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்திய ஜிஹாதிற்கு தூண்டிவிட்டார்கள். பிறகு இந்திய நேஷனல் காங்கிரஸுடன் கூட்டு சேர்ந்து கொண்டு அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டு முழு சுதந்திரத்திற்காக முழக்கம் இட்டார்கள்.*

*முகலாயப் பேரரசின் வீழ்ச்சியினாலும், டில்லியில் ஆங்கிலேயர்கள் ஆட்சியை பிடித்ததனாலும் ஷாஹ் அப்துல் அஜீஸ் திஹ்லவி அவர்கள் 'நாடு அடிமை ஆகிவிட்டது' என்று தீர்ப்பு அளித்தார்கள். மார்க்கத்தைப் பாதுகாக்க போராட வேண்டிய அவசியத்தை உணர்த்தினார்கள். தன்னை சார்ந்த ஆலிம்களை ஜிஹாதுக்காக தயார் படுத்தினார்கள்.*

*செய்யிது அஹ்மது ஷஹீத் பரேலவி அவர்களை ஜிஹாதுக்கு அமீராக நியமித்தார்கள். அந்தப் பகுதியில் அவர் இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்தி ஜிஹாத் செய்ய முற்பட்ட போது சீக்கியர்களை தூண்டிவிட்டு மோதல் ஏற்படுத்தி **1831**ல் பாஸிகோட் மைதானத்தில் போராடி அவர் ஷஹீதானார்.*

*சிதறிவிட்ட படை வீரர்களான ஆலிம்கள் தொடர்ந்து பல பகுதிகளில் **1857** வரை ஜிஹாது செய்துக் கொண்டு, உணர்ச்சிகளை தூண்டிக் கொண்டே இருந்தார்கள். வெள்ளையர்கள் கணக்கின் படி **25** வருட காலத்தில் **7** லட்சம் ஆலிம்களும், முஸ்லிம்களும் உயிர் தியாகம் செய்தார்கள்.*

***1857**க்குப் பிறகு ஹாஜி இம்தாதுல்லாஹ் அவர்களை அமீராகத் தேர்ந்தெடுக்க டில்லிக்கு அருகில் ஷாமிலி மைதானத்தில் கடும் போர் நடந்தது. பீரங்கி தாக்குதல்களை பொறுக்க முடியாமல் சிதறிவிட்டார்கள் முஸ்லிம்கள். பலர் தலைமறைவாகி விட்டார்கள்.*

***1867**ல் தாருல் உலூம் தேவ்பந்து நிறுவப்பட்டது. **1906**ல் ஷெய்குல் ஹிந்த் அவர்கள் தலைமையில் காபுலில் ஒரு **GOVERNMENT IN EXILE** அமர்த்தி துருக்கி, ரஷ்யா, ஜெர்மனி ஆகிய நாடுகளின் உதவியுடன் பிரிட்டிஷ் ஆட்சியின் மேல் ராணுவத் தாக்குதல் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.*

*கடைசி நேரத்தில் ரகசியம் அம்பலமாக கைது செய்யப்பட்டு மால்டா தீவில் சிறை வைக்கப் பட்டார்கள். சிறையிலிருந்து விடுதலையானதும் 'ஜம்இய்யத் உலமா இ ஹிந்த்' என்ற அமைப்பை நிறுவி முதல் காரியமாக **1921**ல் **474** மாபெரும் ஆலிம்கள் வெள்ளையர்களை எதிர்த்து ஒரு மார்க்கத் தீர்ப்பு அளித்தார்கள்.*

*துருக்கியில் முஸ்லிம்களின் ஆட்சியை எதிர்த்து முஸ்லிம் படை வீரர்களை பயன்படுத்துவதால் ஆங்கிலேயர்களுடன் எவ்வித தொடர்பு வைப்பதும், உதவி செய்வதும், அறவே கூடாது. அது ஹராம் என்று அதில் எழுதப்பட்டிருந்தது.*

*ஜூலை **1921** லாஹூரில் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு மத்தியில் இது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. பல தடவை தடை செய்து தொடர்ந்து வெளியிடப்பட்டு கூட்டங்களில் வாசித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்தனை ஆலிம்களும் சிறையில் அடைக்கப்பட்டு கடுமையான தண்டனைகள் அனுபவித்தார்கள்.*

***1926**ல் ஜம்இய்யத் உலமா இ ஹிந்த் முழு சுதந்திரத்திற்காக முதல் தடவையாக தீர்மானம் நிறைவேற்றியது.*

*காங்கிரஸ் கட்சிக் கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டு **1929**ல் இந்தியன் நேஷனல் காங்கிரஸ் கட்சியும் ஜம்இய்யத்தைப் பின்பற்றி அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியது.*

***1857**க்குப் பிறகு மறுபடியும் விடுதலைப் போராட்டத்தை தூண்டிவிட்டு மேடைகள் அமைத்து கொடுத்து உயிர் பொருளாதார தியாகங்கள் செய்தது உலமா பெருமக்கள் என்பதில் சந்தேகம் இல்லை. அந்தத் தியாகங்கள் வீணாகாது.*

*மறந்து விடக்கூடாது என்பதற்காக மீண்டும் உண்மைகளை வெளிப்படுத்தும் நேரம் வந்து விட்டது.*

**மௌலவி. முஹம்மது இக்பால் காசிமி.,**

# அன்றைய விடுதலைப் போரில் இன்றைய தேசபக்தர்கள்?



சங்பரிவார் அமைப்புகள் தான் இந்த நாட்டின் உண்மையான 'தேசபக்த' அமைப்புகள் என்ற பிரச்சாரத்தை பார்ப்பனீய சக்திகளும், சங்கராச்சாரிகளும் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

தேசபக்தி என்பதற்கு சங்பரிவார்களும் தேசியவாதிகளும் வைத்துள்ள அளவுகோலைப் பயன்படுத்திப் பார்த்தால் இதே சங்பரிவார்கள் தேசபக்தர்களாக ஒரு போதும் இருந்ததே இல்லை, இதுவே வரலாற்று உண்மை.

பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து நடத்திய சுதந்திரப் போராட்டத்தில் பாலகங்காதர திலகர் காலத்துக்குப் பிறகுதான், காந்தி தலைமை தாங்க வருகிறார்.

பிரிவினையை எதிர்த்து திலகர் நடத்திய போராட்டம் மத அடிப்படையிலேயே நடந்தது என்பதுதான் வரலாறு.

'விடுதலை பெறும் இந்தியா, இந்துக்களின் தேசமாக இருக்க வேண்டும்' என்ற நோக்கத்துடன் தான் திலகர் தனது போராட்டங்களை நடத்தினார். அதேக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருந்த பார்ப்பனர்கள் திலகரைத் தீவிரமாக ஆதரித்தனர்.

மராட்டிய பார்ப்பனர் திலகர் தான் ஆர்.எஸ்.எஸ். சிந்தாந்தத்துக்கு முன்னோடி. டாக்டர் அம்பேத்கர், அவரது 'காந்தியும் காங்கிரஸும் தீண்டப்படாதோருக்கு செய்தது என்ன?' என்ற நூலில் திலகரின் வர்ணாசிரம ஆதரவை அம்பலப்படுத்தியுள்ளார்.

ஷோலாப்பூரில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் திலகர் இவ்வாறு பேசினார்:

"செக்கு ஆட்டுகிறவன், வெற்றிலை பாக்குக் கடை வைத்திருப்பவன், சலவைத் தொழில் செய்கிறவன், இவனெல்லாம் எதற்காக சட்டசபைக்குப் போக வேண்டும்? சட்டத்துக்குக் கீழ்படிந்து நடக்க வேண்டியதுதான் இந்தச் சாதிக்காரனுக்கு வேலையே தவிர சட்டத்தை உண்டாக்கும் இடத்துக்குப் போகக் கூடாது."

பெண்களைப் பள்ளிக்கூடத்திற்கே அனுப்பக்கூடாது என்று சொன்ன திலகர் நடத்திய 'சுதந்திர போராட்டம்' எப்படிப்பட்டது என்பதற்கு ஓர் உதாரணத்தைக் குறிப்பிடலாம்

*1897*ஆம் ஆண்டு பம்பாய், சூரத், பூனா, உட்பட இந்தியாவின் மேற்குப் பகுதி முழுவதும் பயங்கரமான பிளேக் நோய் பரவி, ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர்.

அதனால் பிரிட்டிஷ் கப்பல்கள் இந்தியாவிற்கு வருவது நிறுத்தப்பட்டது. அப்போது பிரிட்டிஷ் அரசாங்கம்

டபிள்யூ.சி. ராஹ்ட் என்ற ஐ.சி.எஸ். அதிகாரி தலைமையில் பிளேக் தடுப்புக் கமிட்டி ஒன்றை அமைத்தது. பிளேக் நோய்க்கு காரணம் எலிகள் தான் என்று கண்டறியப்பட்டு, எலிகளை ஒழிக்கும் வேலைகள் நடந்தன.

ஆனால் மதவெறியில் மூழ்கிப்போனவர்கள், எலி 'வினாயக்' கடவுளின் வாகனம் என்பதால், அதைக் கொல்லக் கூடாது என்றதோடு, வியாதிக்கு உட்ப்பட்டவர்களை சிகிச்சை பெறக் கூடாது என்று தடுத்தனர்.

நோயாளிகளின் வீட்டிற்குள், சிகிச்சைக்காக மருத்துவர்கள் சென்ற போது, பல பார்ப்பனர்கள், "பிராமணர்கள் வீட்டிற்குள் மிலேச்சர்கள் நுழையக்கூடாது" என்று எதிர்த்தனர்.

நோய்த் தடுப்புக் கமிட்டித் தலைவராக இருந்த ராஹ்ட், மற்றொரு அதிகாரி அயர்ஸ்ட் ஆகிய இருவரும் *1879*ஆம் ஆண்டு ஜூன் மாதம் *22*ஆம் தேதி, பூனாவில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

பூனாவைச் சார்ந்த பார்ப்பனர்கள் தான் இதற்கு சதித் திட்டம் வகுத்தார்கள் என்று புலன், விசாரணையில் கண்டறியப்பட்டது. இந்தக் கொலையில் திலகருக்கும் தொடர்பிருந்தது உறுதி செய்யப்பட்டு, அவர் *18* மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றார்.

*1942*ஆம் ஆண்டு காங்கிரஸ், 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை அறிவித்தபோது, கொல்கத்தா மாகாண அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்தவர் ஷியாம பிரசாத் முகர்ஜி என்ற வங்காளப் பார்ப்பனர்.

ஆர்.எஸ்.எஸ்.-இன் அரசியலமைப்பாகத் திகழ்ந்த ஜனசங்கம் கட்சிப் பெயர் மாற்றம் பெற்ற போது, அதன் மூத்த தலைவராக இருந்தவரும் இவர்தான். இந்த முகர்ஜி காங்கிரஸ் கட்சி போராட்டத்தை அறிவித்தவுடன், ஒரு அமைச்சர் என்ற முறையில் பிரிட்டிஷ் அதிபராக இருந்த சர்.ஜான். ஹெர்பர்ட்டுக்கு, அவர் கேட்காமலேயே கடிதம் எழுதினார்.



காங்கிரசின் சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து எழுதவில்லை; "காங்கிரஸ் பிரிட்டிஷ் எதிர்ப்பு இயக்கம், பல பகுதிகளுக்கும் பரவும் ஆபத்து இருக்கிறது. யுத்தம் நடக்கும் காலத்தில் இப்படி மக்கள் உணர்வுகளைத் தூண்டி விடுவது உள்நாட்டுப் பாதுகாப்பை சீர் குலைத்து விடும். எனவே போராட்டத்தை அடக்கியாக வேண்டும்." என்று கடிதம் எழுதியவர் தான் இந்த முகர்ஜி.

(ஆதாரம்; இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு *17.08.1992*, வரலாற்று ஆய்வாளர் சுமத்ருகா எழுதிய கட்டுரை)

அதே *1942*ஆம் ஆண்டு மத்திய பிரதேசம் மாநிலத்தில் பட்டேசுவர் எனும் ஊரில், *2002*ஆம் ஆண்டுகளில் பிரதமராக இருந்த வாஜ்பாய் அவரது சகோதரர் பிரேம் பிகார்லால் பாஜ்பாய் மற்றும் பலர் கலந்து கொண்டு, கைது செய்யப்பட்டனர்.

அப்போது வாஜ்பாயும், அவரது சகோதரரும், கலவரத்தில் ஈடுபட்டு தலைமறைவாக இருக்கும் நபர்களைப் பற்றிய தகவல்களையெல்லாம் அதிகாரிகளிடம் காட்டிக் கொடுத்து, அவர்கள் மட்டும் விடுதலை வாங்கிக் கொண்டனர்.

அப்போது வைஸ்ராய் கவுண்சில் உறுப்பினராக இருந்த கிரிஜா சங்கர் பாஜ்பாய் என்ற பார்ப்பனர் மூலம் இந்த பேரம் நடந்தது. இந்த உண்மையை வாஜ்பாயின் சகோதரர் மத்திய பிரதேச அரசாங்கமே நடத்தும் சந்தேஷ் என்ற பத்திரிக்கையில் எழுதி ஒப்புக்கொண்டார்.

பிரண்ட்லைன் ஆங்கிலப் பத்திரிக்கை வாஜ்பாய் பிரதமரானவுடன் இந்த கட்டுரையை வெளியிட, வாஜ்பாய் வழக்குத் தொடரப் போவதாகக் கூற, பிறகு அந்தப் பத்திரிக்கை செய்தியாளர்களே வாஜ்பாயைச் சந்தித்து, ஆதாரங்களைக் காட்டிய போது வாஜ்பாய் மவுனமாகி விட்டார். (பிளிட்ஸ் வார ஏடும்(*26.01.1974*) இத்தகவல்களை அம்பலப்படுத்தியது.

*1942*இல் காங்கிரஸார் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தை நடத்திய போது, ஆர்.எஸ்.எஸ். காரர்கள் பலர் பிரிட்டிஷ் இராணுவத்தில் சேர்ந்தார்கள். சிலர்

இராணுவத்திற்கு தேவையான இயந்திரங்களை வழ்ங்குவதற்கான ஒப்பந்தங்களை அரசுடன் செய்து கொண்டனர்.

ப்ரிட்டிஷார் உத்தரவை ஏற்று ஆர்.எஸ்.எஸ்.இல் செயல்பட்டு வந்த இராணுவப் பிரிவை ஆர்.எஸ்.எஸ். கலைத்தது. தங்களது சீருடைகளை மாற்றிக் கொண்டனர். இந்த நடவடிக்கைகளுக்காக பம்பாய் ஆளுநரிடமிருந்து நன்னடத்தை சான்றிதழ்களை ஆர்.எஸ்.எஸ். காரர்கள் பெற்றனர்.

சுதந்திரம் வந்த நாளான 1947 ஆகஸ்டு 15இல் பூனாவில் ஆர்.எஸ்.எஸ். காரர்கள் கூடி தங்களின் காவிக் கொடியை ஏற்றி இந்துக்களின் நாடாக மாற்ற சபதமேற்றனர். அந்தக் கூட்டத்தில் காந்தியை பிறகு சுட்டுக் கொன்ற கோட்சேயும் இருந்தார்.

மவுண்ட் பேட்டன், ஜின்னாவை சுட்டுக் கொல்ல வேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ். தலைமை தந்த கட்டளையை ஏற்று செயல்படுவதற்குத் தயாராக இருந்தவர்களும் அந்தக் கூட்டத்தில் இருந்தனர். "நள்ளிரவில் சுதந்திரம்" என்ற ஆய்வு நூல் இந்தத் தகவல்களைத் தெரிவிக்கிறது.

"பிரிட்டிஷார் நாட்டை விட்டு வெளியேற மாட்டார்கள். காங்கிரசாரிடம் ஆட்சியைத் தந்தால் இரண்டு மாதங்கள் கூட இவர்களால் சமாளிக்க முடியாது" என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வல்கர், தமது ஊழியர்களிடையே கடைசி வரை பேசி வந்தார்.

*(ஆதாரம்: டி.ஆர். கோபால் எழுதிய ஆர்.எஸ்.எஸ் பற்றிய ஆய்வு நூல்)*

தங்களுடைய விசுவாசத்தைப் பாராட்டி பிரிட்டிஷார் ஆர்.எஸ்.எஸ்.ஸிடம் தான் நாட்டை ஒப்படைத்து விட்டு வெளியேறப் போகிறார்கள் என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர்களே எதிர்பார்த்து பிரச்சாரம் செய்தனர்.

*(ஆதாரம்: ஹேமந்திரநாத் எழுதிய **The end of dream,An inside view of the RSS today**)*

காந்தி கொலையில் குற்றம் சாட்டப்பட்டு, பிறகு விடுதலை செய்யப்பட்ட சாவர்க்கரை, மிகச் சிறந்த விடுதலைப் போராட்ட வீரர் என்று அத்வானி நாடாளுமன்றத்தில் புகழ்ந்தார்.

அவரது பெயரை விமான நிலையம் ஒன்றுக்கு வாஜ்பாய் ஆட்சி சூட்டியுள்ளது. அவரைப் பற்றிய திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கும் ஒரு நிறுவனத்துக்கு அரசு ரூபாய் இரண்டு கோடி நிதியுதவி செய்திருப்பதாக ஆர்.எஸ்.எஸ்.ஸின் அதிகாரப்பூர்வமான தமிழ் வார ஏடான விஜயபாரதம் செய்தி வெளியிட்டிருக்கிறது.



இவர் துவக்கிய ஒரு தீவிரவாத அமைப்பு லண்டனில் இந்திய அலுவலகத்தில் பணி புரிந்த ஒரு பிரிட்டிஷ் அதிகாரியை கொலை செய்தது. அதில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சாவர்க்கர் இங்கிலாந்தி லிருந்து நாடு கடத்தப் பட்டு அந்தமான் தீவில், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு அடைக்கப்பட்டார்.

சிறைச்சாலையிலிருந்து செய்த தவறுகளுக்கு வருத்தம் தெரிவித்து, மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்ததோடு தன்னை விடுதலை செய்தால், பிரிட்டிஷ் ஆட்சி அமுல்படுத்த விடும்பும் மாண்டேகு சேம்ஸ்போர்டு சீர்திருத்தத்துக்கு முழு ஆதரவு தருவதாக உறுதி தந்தார்.

இந்த சீர் திருத்தத்தை, அப்போது காங்கிரஸ் எதிர்த்துக் கொண்டிருந்தது. மன்னிப்புக் கடிதத்தை பிரிட்டிஷ் ஆட்சி ஏற்றுக் கொண்டு இவரை விடுதலை செய்தது.

*(ஆதாரம்: பிரண்ட்லைன் பத்திரிக்கை 1995 ஏப்ரல் 7)*

தங்களின் இஸ்லாமிய எதிர்ப்பு, பார்ப்பன மேலாண்மைக்கு ஆதரவு என்ற கொள்கைகளை ஏற்க மறுத்த காரணத்தால், ஆர்.எஸ்.எஸ். ஐ சார்ந்த கோட்சே எனும் பார்ப்பனர் 1948 ஆம் ஆண்டு ஜனவரி 30இல் காந்தியைச் சுட்டுக் கொன்றார்.

இப்படி ஏராளமான சான்றுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இவர்கள் தான் இப்போது தேசப்பக்தர்களாகவும், சுதந்திரப் போராட்ட வீரர்களாகவும் சித்தரிக்கப்படுகிறார்கள். வரலாறுகளை மறைப்பதும், திரிப்பதும், சங்பரிவார்களின் கலாச்சாரமாகிவிட்டது.

**விடுதலை. இராஜேந்திரன்.,**



# விடுதலைப் போரின் மறுப்பக்கம் 1

இந்திய விடுதலைப் போரில் முஸ்லிம்கள் ஆற்றிய வீர தீர பராக்கிரமங்கள் ஏராளம், ஏராளம்.

முஸ்லிம்கள் இந்தியாவுக்குள் மட்டும் தான் விடுதலையை வாங்கித் தந்தார்கள் என்றில்லை. அல்லது முஸ்லிம்கள், ஆலிம்கள், முஸ்லிம் ஆட்சியாளர்கள் இந்திய விடுதலைப் போரில் தான் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள் என்றில்லை.

அவர்கள் இந்தியாவைப் போல் எத்தனையோ நாடுகளை அந்நியர்களின் ஆட்சியிலிருந்தும், அநியாயங்களிலிருந்தும் விடுவித்திருக்கிறார்கள்.

ரஷ்யாவை 1700கள் முதல் ஸார் என்ற மன்னர் பரம்பரையினர் தான் ஆண்டு கொண்டிருந்தனர். (1917 பிப்ரவரி மாதத்தில் ஏற்பட்ட புரட்சியில் தொழிலாளர்களின் கட்சி ரஷ்யாவை கைப்பற்றியது.)

இந்த ஸார் மன்னர்கள் ரஷ்யாவுக்குப் பக்கத்தில் உள்ள கவ்காஸ் பகுதியை அடக்கி தங்கள் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருந்தார்கள். அத்தனை அநியாயங்களையும் கட்டவிழ்த்து விட்டார்கள்.

இவர்களின் அநியாயங்களிலிருந்தும் ஆதிக்கத்திலிருந்தும் அந்தப் பகுதிகளை விடுவிக்கவும் அந்நிய சக்திகளுக்கு அடிமையாகாமல் அந்த மக்களை காப்பாற்றிடவும் 1822-23 முதல் ஒரு விடுதலைப் போரைத் தொடங்கினார்கள் இமாம் காசிமுல்லாஹ் ஷஹீத் அவர்கள்.

அவர்கள் இதில் தங்கள் உயிரைத் தந்த பின் இமாம் ஷாமில் அவர்கள் இந்தப் போரை 1859வரை தொடர்ந்தார்கள்.

இமாம் காசிமுல்லாஹ், இமாம் ஷாமில் ஆகியோர் ரஷ்யாவின் ஸார் மன்னர்களுக்கு எதிராக விடுதலைப் போரில் ஈடுப்பட்டிருந்த இந்தக் காலகட்டத்தில் இந்தியாவில் செய்யித் அஹ்மத் ஷஹீத் அவர்கள் ஆங்கிலேயர்களுக்கு எதிராகபோராடிக் கொண்டிருந்தார்கள்.

இளமையில் எதிர்ப்பட்ட இன்னல்களைத் தாண்டி ஆங்கிலேய ஆதிக்கத்திற்கெதிராக இங்குள்ள முஸ்லிம்களையும் ஓரிரு இந்து ராஜாக்களையும் அணி திரட்டி ஆயுதம் தாங்கிப் போராடினார்கள் செய்யித் அஹ்மத் ஷஹீத் அவர்கள்.

அவர்கள் 1831ல் ஷஹீதானார்கள். அவர்களைத் தொடர்ந்து அவர்களது தோழர்கள் அந்த விடுதலைப் போரை தொடர்ந்தார்கள். 1863ல் ஆங்கிலேயர்களுக்கெதிராக நடந்த போரில் ஆங்கிலேயர்களை வீழ்த்திக் காட்டினார்கள்.

தென்மேற்கு மலைப் பகுதிகளில் இப்படி ஆங்கிலேயர்கள் இந்தியாவில் தங்கள் ஆட்சியை நிலை நாட்டிய நாள் முதல் தொடர்ந்த விடுதலைப் போர்களின்

தொடர்ச்சியாகத்தான் 1947ல் நாம் விடுதலையடைந்தோம். இதே போல அல்ஜீரியா நாட்டை பிரஞ்சுக்காரர்கள் 1830ல் ஆக்கிரமித்து தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார்கள். பிரஞ்சு ஆதிக்கத்திற்கு எதிராக அங்கே ஒரு விடுதலைப் போரை தொடங்கி முன்னின்று நடத்தினார்கள் முஸ்லிம்கள். ஆலிம்கள் என்ற மார்க்க அறிஞர்களே அங்கே விடுதலைப் போர் நாயகர்கள்.

இந்த விடுதலைப் போரின் விளைவாக அல்ஜீரியா, பிரான்ஸ் நாட்டின் ஆதிக்கத்திலிருந்து 1962ஆம் ஆண்டு ஜூலை 3ஆம் நாள் விடுதலையடைந்தது. இந்த விடுதலைப் போரை முன்னின்று நடத்தியவர்கள் அஹ்மத் பென்பெல்லா அவர்கள். அதே போல புருணை நாடு 1888ல் ஆங்கிலேயர்களின் கைகளுக்கு சென்று நீண்ட நெடியதொரு காலம் விடுதலைப் போர் தொடர்ந்தது. அந்த விடுதலை இயக்கம் 1984 ஜனவரி முதல் நாள் இறுதி வெற்றியைப் பெற்றது.



ஆப்கானிஸ்தான் மண் விடுதலைப் போராட்டத்தில் சிந்திய இரத்தத்தால் தோய்ந்த மண். இங்கே ஆங்கிலேயர்கள் காலூன்ற எடுத்த அனைத்து முயற்சிகளையும் முன்னே நின்று முறியடித்தார்கள் முஸ்லிம்கள். ஆங்கிலேயர்களுடன் நடந்த இந்த நீண்ட விடுதலைப் போர் அறுதியான ஒரு முடிவை 1919ல் எட்டிற்று. முஸ்லிம்கள் முடிவாக வெற்றியைப் பெற்றார்கள்.

ஆனால் 1979 அவர்களை ரஷ்யா தன் பெரும் படைகளைக் கொண்டு ஆக்கிரமித்தது பத்து ஆண்டு காலம் கடுமையானதொரு ஜிஹாதை நடத்தி அவர்கள் 1989ல் ரஷ்ய வல்லரசை ஒரே யடியாக வீழ்த்திக் காட்டினார்கள். ரஷ்யா வீழ்ந்த போது அது உடைந்து நான்கு புதிய நாடுகள் தோன்றின.

1911ல் லிபியா இத்தாலிய ஆக்கிரமிப்புக்கு ஆளானாது. அதற்கெதிராக 20 ஆண்டுகள் தொடர்ந்து போராடினார்கள் முஸ்லிம்கள். சனூசிகளின் தலைமையில் முதலில் செய்யித் முஹம்மத் இத்ரீஸ் அவர்களும் கடைசி பத்து ஆண்டுகளில் உமர் முக்தார் அவர்களும் அந்த விடுதலைப் போரைத் தொடர்ந்தார்கள். இந்த விடுதலைப் போர் 1932ல் உமர் முக்தார் அவர்கள் வீர மரணம் அடையும் வரை தொடர்ந்தது.

பாலஸ்தீன், செச்ணியா ஆகிய நாடுகளில் இன்னும் இந்த நிமிடமும் இந்த விடு தலைப் போர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது.

பாலஸ்தீனில் யூதர்களின் குடியேற்றங்கள், கொலைகள், குண்டுகள், அடக்குமுறைகள் இவற்றிற்கெல்லாம் எதிராக பச்சிளம் குழந்தைகள், பெண்கள், ஆண்கள், வயோதிகர்கள், பாமரர்கள், பண்டிதர்கள், விஞ்ஞானிகள் என அத்தனைத் தரப்பினரும் தங்கள் இன்னுயிரை நித்தம் நித்தம் தந்து கொண்டிருக்கின்றனர்.

பாலஸ்தீனில் தங்கள் நிலங்களையும் வீடுகளையும் ஆக்கிரமித்துக் கொண்டவர் களிடமிருந்து அவற்றை மீட்க நித்தம், நித்தம் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

சுருங்கச் சொன்னால் முஸ்லிம்கள் விடுதலைப் போரில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாத நாளுமில்லை, பொழுதுமில்லை, உலகின் ஏதேனும்

ஒரு பகுதியில் ஒரு விடுதலைப் போரில் முஸ்லிம்கள் சதா சர்வ காலமும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டே இருக்கின்றார்கள். ஏன்? இஸ்லாம் என்பது ஒரு விடுதலை இயக்கம். அது மக்களை அந்நிய ஆதிக்கங்களிலிருந்து மட்டுமல்ல, அறியாமையின் ஆதிக்கத்திலிருந்தும், மௌடீகத்தின் ஆதிக்கத்திலிருந்தும், படைத்தவற்றை படைத்தவனாக ஆக்கி அடிமைப்படுவதிலிருந்தும் விடுவிக்க வந்த மார்க்கம். இந்த உலகில் அநியாயம் இருக்கும் வரை அது போராடிக்கொண்டே இருக்கும்.

இந்த விடுதலைப் போர்கள் இந்த உலக வாழ்க்கையில் சில சில்லறை சுகங்களை எதிர்பார்த்து நடத்தப்படுபவை அல்ல. இந்தப் போர்கள், அவற்றில் கொட்டப்படும் குருதிகள், தத்தம் செய்யப்படும் உயிர்கள், செல்வங்கள், உடமைகள் அனைத்திற்கும் மரணத்திற்கு பின்னால் வரும் வாழ்க்கையில் இறைவன் தரும் கூலியை மட்டுமே எதிர்ப்பார்க்கின்றார்கள் முஸ்லிம்கள். இதனால் தான் இந்த விடுதலைப் போர்களில் உயிரைத் தர முஸ்லிம்கள் தயங்குவதே இல்லை.

*பலஹீனமான ஆண்களையும், பெண்களையும் சிறு குழந்தைகளையும் பாதுகாப்பதற்காக, அல்லாஹ்வின் பாதையில் நீங்கள் போர் செய்யாதிருக்க காரணம் யாது? (அவர்களோ) எங்கள் இறைவனே! அக்கிரமக்காரர்கள் இருக்கும் இவ்வூரை விட்டு எங்களை வெளிப்படுத்துவாயாக! எங்களுக்காக உன்னிடமிருந்து ஓர் உதவியாளனையும் அளித்தருள்வாயாக என்று பிரார்த்தனை செய்கின்றார்கள். (அல்குர்ஆன் 5:72)*

அ நியாயத்திற்குள்ளாக்கப்பட்டவர்களுக்காக போராடுவதும், அவர்களை அநியாயங்களிலிருந்தும் அடிமைத் தளைகளிலிருந்தும் விடுவிப்பதற்காக போராடுவதும் முஸ்லிம்களின் கடமை. இதனால் தான் அவர்கள் அன்று முதல் இன்று வரை, இன்று முதல் இனி வரும் நாட்களில் தங்கள் உயிர் உடைமை ஆகியவற்றைத் தந்து போராட வேண்டும், போராடுவார்கள். இந்த விடுதலைப் போர் உத்தமர்களைப் பற்றிதான் அல்லாஹ் இப்படிக் கூறுகிறான்;

*இன்னும் அல்லாஹ்வின் பாதையில் கொல்லப்பட்டோரை இறந்து விட்டவர்கள் என்று கூறாதீர்கள். அப்படியல்ல! அவர்கள் உயிருள்ளவர்கள். எனினும் நீங்கள் (இதை) உணர்ந்து கொள்ள மாட்டீர்கள்.(அல்குர்ஆன் 2;154)*

ஆக, முஸ்லிம்கள் இறுதி நாள், இறப்பிற்குப் பின்னால் வரும் வாழ்க்கை இவற்றில் கவரப்பட்டே விடுதலைப் போர்களை இன்றளவும் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் உலகெங்கும்!

**M.G.M**



# நாகர்கோவிலில் தாருல் இஸ்லாம் அறக்கட்டளை நடத்திய கருத்தரங்கு







# விடுதலைப் போரின் மறுப்பக்கம் 2

மௌலவி இல்யாஸ் ரியாஜி அவர்களும், மௌலவி இக்பால் காஸிமி அவர்களும் சுட்டிக்காட்டியதைப் போல் ஆங்கிலேயன் இந்திய மண்ணில் அடியெடுத்து வைத்த நாள் முதலே அவர்களை எதிர்த்துப் போராடினார்கள் முஸ்லிம்கள், ஆலிம்கள், முஸ்லிம் மன்னர்கள். இந்தப் போர் ஆங்கிலேயர்களுக்கெதிராக ஏறத்தாழ 250 ஆண்டுகள் தொடர்ந்திருக்கின்றது.

ஆங்கிலேயர்கள், இந்தியாவையும், இந்தியர்களையும் பயன்படுத்தி தங்களை வளர்த்துக் கொண்டாலும், அவர்கள் அதற்காக ஒரு பெரும் விலையைத் தந்திட வேண்டியாதிருந்தது.

திப்பு சுல்தான் ஷஹீது அவர்களின் தந்தை ஹைதர் அலி மைசூர் ஆட்சிப் பொறுப்பில் 1761 முதல் 1782 வரை இருந்தார். அவர் தனது இறுதி நாட்களில் ஆங்கிலேயர்களுக்கு ஒரு பெரும் சவாலாக இருந்தார். அவர் ஆங்கிலேயர்களுக்கு ஏற்படுத்திய இழப்புகளுக்கு அளவேயில்லை. 'கன்னடத்தின் போர் வாள்' எனச் சிறப்பிக்கப்படும் ஹைதர் அலீ(ரஹ்) அவர்களுக்குப்பின் பொறுப்பேற்ற திப்பு சுல்தான் எடுத்த எடுப்பிலேயே அங்கிலேயர்களுக்கு சென்னைக் கடற்கரையில் பெரும் இழப்புகளை ஏற்படுத்தினார்.

திப்பு சுல்தான் அவர்களைத் தொடர்ந்து வடக்கில் செய்யித் அஹ்மத் ஷஹீத் அவர்கள் பெரும் சவாலாகத் திகழ்ந்தார்கள். 1857ல் சிப்பாய் கலகம் அவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்திற்று. தொடர்ந்து 1863ல் அம்லாவில் ஆங்கிலப்படைகள் முஜாஹிதீன்களிடத்தில் பெரும் உயிரிழப்பிற்கும் பொருள் இழப்பிற்கும் ஆளாகின. 1921ல் மாப்பிள்ளைமார் எழுச்சி இன்னும் பல இழப்புகளைத் தந்தது.

இப்படி இழப்புகளையே சந்தித்துக் கொண்டிருந்த ஆங்கிலேயர்கள் மேலும் கடுமையான இழப்புகளை முதல் உலகப் போரிலும் இரண்டாவது உலகப் போரிலும் சந்தித்தார்கள். இந்த இரண்டு உலகப் போரிலும் அவர்களுக்கு வெற்றிதான் என்றாலும் கடுமையான இழப்புகளைச் சந்தித்திட வேண்டியிருந்தது.

முதல் உலகப் போருக்குப் பின்னர் அவர்கள் தங்கள் விரிந்த சாம்ராஜ்யத்தின் பல பகுதிகளை இனி பராமரிக்க இயலாது என எண்ணினார்கள். இரண்டாவது உலகப் போரின் போது ஆங்கிலேயர்களின் பொருளாதாரம் சீரழிந்து போனது. எந்த அளவுக்கு என்றால் ஆங்கிலேயர்களின் மிகப் பெரிய பொருளாதார நிபுணர் ஜான் மேனாட்கீன்ஸ், "நாம் ஒரு ஏழை நாடு. நாம் அதற்குத் தகுந்தாற் போல் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று வானொலியில் ஆங்கில நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டார்.

இரண்டு உலகப் போரிலும் வெற்றிதான். ஆனால் அந்த வெற்றிக்கு அவர்கள் தந்த விலையை லாரி

காலின்ஸ், டொமினிக் லேப்பியர் என்ற வரலாற்று ஆசிரியர்கள் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்;

"வெற்றிக்கு அவர்கள் தந்த விலை அவர்களை அப்படியே அழித்து விட்டது. பிரிட்டனின் தொழில்கள் முடங்கிப் போய் விட்டன.கஜானா திவாலாகி விட்டது. அவர்களுடைய நாணயம்(**Currency**) மதிப்பிழந்தது. போரை நடத்துவதற்காக வாங்கிய கடனை திருப்பித் தந்திட இயலாமல் திணறினார்கள். ஆலைகளும் தொழிற்சாலைகளும் எங்கேனும் மூடப்பட்டன. இருபது லட்சம் ஆங்கிலேயர்கள் வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தனர். நிலக்கரி உற்பத்தி மிகவும் குறைந்து போனது. பிரிட்டனின் பகுதிகள் பல மணி நேரங்கள் மின்சாரமின்றி முடங்கிக் கிடந்தன."***(Source: Freedom at midnight 1997 Edition)***

இந்தச் சூழ்நிலையோடு பிரிட்டனில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் முக்கிய காரணம். அதுவரை ஆட்சி செய்துக் கொண்டிருந்த கன்சர்வேட்டிவ் கட்சி ஆட்சி இழந்து தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வந்தது.

இந்த கட்சி கொள்கையளவில் இந்தியாவிற்கு விடுதலை கொடுத்திட ஆதரவு அளித்த கட்சி. இத்தோடு நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் படையைப் பற்றிய அச்சமும் ஆங்கிலேயர்களுக்கு இருந்தது.

அது போல் முஸ்லிம்கள் அணிதிரட்டிக் கொண்டிருந்த இரகசியப் படைகள் பற்றிய செய்திகளும் ஆங்கிலேயர்களை மிரட்டிக் கொண்டிருந்தது. இந்த இரகசியப் படையைப் பற்றிய செய்தியை மௌலவி இக்பால் காஸிமி அவர்களின் கட்டுரையில் பார்க்கவும்.

இந்த அச்சத்தை அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் கிளெமண்ட் அட்லி, மௌண்ட் பேட்டன் அவர்களை இந்தியாவிற்கு வைஸ்ராயாக அனுப்புமுன் வெளிப்படுத்தவும் செய்தார்.

ஆங்கிலேய பிரதமர் அட்லி மௌண்ட் பேட்டன் அவர்களை அழைத்து இந்தியாவுக்கு விடுதலை வழங்கிட வேண்டும், அதனைச் செய்து முடிக்கும் பொறுப்பை நீங்கள் ஏற்க வேண்டும என்றார்.

மௌண்ட் பேட்டன் பிரிட்டனின் மிகப்பெரிய காலனி நாடாகிய இந்தியாவிற்கு விடுதலை வழங்குவது என்பது தனக்கு விருப்பமில்லாத ஒன்று என்பதைத் தன் பேச்சுக்களில் வெளிப்படுத்தினார். அதனை மறுத்தார் அட்லி. அட்லியின் கட்சி இந்தியாவிற்கு விடுதலை என்ற முடிவை எடுத்ததற்கான காரணம் என்ன என்பதை இப்படிக் குறிப்பிட்டார்;

"பிரிட்டன் நல்ல நேரமாகப் பார்த்து இந்தியாவை விட்டு வெளியேறி விடட்டும். அது வரலாற்றின் சக்திகள், ஆயுத தாங்கிய கிளர்ச்சி ஆகியவற்றால் துரத்தப்படுவதற்குள் (அது இந்தியாவை விட்டு வெளியேறட்டும்)."

ஆக விடுதலைக்கான காரணங்களை ஆராயும்போது அது கடைசியாக நடந்த சில போராட்டங்களின் விளைவுதான். எனவே 250 ஆண்டு கால விடுதலைப் போராட்ட வரலாற்றை வெறும் 25 ஆண்டு காலப் போராட்டமாக மாற்றிக் காட்டுவது, சுருக்கிக் காட்டுவது ஏற்புடைய செயல் அல்ல. இப்படிச் சொல்லி விடுவதால் நாம் நடத்திய உப்பு சத்தியா கிரகம், வெள்ளையனே வெளியேறு போன்ற இயக்கங்களுக்கு இருந்த பங்கைக் குறைத்து மதிப்பிட இயலாது. தேசிய இயக்கங்களின் அழுத்தங்களும் இன்றியமையாதது.

எனினும் விடுதலை இவற்றால் தான் வந்தது என்று கூறி விடுதலை வரலாற்றை இந்தப் பக்கங்களைக் கொண்டே நிரப்ப முனைவது நியாயமானதல்ல. அதற்கு முன்னாள் ஆங்கிலேயர்களை எதிர்த்து வந்தவர்களின் தியாகத்தை மறைப்பது மாண்புடைய செயலல்ல.

இன்று நாம் பாராட்டும் பல தலைவர்கள் 1857ல் நடைபெற்ற பல சிப்பாய்க் கலக நாட்களின் போது பிறக்கவே இல்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும். (முதல் விடுதலைப் போர் நமது கணக்குப்படி ஹைதர் அலீ அவர்களது காலத்திலேயே துவங்கி விட்டது.)

ஆங்கிலேயர்கள் நினைத்திருந்தால் விடுதலையைப் பிற்படுத்தி இருக்க முடியும். அதற்கான யுக்தி அவர்களிடம் இருக்கவே செய்தது. மௌண்ட் பேட்டனுக்கு முன்னால் இருந்த வைசிராய் வேவல் பிரதமர் ஆட்சியைப் பின்வருமாறு தான் அறிவிக்கச் சொன்னார்;

"நாங்கள் விரும்பும் போது, விரும்பும் விதத்தில், விரும்பும் வகையில், விரும்பும் முறையில், விரும்பும் நேரத்தில், எங்களுடைய நலனை கருத்தில் கொண்டு வெளியேறுவோம்."**(Freedom at Midnight)**

ஆனால் அட்லி அவர்களால் இதை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. ஆக விடுதலை என்பது அனைவரின் முயற்சியாலும் முகிழ்ந்தது. அதன் வரலாறு ஏறத்தாழ 300 வருடங்கள் நீளமானது. சில வரலாற்று ஆசிரியர்கள் இதனை 258 வருடங்கள் என்று துல்லியமாகக் கூறுகின்றனர்.

**M.G.M**

# விடுதலைப் போரின் மறுப்பக்கம் 3

விடுதலைப் போரில் இப்போது நாடாளுவோர் என்ன செய்துக் கொண்டிருந்தார்கள் என்பதை விடுதலை இராசேந்திரன் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

பா.ஜ.க. வின் வாஜ்பேயி அவர்களின் விடுதலைப் போர் நாட்களைப் பற்றி விடியல் ஜூன் 2002ல் விரிவாகக் குறிப்பிட்டிருந்தோம். (வாசகர்கள் விரிவான செய்திகளுக்கு அதைப் பார்க்கவும்)

பா.ஜ.க. வின் முன்னாள் துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி அவர்கள் விடுதலைப் போர் நாட்களில் என்ன செய்துக் கொண்டிருந்தார்கள் என்பதை அறிந்திட நாம் இயல்பாகவே ஆவல் நிறைந்தவர்களாக இருப்போம்.

நமது லால் கிருஷ்ணா அத்வானி அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் நூல் ஒன்று கடந்த காலங்களில் வெளி வந்தது. அந்த நூலின் பெயர்: **TODAYS IRON MAN LAL KRISHNA ADVANI pendagon paper back**.

இரும்பாகக் காலும், கையும் இருப்பது நல்லது தான். ஆனால் இதயமும் மூளையும் இவருக்கு அப்படி இருப்பது தான் இந்தியாவை ஊழல் மயமிக்க நாடாக ஆக்கியது.

நமது அதவானி அவர்கள் 1927ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 8ஆம் நாள் பாகிஸ்தானிலிருக்கும் கராச்சியில் பிறந்தார். அங்கு விடுதலைப் போர் நாட்களிலும், விடுதலை கிடைத்த போதும் அவர் ஆர்.எஸ்.எஸ். அமைப்பிலேயே தனது முழு கவனத்தையும் செலுத்தி இருக்கின்றனர் என்ற செய்தி மட்டுமே கிடைக்கின்றது.

தேசப்பிரிவினைக்குப் பின் இந்தியா வந்த அவர் ராஜஸ்தானில் ஆர்.எஸ்.எஸ்., ஜனசங் கட்சி ஆகியவற்றினைப் பற்றி மட்டுமே கவலைப் பட்டார்.


விடுதலைப் போரில் அவர் எங்கேயும் கலந்து கொண்டதாக வரலாறு இல்லை. பாகிஸ்தானில் வாழ்ந்த நாட்களிலும் இல்லை. இந்தியாவை கபளீகரமாக்கிய நாட்களிலும் இல்லை.

அடுத்தப்படியாக அத்வானி அவரே எழுதிய நூலின் மறுபதிப்பு ஒன்றை வெளியிட்டார். அந்த நூலின் பெயர்; **A PRISONERS SCRAB BOOK**(கைதியின் கிறுக்கல் புத்தகம்). அந்த நூலை ஆர்வத்தோடு வாங்கிப் படித்தோம். அவசர காலப் பிரகடனத்தின் போது(1975-1977) அவர் கைது செய்யப்பட்டது (26 ஜூன் 1975) பற்றிய செய்திகள் தாம் அதில் இருந்தன.

நெருக்கடி காலத்தில் சிறையில் இருந்த அவரும் அவருடைய இயக்கத்தைச் சார்ந்தவர்களும் கைது செய்த இந்திரா காந்தியின் 20 அம்ச திட்டத்தை ஆதரித்துத்தான் வெளியே வந்தார்கள் என்பது அப்போதைய செய்தி.

எனினும் அந்த நூலிலும் அவர் விடுதலைப் போரில் கலந்துக் கொண்டதாக ஒரு வரி கூட இல்லை. அந்த நூலில், ‘மிசா’ என்ற அவசர காலப் பிரகடனத்தைக் கொண்டு வந்த இந்திரா காந்தியை ஹிட்லரோடு ஒப்பிடும்






இவர் அந்த ஹிட்லரையும், நெருக்கடி கால பிரகடனத்தையும் விஞ்சும் "பொடா 2002" என்ற சட்டத்தைக் கொண்டு வந்துதான் தீருவேன் என ஒற்றைக் காலில் நின்றதை நாடே அறியும். இவரைத்தான் 'நவீன ஹிட்லர்' என்கிறது நாடு.

இவர் தாம் முரண்பாடுகளின் மொத்த உருவமாயிற்றே... யாரும் கேட்கவியலாது. எப்படியும் இவரும் விடுதலைப் போர் வீரராய் தன்னைக் காட்டிக் கொள்ள இயலாது. இவர் மே 4, 2002 அன்று இன்னொரு வேலையைச் செய்தார்.

அந்தமானிலுள்ள ஒரு விமானத் தளத்தின் பெயரை மாற்றினார். போர்ட் பிளேர் என்ற பெயரை மாற்றி வீர் சாவர்கர் விமானத் தளம் எனப் பெயர் சூட்டினார். அத்தோடு தன் திருவாய் மலர்ந்து ஒரு செய்தியை சொன்னார். சாவர்கர் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு செய்தது பகத்சிங் செய்ததற்கு இணையானது என்றார்.

வி.டி. சாவர்கர் இவர்களது இயக்கத்தின் முக்கிய தாளாளர்களில் ஒருவர். ஹிந்து சங்காதன் என்ற இயக்கத்தை தோற்றுவித்தவர். ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகள் தங்களது குரு எனக் கருதும் ஒருவர் இவர். தனது குரு விசுவாசத்தைக் காட்டத்தான் அவரது பெயரை அந்தமான் விமான நிலையத்திற்கு வைத்தார் அத்வானி. ஏனெனில் அவர் விடுதலைப் போரின் போது சிறைப்பட்டு அந்தமானில் இருந்தாராம்.

இந்நிலையில் **Frontline** ஆங்கில ஏடு சாவர்கரின் விடுதலைப் போர் வாழ்க்கையை ஆய்வு செய்து உண்மைகளை அம்பலப்படுத்திற்று. அந்த உண்மைகள் வருமாறு..

1904ல் சாவர்கர் 'அபிநவ் பாரத்' என்றொரு இயக்கத்தைத் தொடங்கினார். இதற்கு 'இளைய இந்தியா' என்று பொருள். இத்தாலியில் கியுசிபியு மாசினி என்பவர் அப்போது இப்படி ஒரு இயக்கத்தைத் தொடங்கி நடத்தி வந்தார்.

அதைப் பார்த்தே இப்படி ஒரு இயக்கத்தை தொடங்கியுள்ளார் சாவர்க்கர். பின்னர் இங்கிலாந்திலிருந்த போது 'விடுதலை இந்தியா இயக்கம்' என்றொன்றை தொடங்கினார். இதன் நோக்கம் ஆங்கில அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து எடுத்து வீசிடுவதேயாகும்.

இந்த விடுதலை இயக்கத்தில் இணைந்து ஆங்கிலேயர்களுக்கெதிராக புனிதப் போர் புரிந்திட வேண்டும் எனக் கர்ஜித்தார். இவருடைய கர்ஜனைகளால் கவரப்பட்டு இளைஞர்கள் பலர் இந்த இயக்கத்தில் இணைந்தார்கள்.

இவரது வன்முறையைத் தூண்டும் போர்ப் பிரகடனத்தை உண்மை என நம்பிய இளைஞன் ஒருவன் லண்டன் இந்திய அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரைக் கொலை செய்துவிட்டான். இதன் எதிரொலியாக இவர் கைது செய்யப்பட்டு விட்டார்.

ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு அந்தமான் சிறைக்கு அனுப்பப்பட்டார். 1910ல் அந்தமான் வந்து சேர்ந்தார் இந்த வீராதி வீரர். 1911லேயே கருணை மனு போட்டார் ஆங்கிலேயர்களிடம்.

பின்னர் ஆங்கில அதிகாரி ரெஜிநால்டு கிராடோக்ஸ் என்பவர் 1913ல் அந்தமான் வந்தார். அவரிடமும் கருணை மனு கொடுத்து மன்றாடினார். அந்த மனுவில் இப்படிக் குறிப்பிட்டார்.

"பிரிட்டிஷ் அரசு தன்னுடைய கருணையின், கிருபையின் ஒரு பகுதியாக என்னை சிறையிலிருந்து விடுதலை செய்யுமேயானால் நான் அரசியல் சாசன முன்னேற்றத்திற்கும் பிரிட்டிஷ் அரசிற்கும் ஆழமான விசுவாசமுடையவனாக இருப்பேன்.

பிரிட்டீஷ் அரசிற்கு விசுவாசம் தான் இந்த முன்னேற்றத்திற்கு முதல் நிபந்தனையாகும். இப்படி நான் விசுவாசமாக மாறி விடுவதால் என்னை தங்கள் வழிகாட்டியாகப் பார்க்கும் வழிகெட்டுப்போன இந்தியாவில் உள்ள இளைஞர்களும் வெளிநாடுகளில் வாழும் இளைஞர்களும் என்னுடைய வழிக்கு (ஆங்கிலேயர்களுக்கு விசுவாசம் என்ற வழிக்கு) வந்து விடுவார்கள். சக்தி மிக்கவர்கள் தான் கருணைக் காட்ட முடியும். ஆகவே தறிகெட்டுப் போன மகனாகிய நான் பெற்றோரைப் போன்ற இந்த அரசை விட்டால் எங்கே சென்று புகலிடம் தேடிட முடியும்?" **(R.K.MAJUNDAR PANEL SETTLEMENT IN ANDAMAN, pages 211-214)**

சாவர்க்கரின் இந்த கருணை மனுவைப் படிப்பவர்கள் பாவம் செய்த ஒருவன் இறைவனிடம் மன்றாடுவது போல் அவர் மன்றாடுவதைக் காண்பான். இத்துனைக்கும் வழங்கப்பட்டது தூக்குத் தண்டனை அல்ல ஆயுள் தண்டனை தான்.

வாக்களித்தபடியே ஆங்கிலேயர்களுக்கு விசுவாசமாக இருந்தார். 1939ல் அக்டோபரில் அவர் வின் விண்குரோவ் என்ற ஆங்கிலேயர்களின் பிரதிநிதியை சந்தித்த போது இப்படிக் குறிப்பிட்டார்;

"இப்போது நமது இலக்குகள் (உறவுகள்)மிகவும் இறுக்கமாகிவிட்டன. இதில் முக்கியமானது என்னவென்றால் இந்துயிஸமும், (மகா) பிரிட்டனும் நண்பர்களாக இருக்க வேண்டும் என்பதே! பழையப் பகை இனி ஒருப்போதும் தேவையில்லை. இந்து மகா சபை இரண்டாவது உலகப் போரின் முடிவில் இந்தியாவிற்கு டாமினியன் அந்தஸ்தை ஒத்துக் கொள்ளும்" (அதாவது ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கீழ் இந்தியர்களின் ஆட்சி என்பதை ஏற்றுக் கொள்ளும்). **(MARZIA CASOLARI'S ESSAY ON HINDUTVA'S FOREIGN TIE UPS IN THE 1930.: Frontline aug 2, 2002)**

சாவர்க்கர் இதே விசுவாசத்தை இன்னும் தொடர்ந்தார். 1942ல் காந்தியடிகள் 'வெள்ளையனே வெளியேறு' என்றொரு இயக்கத்தைத் தொடங்கினார்கள். அதில் ஒரு பகுதியாக ஆங்கிலேயர்களின் அரசில் பணியாற்றுபவர்கள் அந்தப் பணிகளிலிருந்து வெளியேற வேண்டும் என்றுக் கோரினார்.

தன்னுடைய இந்து சங்காதன் இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கு இதனை எதிர்த்து சாவர்க்கர் இப்படி ஒரு அறிக்கை விட்டார்;

"நான் இந்து சங்காதன் இயக்கத்தைச் சார்ந்த அனைவருக்கும் ஓர் உறுதியான ஆணையைப் பிறப்பிக்கிறேன். ஆங்கில அரசுப் பணிகளிலும், பொருப்புகளிலும் பலன் பயக்கும் நிலைகளிலும் இருப்பவர்கள் அந்தப் பதவிலேயே தொடர்ந்து இருந்து தங்கள் கடமைகளை முறையாக நிறைவேற்றிட வேண்டும்." **(A.G.NOORANI: THE COLLABARATORS. Frontline Aug 2, 2002)**

இப்படி மன்னிப்பும் கருணையும் கேட்டு தப்பித்து பின்னர் அங்கில விசுவாசத்தை அறிவிப்புகள் வழியாக அடிமட்டத் தொண்டன் வரைக்கும் கொண்டு சென்று நடத்திக் காட்டியவர்கள் போடுகின்றார்கள் இன்று தேசபக்த வேஷம், வெட்கமில்லாமல்!

இதற்கு நேர் மாறாக ஒரு வரலாறு முஸ்லிம்களின் விடுதலைப் போர் பொன்னேட்டில்.

ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஆலிம்கள் நடத்திய ஆயுதந்தாங்கிய விடுதலைப் போர் வீர வரலாற்றில் பல ஆலிம்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களின் சிலர்: மௌலானா யஹ்யா அலீ(ரஹ்), மௌலானா முஹம்மத் ஜாஃபர், மௌலானா முஹம்மத் ஷாஃபி லாகூரி, மௌலானா அஹ்மதுல்லாஹ் அசிமாபாதி, மௌலவி அப்துர் ரஹீம் ஸாதிக்பூரி...... இப்படி நீண்ட பட்டியல்.

இதில் முதல் மூவருக்கும் மரண தண்டனை வழங்கினான் ஆங்கில நீதிபதி. அவன் தீர்ப்பில் இப்படிக் கூறினான்;

"நீங்கள் மூவரும் உயிர் பிரியும் வரை தூக்கிலடப்படுவீர்கள். உங்கள் சொத்துக்கள் எல்லாம் பறிமுதல் செய்யப்படும். உங்கள் உடல்கள் உங்கள் சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது. நீங்கள் அவமானம் அடையும் வளாகத்திற்குள்ளேயே புதைக்கப்படுவீர்கள்."

தூக்கிலிடும் நாளை எதிர்பார்த்து சிறையில் இருந்தனர் இந்த மௌலவிகள். எந்தக் கவலையும் அவர்கள் முகத்தில் இல்லை. மரணத்தை இறைவழியில் உயிர் துறக்க கிடைத்த மாபெரும் வாய்ப்பு எனக் கருதினார்கள் இந்த ஆலிம்கள்.

விடுதலைப் போரில் ஆங்கிலேயர்களின் அடிமைத்தனத்திற்கு எதிரான போரில் வீரமரணம் அல்லாஹ்விடம் சொர்க்கத்தைப் பெற்றுத் தருவது என்ற மகிழ்ச்சிதான் அவர்களுக்கு.

இந்நிலையில் மரணத்தைச் சந்திக்க இருக்கும் அவர்களை வேடிக்கை பார்க்க சில ஆங்கிலப் பெண்களும் ஆண்களும் வந்தனர் சிறைக்குள். நாளை தூக்கில் தொங்க இருப்பவர்களின் முகம் இன்று எப்படி இருக்கும்? என்று பார்த்து மகிழ

வந்த வஞ்சகம் நெஞ்சம் உடையவர்கள் அவர்கள். அடுத்தவர்களின் அவலங்களில் மனம் மகிழும் மனிதப் பிசாசுகள் ஆலிம்களின் மரணத்தை காண வந்த அவர்கள் சிறையில் முற்றிலும் மாற்றமானொதொரு சூழ்நிலையைக் கண்டார்கள்.

மரண தண்டனை விதிக்கப்பெற்ற அந்த மௌலவிகள் மனம் கலங்க வில்லை. மகிழ்ச்சியின் சாயலில் அவர்களின் முகங்கள் இருந்தன. வேடிக்கை பார்க்க வந்தவர்கள் வெந்து போய் கேட்டார்கள்: "மரண தண்டனையை எதிர் நோக்கும் நீங்கள் எப்படி மகிழ்ச்சியில் திளைக்கின்றீர்கள்?"

அடிமைத்தளைகளுக்கு எதிராக போராடி அதில் மரணத்தைச் சந்திப்பவர்களுக்குக் கிடைக்கும் மறுமைப் பேறுகளைச் சொன்னார்கள் ஆலிம்கள்.

இந்த ஆங்கில ஆண்களுக்கு பெண்களும் திரும்பி வந்து ஆங்கில அதிகாரியிடம் நடந்ததைக் கூறினார்கள். மரணம் என்றால் மறுமையில் நற்கூலியா? அதனால் மகிழ்ச்சியா? நிச்சயமாக அந்தக் கூலியையும் மகிழ்ச்சியையும் உங்களுக்குக் கிடைக்க விட மாட்டோம். தீர்ப்பை மாற்றுவோம் என மாற்றினார்கள். மாற்றிய தீர்ப்பு இப்படி வந்தது:

"நீங்கள் மூவரும் மரண தண்டனையைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றீர்கள். அதனைக் கொண்டு தியாகிகளாக மாறிடப் பார்க்கின்றீர்கள். நீங்கள் அவ்வளவு மகிழ்ச்சியோடு பார்க்கும் மரண தண்டனையை எங்கள் அரசு உங்களுக்கு வழங்கப்போவதில்லை. உங்களுக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை மாற்றப் படுகின்றது. நீங்கள் நாடு கடத்தப்படுவீர்கள். அந்த இடத்திலேயே உங்கள் ஆயுள் முடியும் வரை வாழ்வீர்கள்."

இந்த ஆலிம்களும், அவர்களுடன் மௌலானா அஹ்மதுல்லாஹ் அசீமாபாதி, மௌலவி அப்துர் ரஹீம் ஸாதிக்பூரி ஆகியோரும் இன்னும் பல ஆலிம்களும் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டு அந்தமானுக்கு அனுப்பப்பட்டார்கள். இவர்களில் மௌலானா யஹ்யா அலீ அவர்களும், மௌலவி அஹ்மதுல்லாஹ் அவர்களும் அந்தமானிலேயே இறந்தார்கள்.**(Muslim in India by Abul Hasan Ali Nadwi, Chapter: Role of Muslims in the Struggle for Freedom)**

விடுதலைப் போரில் மரணத்தைக் கண்டு மகிழ்ந்த ஆலிம்கள் எங்கே? ஆயுள் தண்டனையைக் கண்டே ஆயுள் பரியந்தமும் அடிமையாக இருப்பேன் என எழுதித் தந்த இந்த மனிதப் பதர்கள் எங்கே? இப்படி விடுதலைப் போரின் உயிரைத் தந்து விடுதலைப் பெற்றவர்களின் வாழ்வும் வரலாறும் மறைக்கப்பட்டு விட்டது. என்னதான் மறைத்தாலும் உணமை ஊரறிய வந்து விடும். இப்படிப் போராடியவர்கள் இன்று அந்நியர்களாகவும், தீவிரவாதிகளாகவும் முத்திரைக் குத்தப்பட்டு நசுக்கப்படுகின்றார்கள். நிட்சயமாக அவர்களைக் கண்டு இறைவன் மகிழ்வான். அவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடம் நற்கூலி உண்டு.

**M.G.M**


# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு - ரூ.30

கசாப்-ஐ ரகசியமாக துக்கிலிட்டது ஏன்? - ரூ.30



# விடுதலையடைந்த இந்தியாவில் முஸ்லிம்கள்

ஒவ்வொரு முறை வகுப்புக் கலவரம் நிகழும் போதும் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. உண்மையான காரணம், முஸ்லிம்களுக்கெதிராக ஊட்டப்பட்டு வரும் வகுப்பு வெறித்தனமே! இதை எல்லோரும் மறைத்து விடுகின்றனர். வகுப்பு கலவரங்கள் நிகழும் போது அரசு தனது முகத்தைக் காப்பாற்றிக் கொள்ள ஏதேதோ சொல்லி சமாளிக்கின்றது.

உண்மையான காரணத்தைக் கண்டுபிடித்து அதனை அகற்றி, வகுப்புக் கலவரங்களை நிரந்தரமாக நிறுத்திட முனைவதில்லை. அரசின் மெத்தனத்தால் வகுப்புக் கலவரங்கள் நாட்டை வேட்டைக் காடாக்கி விட்டன. முஸ்லிம்கள் இந்தியாவில் எல்லா வளங்களையும் அளவுக் கதிகமாகவே பெற்று உல்லாசமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்றொரு தவறான பிரச்சாரம் இடை விடாமல் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த முழுப் பொய்யின் அடிப்படையில் முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு வெறுப்பு, திட்டமிட்டு வளர்க்கப்பட்டு வருகின்றது. முஸ்லிம்கள் ஏற்கனவே வளமாக வாழ்ந்து கொண்டிருக்கும் போது, அரசும் ஓயாமல் சலுகைகளை அள்ளிக்கொட்டிக் கொண்டே இருக்கின்றது. இந்த ஓயா சலுகையினால், முஸ்லிம்கள் இன்னும் ஒய்யாரமாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இப்படியெல்லாம் ஜமுக்காளத்தில் வடி கட்டின பொய்களை தங்கள் பிரச்சாரப் பீரங்கிகளைக் கொண்டு முழங்கி வருகின்றார்கள். ஆனால் உண்மை நிலை என்ன?

இன்று வரை கிடைத்துள்ள தகவல்களின் படி, இந்த நாட்டில் வசதிமிக்க முதல் 50 தொழில திபர்களில் ஒருவர் கூட முஸ்லிம் இல்லை. இந்த நாட்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்ந்து கொண்டிருப்போர்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள்.

கல்வித் துறையிலும், கல்வியிலும் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டிருப்பவர்கள் முஸ்லிம்கள். வேலைவாய்ப்புகளில் அவர்களுக்கு இன்று வரை உரிய பங்கு வழங்கப்படவில்லை. முஸ்லிம்களின் பொருளாதார நிலையை சீர்படுத்த அரசு மேற்கொண்ட அத்தனை திட்டங்களும் தோல்வியடைந்துள்ளது.

இந்த நாட்டில் குறைந்த அளவு வருமானம் உள்ளவர்களுக்கும், நடுத்தர வருமானமுள்ள மக்களுக்கும் அரசு வீடுகளைக் கட்டித் தருகின்றது. இப்படிக் கட்டித் தரப்படும் வீடுகளில் 2.86 சதவிகிதம் தான் முஸ்லிம்களுக்குக் கிடைக்கின்றது. ஆனால் இந்நாட்டு மக்கள் தொகையில் 21 சதவிகிதம் முஸ்லிம்கள். நியாய விலைக் கடைகளுக்காக அரசு விநியோகிக்கும் மொத்த அனுமதியில் 6.9 சதவிகிதம் தான் முஸ்லிம்களுக்குக் கிடைத்துள்ளது.

சமுதாயத்தில் நலிவுற்ற மக்களுக்காக நிறுவப்பட்ட கதர் மற்றும் கிராமத் தொழில்

குழுவும் முஸ்லிம்களைப் பெருமளவில் புறக்கணித்தே வருகின்றது. இந்நிறுவனத்தால் பயனடைபவர்களில், உதவி வழங்கப்படும் தொழில்களில் 2.76 சதவிகிதம் மட்டுமே முஸ்லிம்கள்.

கூட்டுறவுத் துறையிலும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இதில் முஸ்லிம்களின் பங்கு ஒரே ஒரு சதவிகிதம் தான்.

வேலை வாய்ப்புகளில் முஸ்லிம்களின் நிலை இன்னும் அகல பாதாளத்தில் உள்ளது. நாட்டில் உள்ள தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களில் 1 சதவிகிதம் குறைவாகவே முஸ்லிம்கள் உள்ளனர். அரசு நிறுவனங்களைப் பொருத்தவரை 3 சதவிகிதத்தினரே முஸ்லிம்கள். காவல் துறையில் 1 சதவிகித்திற்கும் குறைவாகவே உள்ளனர்.

உண்மை நிலை இவ்வாறிருக்க முஸ்லிம்கள் எல்லாம் பெற்று பெரு வாழ்வு வாழ்கின்றார்கள். அதிகமான சலுகைகளால் அலாதியானதொரு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள் எனப் பேசுவது ஆதாரங்கள் இல்லாத பொய்.

இதே போல் தான், முஸ்லிம்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதில்லை என நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. ஆனால் புள்ளி விவரங்கள் இதற்கு நேர்மாறாக இருக்கின்றன.

டாக்டர் ரஃபீக் ஜக்கரிய்யா மராட்டிய மாநிலத்தில் சுகாதார அமைச்சராக இருந்த போது, குடும்பக் கட்டுப்பாடு புள்ளிவிவரங்களை முஸ்லிம்கள், இந்துக்கள் என்ற அடிப்படையில் சேகரிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

ஆனால் மத்திய அரசு வகுப்பு வாரியாகப் புள்ளி விவரங்களை சேகரிக்கக் கூடாது என்று உத்தரவிட்டது. ஆனால் டாக்டர் ரஃபீக் ஜக்கரிய்யா அவர்கள் வகுப்புவாரியாகப் புள்ளி விவரங்களைச் சேகரிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

வேறு வழியில்லாமல் மத்திய அரசு அவரது திட்டத்திற்கு அனுமதி வழங்கிற்று. எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் முஸ்லிம்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்வதை தவிர்த்துக் கொள்ளவில்லை என்ற உண்மையைத் திட்டவட்டமாகத் தெளிவாக்கிற்று.

ஆகவே, முஸ்லிம்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதில்லை. அவர்கள் இந்துக்களை எண்ணிக்கையில் விஞ்சி விடுவார்கள் என்ற இந்துக்களின் கூப்பாடு முட்டாள் தனமானது.

அடிக்கடி, முஸ்லிம்கள் மீது இன்னொரு குற்றச்சாட்டும் இட்டுக்கட்டப்பட்டு வருகின்றது. இந்தியாவில் வாழும் முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்குத்தான் விசுவாசமாக இருப்பார்கள். என்பதே அந்தக் குற்றச்சாட்டு.

இதுவரை நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான யுத்தங்களில், இந்தியாவின் வெற்றிக்காக முஸ்லிம் இராணுவ வீரர்கள் செய்துக் காட்டிய சாகசங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

ஒவ்வொரு போரின் போதும் இந்துக்களுக்குச் சரி சமமாக சில நேரங்களில் இந்துக்களை விட அதிகமான வீர விருதுகளை முஸ்லிம்களே பெற்றிருக்கிறார்கள்.

ஒரு முறை நான் பால்தாக்கரேயைப் பேட்டி கண்ட போது முஸ்லிம்கள் தங்கள் இந்திய விசுவாசத்தை நிரூபிக்க அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன். இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாமலேயே நழுவி விட்டார் பால்தக்கரே!

ஒரு நாட்டு மக்கள், அந்த நாட்டோடு தாங்கள் விசுவாசமாக இருக்கின்றோம் என்று நிரூபிப்பது மிகவும் கடினம். ஆனால் அந்த நாட்டிற்கு ஆபத்து வருகின்ற போது, பகைவர்கள் போர் தொடுக்கின்ற போது, அந்த நாட்டிற்காக உயிரைத் தரவும் தயாராக இருக்கின்றார்கள் என்பது அவர்களின் இராஜ விசுவாசத்தைத் தெளிவாகவே உணர்த்தும்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது, பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும், யுத்தம் வந்த போதெல்லாம் முஸ்லிம்கள் பெருமளவில் தங்கள் உயிரைத் தந்திருக்கின்றார்கள். பாகிஸ்தான் மீது இந்தியா பெற்ற வெற்றியின் மீது முஸ்லிம்களின் பங்கு மகத்தானது.

இந்தியாவுக்கு விசுவாசம் என்ற தேர்வில் அவர்கள் அடிக்கடி தேறியே இருக்கின்றார்கள்.

எந்த ஒரு சீக்கியரோ, அல்லது வேறு வகுப்பாரோ தங்களது நாட்டுப் பற்றை நிரூபிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுவதில்லை. அளவுக்கதிகமாக நிரூபணங்களைத் தந்து விட்ட முஸ்லிம்களை மட்டும் அப்படிக் கேட்பது சிலரது அரசியல்.

இது போன்ற பொய்ப் பிரச்சாரங்களின் முனையை முறிக்க எல்லோரும் முன் வர வேண்டும்.

**- விர் சங்வி**

# பசுவின் பெயரால் படுகொலைகள்

நம் நாட்டில் 26 பசு படுகொலைகள் ஒரே நாளில் நடந்தன. ஜூன் 18 ஆம் நாள் கொலை செய்யப்பட்டவர்கள் அத்துனை பேரும் முஸ்லிம்கள். அத்துனை பேரையும் கூட்டமாக வந்து பட்டப் பகலில் அடித்து கொலை செய்தார்கள். காரணமாக பசுவையும் மாட்டையும் காட்டினார்கள்.

இதனை இந்துத்துவ பாஸிஸ்டுகள் புகழ்ந்தார்கள். கொலை செய்தவர்கள் உண்மையான இந்துக்கள் என்றார்கள். பாரதீய ஜனதா கட்சியினர் இந்தப் படுகொலைகளைக் கண்டிக்கவில்லை என்று மட்டும் ஆதங்கப்பட்டுக் கொண்டன ஊடகங்கள். அத்தோடு நிறுத்திக் கொண்டன.

அதாவது கொலை செய்தவர்களின் பரிவாரத்தைச் சார்ந்தவர்களே கொலை செய்தவர்களை கண்டிக்க வேண்டுமாம். இன்னும் சில காட்சி ஊடகங்கள் பிரதமர் மோடி கண்டுக்கொள்ளவில்லை என்றன. பாரதீய ஜனதா கட்சியினைச் சார்ந்த ஒருவர் கொலை செய்தவர்களைப் பாராட்டினார்.

2002 ஆம் ஆண்டு ஒரு பெரும் இனப்படுகொலையை குஜராத்தில் தலைமை ஏற்று நடத்தியவர் தான் இன்றைய பிரதமர் மோடி. அவர்கள் கண்டிக்க வேண்டுமாம். என்ன எகத்தாளம் நமது ஊடகங்களுக்கு? அன்று நடந்தது என்ன? படுகொலையிலிருந்து தப்பித்த சாமியுத்தீன் கூறுகின்றார்;


“நான் என் பக்கத்து வீட்டுக்காரர் ஹஸன் உடன் என்னுடைய மூன்று மாடுகளுக்கும், தீனி வாங்கி வரச் சென்றேன். வழியில் சிலர் காசிம் என்பவரை அடித்துக் கொண்டிருப்பதைக் கண்டேன். நான் அவர்களிடம் ஏன் இவரை அடிக்கிறீர்கள் எனக் கேட்டேன்!

அவர்களில் ஒரு பிரிவினனர் எனக்கெதிராகத் திரும்பி விட்டார்கள். அவர்கள் என் பக்கம் திரும்பியவுடன் ஹஸன் தப்பித்து ஓடிவிட்டார்.

உடனேயே 30 முதல் 40 பேர் ஒன்றாகக் கூடி விட்டார்கள். காசிமை அடித்துத் துவைத்தார்கள். அவர் மயங்கி கீழே விழுந்தார். அவரை தர தரவென இழுத்துச் சென்றார்கள். இப்படி ஒரு கிலோ மீட்டர் தூரம் இழுத்தே சென்றார்கள். காசிமுடைய உடலெல்லாம் ரணமானது. உடலின் எல்லாப் பகுதியிலிருந்தும் இரத்தம் சிந்திடத் தொடங்கியது.

இப்படி இரத்தம் உடலெங்கும் ஓடிக் கொண்டிருந்தது. ஆனாலும் அவர்கள் காசிமை அடித்துக் கொண்டே இருந்தார்கள். இழுத்து சென்றுக் கொண்டே இருந்தார்கள். அது கற்கள் நிறைந்த கரடுமுரடான சாலை. அதனால் அவரது உடல் கிழிந்து கொண்டே வந்தது.

காசிமை “பாஜிஹிரா குர்தி” (**Bajhera Khurd**)



என்ற கோவிலுக்கு முன்னால் தூக்கி வீசினார்கள். காசிம் அங்கே குற்றுயிரும், குறை உயிருமாகக் கிடந்தார். அங்கேயே அவர் உயிரும் பிரிந்தது.

நான் அவர்களிடம் உண்மையைச் சொல்ல முயற்சி செய்தேன். அவர்கள் எதையும் கேட்கத் தயாராக இல்லை. நீங்கள் பசுக்களை அறுக்கின்றீர்கள் என்று உரக்கக் கத்திக் கொண்டே என்னைத் தாக்கிக் கொண்டே இருந்தார்கள்.

அவர்களிடம், நான் ஒரு விவசாயி என்றேன். இங்கே எங்கேயும் பசுக்கள் இல்லையே. அதன் பின் ஏன் பசுக்களை அறுக்கின்றீர்கள் என்கின்றீர்கள்? எனக் கேட்டேன். (உண்மையில் அங்கு பசுக்கள் எதுவுமில்லை. இருந்தாலும், அவர்கள் என்னைத் தாக்கிக் கொண்டே இருந்தார்கள்.

நான் சொன்னது எதையும் அவர்கள் கேட்பதற்கு தயாராக இல்லை. என்னுடைய கால்களையும் கைகளையும் உடைத்துப் போட்டு விட்டனர். நான் மயக்க மடைந்தேன். என்னோடு வந்த ஹஸன் ஓடித் தப்பித்துக் கொண்டார்.



இறந்து விட்டேன் என்று எண்ணி என்னை அப்படியே போட்டு விட்டுப் போய் விட்டார்கள். அங்கே மறைந்திருந்து எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பலர் மெல்ல மெல்ல வந்து என்னை தூக்கிக் கொண்டு சென்றிருக்கின்றார்கள். என் உயிர் பிரியவில்லை. என்பதால் என்னை மருத்துவ மனையில் சேர்த்திருக்கின்றார்கள்."

**காவல் துறை**

இதில் காவல் துறையினர் செய்த துரோகம் என்னால் பொறுத்துக் கொள்ளவே இயலவில்லை. காவல் துறையினர் அக்கம் பக்கத்தினரிடம் நானும் காசிமும் ஒரு மோட்டார் சைக்கிளில் அடிப்பட்டுக் கீழே வீழ்ந்து விட்டோம் என எழுதித் தரச் சொல்லிக் கட்டாயப்படுத்தி இருக்கின்றார்கள்.

அவர்கள் எழுதித்தர மாட்டோம் எனக் கூறி இருக்கின்றார்கள். எழுதித் தரவில்லையென்றால் அவர்களையும் பசுவை அறுத்தார்கள் எனக்கூறி வழக்கில் சேர்த்து விடுவோம் என மிரட்டி இருக்கின்றார்கள். அதன் பின் காவல்துறையினர் எழுதியதில் அந்த அப்பாவி மக்கள் கையெழுத்துப் போட்டிருக்கின்றார்கள்.

உண்மையைச் சொன்னால் அங்கே எந்த மோட்டார் பைக்கும் வரவில்லை. இன்னும் சொன்னால் அங்கே மோட்டார் பைக் அளவில் பாதையும் இல்லை.

ஆனால் ஊடகங்கள் இந்த விவகாரத்தைப் பெரியதாக ஆக்கிடவே காவல்துறையினர் தங்கள் மோட்டார் சைக்கிள் கதையைக் கைவிட வேண்டியதாயிற்று. பின்னர் நாங்கள் உண்மையிலேயே பசுக்களை அறுத்தோம் என்றொரு கதையைக் கட்டினார்கள். இந்தப் பொய்க்கு சாட்சியாக இரண்டுப் பேர்களை தயார் செய்தார்கள். ஒருவர் யாஸீன்.

இன்னொருவர் தமூர்.

இவர்களிடம் நாங்கள் உண்மையிலேயே பசுவை அறுத்தோம் என எழுதி, கையெழுத்துப் போடச் சொன்னார்கள். இவர்கள் இருவருமே மறுத்து விட்டார்கள். ஆனால் கையெழுத்துப் போடவில்லை என்றால் உங்களையும் சிறையில் போடுவோம் என மிரட்டினார்கள்."

இப்படிக் கோரமாகக் காயம்பட்ட சமீயுத்தீன், "என்னால், என்னைத் தாக்கிய எல்லோரையும் அடையாளம் காட்ட முடியும்" எனக் கூறுகின்றார்.

காவல்துறையினர், மொத்தம் 11 பேர்தான் இந்த படுகொலைகளைச் செய்தார்கள் (காசிமின் கொலையையும்), சமீயுத்தீனை தாக்கினார்கள். எனக் கூறுகின்றது. இதில் ஐந்து பேரை கைது செய்து விட்டதாக ஊடகங்களுக்குச் செய்திகளை விளம்பியுள்ளது.

கைது செய்யப்பட்ட அனைவரும் பிணையில் விடப்பட்டு விட்டார்கள்.

**அரசின் பொதுவான நடவடிக்கைகள்**

வட இந்தியாவில் பசுவின் பெயரால் 12 மணி நேரத்திற்கு ஒரு முஸ்லிம் கொலை செய்யப்படுகின்றான்.

அத்தனையும் பொதுமக்கள் கூட்டாகச் சேர்ந்து கொலை செய்யப்படுவதாகக் காட்டப்படுகின்றது. இது உண்மையல்ல. இந்துத்துவ தீவிரவாதிகள் ஒன்று சேர்ந்து தான் இந்தக் கொலைகளைச் செய்கின்றார்கள்.

கொலைகளைச் செய்து முடிப்பதற்கு முன்னால் அந்தந்த கிராம மக்களிடம், பொய்களைச் சொல்லி வெறியூட்டி விடுகின்றனர். இந்த வெறியூட்டும் செயல்கள் நீண்ட காலமாக நடந்து வருகிறது.

கிராம மக்கள் உண்மையை அறிவதற்கு முன்னால் கொலைகளை நடத்தி முடித்து விடுகின்றார்கள். அதாவது ஓரிரு முஸ்லிம்களை அடித்தே கொன்று விடுகின்றார்கள். மக்கள் அதன் பின்னும் உண்மையை அறிந்திட இயலாமல் பார்த்துக் கொள்கின்றார்கள்.

**குற்றப்பத்திரிக்கை**

இப்படிக் கொலை செய்பவர்கள் மீது மிகவும் அரிதாகவே காவல்துறை நடவடிக்கை எடுக்கின்றது. காவல் துறை எப்போதாவது சிலரைக் கைது செய்தால், அவர்களுக்கு உடனேயே பிணை கிடைத்து விடுகின்றது. இதெல்லாமல் அடித்துக் கொலை செய்யப்பட்டவர்கள் மீதே குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும். காரணம், கொலை செய்யப்பட்டவர் பசுவதைச் சட்டத்தை மீறினார் எனக் குற்றம் சாட்டப்படுவார். பல நேரங்களில் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத்தினரும் குற்றப்பத்திரிக்கையில் இணைக்கப்படுகின்றனர்.

**காவல் துறையில் பசு பாதுகாவலர்கள்**

உத்திரப் பிரதேசம் போன்ற எட்டு மாநிலங்களில், பசுவதை சட்டம் செயலிலிருக்கின்றது. இந்த மாநிலங்களில் ஒவ்வொரு காவல்துறையிலும் இந்துத்துவ தீவிரவாதிகளுக்கு மூன்று முதல் ஐந்து இடங்கள் தரப்படுகின்றன. இவர்களுக்கு அரசாங்கமும் சம்பளம் தருகின்றது.

இவர்கள் பொய்க் காரணங்களைச் சொல்லி முஸ்லிம்களைக் கொலை செய்கின்றார்கள். இவர்கள் செய்யும் கொலையிலும், கொலை செய்யப்படும் முஸ்லிம்கள் மீதே குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்படுகின்றது. இதற்காக இவர்களுக்கு அரசு சம்பளம் தருகின்றது. ஆக அரசாங்க சம்பளத்தோடு இந்துத்துவ தீவிரவாதிகள் முஸ்லிம்களைக் கொலை செய்கின்றார்கள்.

பெரும்பாலான நேரங்களில் இந்தப் பசுப் பாதுகாவலர்களுக்கு, காவல்துறையினர் காவலுக்குச் செல்கின்றனர். இவர்கள் சொலை செய்யும் போது காவல்துறையினர் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இப்படி அனைத்து வசதிகளோடும் முஸ்லிம்கள் கொலை செய்யப்படுகிறார்கள். மோடியின் ஆட்சியில்... தட்டிக்கேட்போர் யாருமில்லை...

**ஊடகங்கள்**

ஊடகங்கள் தொடக்க காலத்தில் இந்தப் பட்டப்பகல் படுகொலைகளைப் பரபரப்பாக்கின. (உ.ம்.) அக்லாக் படுகொலை. ஆனால் பின்றைய நாட்களில் இவை நித்திய நிகழ்வுகளாக ஆகவே ஊடகங்கள் அவ்வளவாகக் கண்டு கொள்வதில்லை.

அரசல் புரசலாகச் சில செய்திகள் மட்டுமே வெளிவருகின்றன. ஆக இப்போது இந்தச் செய்திகள் மக்கள் மன்றத்திற்கே வருவதில்லை.

செய்தி ஆதாரம்; தி இந்து ஆங்கிலம்
15.07.2018

**M.G.M**



# வாக்காளர் பட்டியலும்!

# காணாமல் போகும் முஸ்லிம் பெயர்களும்!!

இதைக்குறித்த விவாதம் ஒன்று சென்னை **S.I.E.T.** கல்லூரியில் *2.07.2018* அன்று நடைபெற்றது. விவாதம், காலம் சென்ற காயிதே மில்லத் அவர்களின் பேரன், சமுதாயப் போராளி, தாவூத் மியாக் கான் அவர்களால் தாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்ச்சியில் அபூ சாலிஹ் ஷரிஃப் அவர்களும் கலந்து கொண்டார்கள். அபூ சாலிஹ் ஷரிஃப் அவர்கள் தாம் கோடிக்கணக்கான முஸ்லிம் பெயர்கள் வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடித்து முதல் முதலில் அறிவித்தவர். அவர்களின் பெயர்களை மீண்டும் இணைத்திட நடவடிக்கை எடுத்தவர். *2.7.2018* நிகழ்ச்சியில் முன்னாள் முதன்மை தேர்தல் ஆணையர் **Chief Election Commisioner S.Y.** குறைஷி அவர்களும் கலந்து கொண்டார்கள். பல விளக்கங்கள் வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விட்டுப் போவதைத் தடுத்திட வேண்டும் என்பதற்கு தரப்பட்டன.

**நிகழ்ச்சியில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதில்**

கேள்வி நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளில் மிகவும் முக்கியமானது;

“முஸ்லிம்களுக்கு விகிதாச்சார பிரதிநிதித்துவம் நாடாளும் மன்றத்திலும் சட்டமன்றங்களிலும் வழங்கப்படுமா?” என்பது தான்.

கேள்வியை தமிழ் நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகத்தின் தலைவர் பேராசிரியர் வி.பி. ஜவாஹிருல்லாஹ் கேட்டார். அதற்கு முன்னாள் முதன்மைத் தேர்தல் ஆணையர் குறைஷி அவர்கள் இப்படிப் பதில் சொன்னார்கள்;

“மதவாரியான விகிதாச்சாரப் பிரச்சாரத்திற்கு இந்தியாவில் இடமே இல்லை. ஆனால் கட்சிகள் பெறும் வாக்குகளின் அடிப்படையில் விகிதாச்சார பிரதிநிதித்துவம் தருவதைப் பற்றி ஆலோசிக்கலாம், கேட்கலாம். சில நேரங்களில் ஒரு கட்சி இருபது சதவிகிதம் வாக்குகளைப் பெற்றிருக்கும். ஆனால் ஒரு சீட்டை கூட பெற்றிருக்காது. இந்நிலையில் அந்தக் கட்சிப் பெற்ற **20%** சதவிகித வாக்குகளும் பாழ். ஆனால் அந்தக் கட்சிக்கு **“proportional Representable”** வாங்கிய வாக்குகளின் அடிப்படையில் விகிதாச்சார பிரதிநிதித்துவம் கொடுப்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்”

**நீக்கங்கள்**

வாக்காளர் பட்டியலிலிருந்து முஸ்லிம்களின் பெயர் நீக்கப்படுவது யதார்த்தமாக நடப்பதா அல்லது திட்டமிட்டே செய்யப்படுவதா? இப்படி ஒருக் கேள்வியை தாருல் இஸ்லாம் சார்பில் கேட்பதற்காகவே நிகழ்ச்சிக்குச் சென்றோம். அதற்கான பதிலை பிரண்ட்லைன் திங்கள் இதழ் வழங்கி இருந்தது. அதில் அபூ ஸாலிஹ் அவர்கள் “முஸ்லிம்களின் பெயர் நீக்கம் ஒரு திட்டத்தின் கீழ் தான் நடைபெற்று வருகின்றது” எனப் பதில் சொல்லியிருந்தார்கள். (பார்க்க பெட்டிச் செய்தி.**(Source: FrontLine July 2018)**

ஆகவே வாக்காளர்கள் பட்டியலிலிருந்து முஸ்லிம் பெயர்களை அகற்றுவது என்பதற்குப் பின்னால் சதிகள் பல இருக்கின்றன. இன்றைக்கு ஆட்சியில் இருக்கும் பாஸிஸ்டுகள், முஸ்லிம்களை இரண்டாந்தர குடிமக்களாக ஆக்கிடும் திட்டம் ஒன்றை ஏற்கனவே கொண்டிருக்கிறார்கள்.

இதனை பல முறை “வைகறை வெளிச்சம்” ஆசிரியர்களுக்கு விளக்கிச் சொல்லியிருக்கின்றோம். இஃதல்லாமல் முஸ்லிம்களைப் பூண்டோடு



ஒழிக்கும் திட்டம் ஒன்றும் அவர்களிடம் உண்டு.

**அசாம்**

அசாம் மாநிலத்தில் பூர்வீகமாக குடியிருந்து வரும் முஸ்லிம்களில் பெரும் பகுதியினரை இப்படித்தான், முதலில் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கினார்கள். அவர்கள் அதை எதிர்த்து சமருக்கு நின்றார்கள். அவர்கள் போராடிக் கொண்டிருக்கும் போதே (NCR) என்ற தேசிய குடிமக்கள் ஏடு என்றொன்றை செயலில் கொண்டு வந்தார்கள். அதில் வாக்காளர் பட்டியலில் விடுபட்டவர் களின் பெயர்களை பதிவு செய்ய மாட்டோம், எனக் கூறிவிட்டார்கள். அவர்கள் தொடர்ந்து போராடவே அவர்களுக்கு ஒரு புது குடியுரிமையை வழங்கினார்கள்.

அதுதான் 'D' குடிமக்கள் என்பது. இந்த 'D' என்பது **Doubtful -** சந்தேகத்திற்கிடமான குடிமக்கள் எனப் பொருள். இவர்களுக்கு அடிப்படை உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டு வருகின்றன. அந்த மக்கள் இப்போது இதற்கெதிராகப் போராடி வருகின்றனர். இந்நிலையில் இந்தியா முழுவதும் போதுமான அளவுக்கு முஸ்லிம்களை வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கிய பிறகு இவர்கள் இந்த குடிமக்கள் பதிவேட்டை இந்தியா முழுவதும் அறிமுகப்படுத்தலாம்.

அதன் பின் முஸ்லிம்களை சந்தேகத்திற் கிடமான குடிமக்கள் என்றோ அல்லது இரண்டாந்தர குடிமக்கள் என்றோ அழைக்க முற்படலாம். இந்த ஆபத்திலிருந்தும் இன்றைய பாஸிஸ்டுகளின் சதியிலிருந்தும் விடுபட முஸ்லிம்கள் விழிப்போடு செயல்பட வேண்டும்.

இப்போது அசாமில் ஒரு கோடியே ஒன்பது லட்சம் முஸ்லிம் வாக்காளர்கள் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. இதில் ஓரிரு விதி விலக்குகளைத் தவிர அத்தனையும் முஸ்லிம் வாக்காளர்களே! (ஆதாரம்: **Sabrang Communications 7th june News Center**)

இவர்களும் காலப்போக்கில் 'D' என்ற சந்தேகத்திற்கிடமான குடிமக்களாக ஆகலாம். பின்னர் அனைத்து அடிப்படை உரிமைகளையும் இழக்கலாம்.. இப்படி இந்துத்துவ பாஸிஸ்டுகளின் ஆட்சியில் முஸ்லிம்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக ஆக்கப்பட்டு வருகின்றனர்.

**நமது பிரச்சாரக் கருத்தரங்கம்**

நாம் "வைகறை வெளிச்சம்" இதழிலும், தமிழன் தொலைக் காட்சி நிகழ்ச்சியின் போதும், ஓர் உண்மையைத் தெளிவுபடுத்தினோம். அது இன்று முஸ்லிம்கள் வாக்காளர்கள் பட்டியலிலிருந்து காணாமலாக்கப் படுகின்றார்கள். பின்னர் இதையே அதாவது வாக்காளர் பட்டியலையே குடியுரிமைப் பதிவேடு, **Citizenship Register** என்றாக்குவார்கள். அப்போது முஸ்லிம்கள் குடியுரிமையை இழந்து நிற்பார்கள். இது பாஸிஸ்டுகளின் பல திட்டங்களில் ஒன்று.

இதனை அப்பட்டமாக பல ஆய்வாளர்கள் அறிவித்து இருக்கின்றார்கள். முஸ்லிம்களுக்கும் அறிவுறுத்தி இருக்கிறார்கள். அன்மையில் இது குறித்த கருத்தரங்கம் ஒன்று டெல்லியில் நடந்தது. கருத்தரங்கள் ஜூன் திங்கள் 7ஆம் நாள்(2018) டெல்லியிலுள்ள காண்ஸ்டிடியுசன் கிளப் என்ற அரங்கில் நடந்தது. இந்தக் கருத்தரங்கில் உரையாற்றியவர்கள் பின்வருமாறு கூறினார்கள் என கருத்தரங்கத்திற்குப் பின்னர் வெளியிட்ட பத்திரிக்கை பதிப்பு கூறுகின்றது;

"ஆதார் அட்டை குடியுரிமை அட்டையாக ஆகிட இருந்தது. அதில் உள்ள குறைகள் பளிச்சென தெரிந்ததால், அது கை விடப்பட்டது. அதனால் வாக்காளர் அட்டையும், வாக்காளர் பட்டியலில் பெயரும் குடியுரிமையின் அடிப்படை அத்தாட்சி ஆகலாம்." (ஆதாரம்: **Summary of Panel Discussion on INDIA VOT MISSION 2019 - NO VOTER LEFT BEHIND**)

**Panalists:**

**1, Amitabh Kumda-District Genocide Fellow. The Research and Information system for Developing Cumbias**

**2, Sudarshan - Dean Juidal Law Conversely**

**3, Noor Mohamed - Senior Advisor to the Electron Communication of India)**

ஆக நாம் எடுத்து வைத்த வாதம் உண்மையாக்கப்பட்டுள்ளது.

**M.G.M**

# இந்துக்களை மைனாரிட்டியாக அறிவிக்க முயற்சி

சங்கப்பரிவாரத்தைச் சார்ந்த இன்னொரு பிரிவினர் இடை விடாமல் இன்னொரு வேலையைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அது இந்துக்களை சிறுபான்மையினராக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை பல்வேறு தளங்களிலும் வைத்து வருகின்றனர்.

எட்டு மாநிலங்கள்

இவர்களின் கூற்றுப்படி இந்தியாவின் எட்டு மாநிலங்களில், இந்துக்கள் சிறுபான்மையினராம். அந்த எட்டு மாநிலங்கள்.

***01.ஜம்மு கஷ்மீர்***

***02.பஞ்சாப்***

***03.மிசோரம்***

***04.அருணாச்சலப்பிரதேசம்***

***05.நாகாலாந்து***

***06.மேகாலயா***

***07.அருணாச்சலப் பிரதேசம்***

***08.மணிப்பூர்***


இவற்றுல் ஜம்மு காஷ்மீர் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பூமி. பஞ்சாப் சீக்கிய மக்கள் அதிகமாக வாழும் பகுதி. ஏனைய மாநிலங்கள் கிருஸ்தவர்கள் அதிகமாக வாழும் பகுதி.

இங்கெல்லாம் இந்துக்களை சிறுபான்மையினர் என அறிவிக்க வேண்டுமாம். இவர்கள் நீண்ட நாட்களாகவே இப்படியொருக் கோரிக்கையை வைத்து வருகிறார்கள்.

முதலில் 1993இல் **NCM** என்ற தேசிய சிறுபான்மை ஆணையத்திடம் ஒரு மனுவை சமர்ப்பித்தார்கள். அங்கே தங்களுடைய தகிடு தத்தங்கள் எடுபடாமல் போனதால் உச்ச நீதிமன்றத்தில் ஒரு பொது வழக்கை தாக்கல் செய்தார்கள். நமது உச்ச நீதி மன்றத்தில் பல தீபக் மிஸ்ராக்கள் இந்துத்துவா சிந்தனையை உடையவர்கள் அடிக்கடி நீதிபதி ஆகிவிடுகின்றார்கள். அவர்களிடம் இந்த வழக்கை கொண்டு வந்து விடுகின்றார்கள். அவர்கள் இந்த மனுவை ஒட்டுமொத்தமாக தள்ளுபடி செய்வதில்லை. ஏதாவது ஒரு சாதகமான தீர்ப்பை வழங்கி விடுகின்றார்கள். அவ்வாறு வழங்கப்பட்ட தீர்ப்புக்குள் ஒன்று நீங்கள் மீண்டும் தேசிய சிறுபான்மை ஆணையத்தை அணுகுங்கள் என்பதே!

இவர்கள் மீண்டும் தேசிய சிறுபாண்மையினர் ஆணையத்திடம் வந்திருக்கிறார்கள் இந்த தேசிய சிறுபான்மையினர் ஆணையம், இவர்களின் மனுவை விசாரணைக்கு ஏற்று இவர்களின் வாதங்களையும் செவிமடுத்துள்ளது. என்பது குறிப்பிடத்தக்கது.

எந்த நிமிடமும் 8 மாநிலங்களில் இந்துக்கள் சிறுபான்மையினர் என அறிவிக்கப்படலாம்.




இதில் வேடிக்கையும், வேதனையும் என்னவெனில், இவர்கள், முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள், சீக்கியர்கள் - இவர்களை அவர்கள் பின்பற்றும் மத அடிப்படையில், சிறுபான்மையினர் என அறிவிப்பது தவறு எனக் கூறுகின்றார்கள்.

ஏனெனில் இந்தியாவில் மத அடிப்படையில் எதையும் செய்யக் கூடாது என்கின்றார்கள். ஆனால் மேலே குறிப்பிட்ட எட்டு மாநிலங்களிலும், மத அடிப்படையில் தங்களை இந்துக்களை சிறுபான்மையினர் என அறிவிக்க வேண்டும் என்கின்றார்கள். இந்த முரண்பாட்டை யாரும் கண்டு கொண்டதாக தெரியவில்லை.

**M.G.M**

# நண்பரின் மனைவியைக் கொலை செய்த இராணுவ...?

EDITORIAL

அந்த நங்கை நல்லாரின் பெயர் ஷைலிஜா திருவேதி. வயது(35). அழகிய வடிவம். ஒரு முறை மிஸ் ஏர்த்ஸ் கிரியேட்டிவ் என்ற அழகிப் போட்டியில் கலந்து கொண்டவர். முதல் பரிசையும் பெற்றவர்.

சமுதாய நலனில் அக்கறைக் கொண்டவர். இதில் நல்லதொரு ஆர்வலர் எனப் பெயர் பெற்றவர். திருமணமாகி கணவர் திருவேதியுடன் வாழ்ந்து வந்தவர். கணவர் திருவேதி நமது இராணுவத்தில் மேஜர் என்ற பதவியை வகித்தவர்.

ஷைலிஜாவின் கணவர் திருவேதியின் நண்பர், நகில்ராய் ஹண்டா வயது 39. இவரும் இராணுவத்தில் அதே பதவியை வகிப்பவர். எல்லோரும் டெல்லியில் இராணுவக் குடியிருப்பில் வாழ்ந்து வந்தார்கள்.

நண்பர் திருவேதியின் வீட்டிற்கு அடிக்கடி வந்து போவார் நகில் ராய் ஹண்டா. திருவேதியின் மனைவியைப் பொதுத் தளத்திலும் சந்திப்பவர். “ஷைலிஜா” வின் அழகால் கவரப்பட்டார் நகில்ராய் ஹண்டா.

கணவர் திருவேதியைப் புறக்கணித்து விட்டு தன்னை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என ஷைலிஜாவை கட்டாயப் படுத்தினார். ஆனால் ஷைலிஜா மறுத்து விட்டார்.

தனது கணவர் தன்னிடம் மிகவும் அன்புடன் இருப்பவர். எங்கள் தாம்பத்திய வாழ்க்கையும் மிகவும் திருப்திகரமாக சென்றுக் கொண்டிருக்கின்றது. அதனால் தன்னை நெருங்க வேண்டாம் என எச்சரித்தார் ஷைலிஜா.

ஆனால் நகில்ராய் ஹண்டா விடவில்லை. தன் நண்பர் திருவேதிக்கு துரோகம் செய்ய வேண்டும். தன்னை திருமணம் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தினார்.

தன் கணவனுக்கு துரோகம் செய்யவே மாட்டேன். நகில்ராய் ஹண்டாவைத் திருமணம் செய்திட மாட்டேன் என்பதில், மிகவும் உறுதியாக இருந்தார் ஷைலிஜா திருவேதி.

தன் இச்சைக்கு இணங்க மறுத்த ஷைலிஜாவைக் கொலை செய்திட திட்டமிட்டார் மேஜர் நிகில் ராய் ஹண்டா!

2018 ஜூன் 24ஆம் நாள் டெல்லியிலுள்ள ஒரு மருத்துவமனைக்கு வந்துக் கொண்டிருந்தார் ஷைலிஜா திருவேதி. அங்கே பிசியோத்தெரப்பி வகுப்புகளுக்காக வருவது வழக்கம்.

அவரை வழிமறித்து வலுக்கட்டாயமாக தனது ஹோண்டா சிட்டி காரில் ஏற்றினார். அவரது கழுத்தை அறுத்து துடிதுடிக்கக் கொலை செய்தார். பின்னர் டெல்லி பிரார்சவுக் எனுமிடத்தில் பிணத்தைப் போட்டார்.

பிணத்தின் மீது தனது காரை இரண்டு முறை ஏற்றினார். காரணம் கொலையை விபத்து போல காட்டிடலாம் என்ற திட்டம். பின்னர் தனது காரிலேயே மீரட் சென்றார். அங்கே தனது காரை விற்றிட தயாரானார். இந்நிலையில் ஜூன் 25ஆம் நாள் காவல்துறை அவரைக் கைது செய்தது. (செய்தி ஆதாரம்: *TOI:25 June, 2018*)

அழகாய் இருப்பது பெண்களுக்கு இறைவன் வழங்கிய அருட்கொடை. பெண்மை என்பதே அழகுதான். அது ஆண்களை வசீகரிக்கும் ஆற்றலுடையது. இதனை பெண்கள் உணர வேண்டும். தங்கள் அழகை மறைத்திடுவதே தங்களுக்கு பாதுகாப்பு என்பதையும் பெண்கள் உணர்ந்தாக வேண்டும்.

இந்த அழகும், கவர்ச்சியும் தங்களைத் திருமண பந்தம் மூலம் சொந்தமாக்கிக் கொள்ளும் கணவனுக்கு மட்டுமே சொந்தம். அவளை சொந்தமாக்கிக் கொள்ள கணவன் ஏற்றுக் கொள்ள வேண்டிய பொருப்புகளும், பொருளாதார சுமைகளும் ஏராளம்! ஏராளம்!! ஆகவே பெண்மையையும், கவர்ச்சியையும் பிறருடைய காட்சிக்குத் தந்திடக் கூடாது. இதில் பெண்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

ஷைலிஜாவின் விவகாரத்தில் நடந்ததும் இதுவே. அவர் அழகாக இருக்கின்றாரோ இல்லையோ கவர்ச்சியான உடை அணிவது தான் அவரது வழக்கம். மிகவும் கோரமான முறையில் அவரது உயிரைக் காவுக் கொண்டதும் கவர்ச்சியைக் காட்சிக்குத் தந்த அவரது ஆடையே!

இதனால் தான் இந்தப் பிரஞ்சத்தைப் படைத்த இறைவன் பெண்களுக்கான ஆடை விவகாரத்தில் இப்படி விதி வகுத்துத் தந்தான். இறைவன் கூறுகின்றான்;

WOMEN HARROSMENT

(நபியே!) முஃமின்களான ஆடவர்களுக்கு நீர் கூறுவீராக: அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்; அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும்; நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கு தெரிந்தவன்.(24:30.)

இன்னும்; முஃமினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக: அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்; தங்கள் அழகலங்காரத்தை அதினின்று (சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர (வேறு எதையும்) வெளிக் காட்டலாகாது; இன்னும் தங்கள் முன்றானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும்; மேலும், (முஃமினான பெண்கள்) தம் கணவர்கள், அல்லது தம் தந்தையர்கள், அல்லது தம் கணவர்களின் தந்தையர்கள் அல்லது தம் புதல்வர்கள் அல்லது தம் கணவர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரர்கள் அல்லது தம் சகோதரர்களின் புதல்வர்கள், அல்லது தம் சகோதரிகளின் புதல்வர்கள், அல்லது தங்கள் பெண்கள், அல்லது தம் வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்கள், அல்லது ஆடவர்களில் தம்மை அண்டி வாழும் (பெண்களை விரும்ப முடியாத அளவு வயதானவர்கள்) பெண்களின் மறைவான அங்கங்களைப் பற்றி அறிந்து கொள்ளாத சிறுவர்கள் ஆகிய இவர்களைத் தவிர, (வேறு ஆண்களுக்குத்) தங்களுடைய அழகலங்காரத்தை வெளிப்படுத்தக் கூடாது; மேலும், தாங்கள் மறைத்து வைக்கும் அழகலங்காரத்திலிருந்து வெளிப்படுமாறு தங்கள் கால்களை (பூமியில்) தட்டி நடக்க வேண்டாம்; மேலும், முஃமின்களே! (இதில் உங்களிடம் ஏதேனும் தவறு நேரிட்டிருப்பின்,) நீங்கள் தவ்பா செய்து (பிழை பொறுக்கத் தேடி), நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்.(24:31.)

ஆதமுடைய மக்களே! மெய்யாகவே, நாம் உங்களுக்கு உங்களுடைய மானத்தை மறைக்கவும், உங்களுக்கு அலங்காரமாகவும், ஆடையை அளித்துள்ளோம். ஆயினும் தக்வா (பயபக்தி) எனும் ஆடையே (அதைவிட) மேலானது. இது அல்லாஹ்வுடைய (அருளின்) அடையாளங்களில் (ஒன்றாக) உள்ளதாகும் - (இதைக் கொண்டு) நல்லுணர்வு பெறுவார்களாக.(7:26)

நபியே! நீர் உம் மனைவிகளுக்கும், உம் பெண்மக்களுக்கும் ஈமான் கொண்டவர்களின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலைமுன்றானைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக; அவர்கள் (கண்ணியமானவர்கள் என) அறியப்பட்டு நோவினை செய்யப்படாமலிருக்க இது சுலபமான வழியாகும். மேலும் அல்லாஹ் மிக மன்னிப்பவன்;மிக்க அன்புடையவன்.(33:59)

இவை அறிவுறுத்தும் உண்மை பர்தாவே பெண்களுக்கு சிறந்த பாதுகாப்பு. இந்த விழுமியங்களை பின்பற்றி வாழ்ந்தால் இது போன்ற கொலைகள் நடக்க வாய்ப்பில்லை. இதைப் பல முறை டெல்லியைச் சேர்ந்த காவல்துறையினரே பகிரங்கமாகக் கூறியுள்ளார்கள்.

"பர்தா" ஆடையில் மட்டுமல்ல, ஆழ்மனதிலும் இருந்திட வேண்டும், என்பதையும் சேர்த்தே மேலே எடுத்துக் காட்டிய திருமறை வசனங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

இந்த "பர்தா" பெண்களுக்கு மட்டுமல்ல இறைவனின் விதியின் படி இது ஆண்களுக்கும் சேர்த்துத்தான். இதையும் மேலேயுள்ள இறைமறை வசனம்(24:30) சுட்டிக்காட்டுகின்றது.

"பர்தா' ஆண்களுக்கும் பெண்களுக்கும் பார்வையிலிருந்தே தொடங்குகின்றது. மேலும் பார்க்க திருக்குர்ஆன் (35:53),(7:27),(33:55),(24:60).

இறைவழியைப் பின்பற்றுவோம் குரூரம் நிறைந்த கொலைகளை தவிர்ப்போம்.

இதில் இந்தியாவில் மோடியின் ஆட்சியில் 2014 முதல் 2017 வரை ஒரு லட்சத்து ஒன்பது ஆயிரம் கற்பழிப்புக் குற்றங்கள் பதிவாகியுள்ளன என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இவற்றைத் தடுக்கவும் இஸ்லாமே வழி! இந்த இஸ்லாத்தை இங்கே முழு வீச்சில் பரப்பிடுவோம்!!

# உங்கள் பெயரை வாக்காளர் பட்டியலிலிருந்து எப்படி நீக்குகிறார்கள்?



பாரதீய ஜனதா கட்சி, சங்கப்பரிவார உதிரி அமைப்புகள் இவை ஒரு வேலையை செய்து கொண்டிருக்கின்றன. அது முஸ்லிம்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கிடும் வேலைதான். இதில் புதிய புதிய உத்திகளைக் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

**இப்போதைய உத்தி**

முஸ்லிம் வாக்காளர்கள் பெயரை வாக்காளர் பட்டியலிலிருந்து எடுத்து, அந்தப் பெயரில் ஒரு மனுவை தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி விடுவது. அந்த மனுவில் "வாக்காளர் பட்டியலிலிருந்து என்னுடைய பெயரை நீக்கிட வேண்டும்." என அந்த முஸ்லிம் வாக்காளர் கோருவது, கொஞ்ச நாள் கழித்து உங்களுக்கு தேர்தல் ஆணையத்திடமிருந்து ஒரு பதில் வரும். அதில் உங்கள் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. எனக்குறிப்பிடப் பட்டிருக்கும்.

உங்களுக்கு எதுவும் புரியாது. நீங்கள் நான் அப்படி எந்த மனுவையும் அனுப்பிட வில்லை எனக்கூறி பதில் அனுப்பினால் உங்களுக்கு ஒரு பதில் வரும் அதில், "வேண்டுமானால் நீங்கள் வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரை மீண்டும் சேர்த்திட விண்ணப்பிக் கலாம்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

நீங்கள் மீண்டும் ஒரு மனுவை சமர்பித்தால் அது அத்தோடு கிடப்பில் போடப்படும். இந்தச் சோதனையை "நீதி அமைதிக்கான மக்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் ஏற்கனவே செய்து பார்த்து விட்டார்கள்." அவர்களின் ஒருவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை இங்கே தந்துள்ளோம்.

> சில மாதங்களுக்கு முன் நடந்த கர்நாடகா மாநில சட்ட சபை தேர்தல் முடிவுகள் பல கேள்விகளை எழுப்பின. காங்கிரஸ் கட்சியை விட குறைந்த வாக்குகளை பெற்ற பாஜக அதிக தொகுதிகளைக் கைப்பற்றியது. இத்தகைய முடிவிற்கு காரணம் காங்கிரஸிற்கு நீர்த்து போக செய்தது தான். கடந்த இதழ்களில் இதைப் பற்றி வைகறை வெளிச்சம் தெளிவுப் படுத்து எழுதிருந்தது. கிட்டத்தட்ட 12 லட்சம் இஸ்லாமியர்களின் வாக்குகள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கியதே இதற்கு காரணமாகும்.

இந்த செய்தியை பார்த்தபின் என்னுடைய வாக்காளர் அட்டையை பெறுவதற்காக அரசு இ சேவை மையத்தை அனுகியபோது தான் தெரிந்தது என்னுடைய பெயர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்க பட்டு விட்டது என்று. வாக்காளர் அட்டை இல்லை என்றாலும் அதன் பதிவு எண்ணை கொடுத்து 25 ரூபாய் செலுத்தினால் வாக்காளர் அட்டையை அரசு இ சேவை மையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

என்னுடைய பதிவு என்னை அவர்களிடம் சொன்ன போது அந்த எண் தவறானது என்றார்கள். கடந்த முறை இதே எண்ணை வைத்துதான் வாக்கு பதிவு செய்தேன் என்று கூறி அதற்கு ஆதாரம் கட்டிய பின், தேர்தல் அலுவலகரிடம் அணுக சொன்னார்கள். காரணம் பெயர் நீக்கப்பட்டு இருக்கலாம் என்று.

கடந்த தேர்தலில் இருந்த அதே வீட்டில் தான் இப்போதும் நான் இருக்கின்றேன் அதனால் வாக்காளர் சரி பார்ப்பில் பெயர் நீக்கப்பட வாய்ப்பு இல்லை. வாக்காளர் அட்டை எப்படி விடுபட்டது என்று தங்கள் தகவல் அறியும் சட்டத்தில் கேள்வி எழுப்பினாலும் பல நாட்கள் ஆகியும் பதில் இல்லை. தேர்தல் ஆணையத்தை தொடர்பு கொண்டாலும் எந்த வகையிலும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

அதனால் புதிய வாக்காளராக பதிவு செய்ய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தின் பதிவு செய்த போது என்னுடைய மொபைலில் பதிவு செய்ததற்கான குறிப்பு எண்ணும் அதனுடன் வாக்காளர் சேர்ப்புக்கான கோரிக்கை பெறப்பட்டுள்ளது என்ற வார்த்தையும் அடங்கியிருந்தது (**OTW220716137**) மே 2ம் தேதி பதிவு செய்யப்பட்ட விண்ணப்பம் இன்றும் முடியாமல் உள்ளது. மேலும் எங்கள் தேர்தல் ஆணையரிடம் நேரில் சென்று தேவையான சான்றுகளை அளித்தும் எந்த தீர்வும் இல்லை.

(http://www.nvsp.in/ forms/forms/trackstatus) இதில் இந்த குறிப்பு எண்னை வைத்து அதன் நிலையை அறிந்து கொள்ளலாம்.

## யதார்த்தமானவையா?

முஸ்லிம்களின் வாக்குகள் காணாமற் போவது எதார்த்தமாக நடந்திருக்கலாம் அல்லவா? என்ற கேள்வியை கேட்ட பிரண்ட் லைன் ***(Front Line)*** ஏடு, அவருடைய பதிலை இப்படிப் பதிவு செய்கிறது;

**"He does agree that there is a strong possibility of a systemic bias against Muslims which of times, when leads to the exclusion of the entire community or a Locality from a communication"**

### இதன் பொருள்;

"முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு திட்டத்தின் கீழ் இவை யெல்லாம் நடக்க எல்லா சாத்தியங்களும் உண்டு. இதில் சில நேரங்களில் மொத்த முஸ்லிம் சமுதாயத்தையும் ஒதுக்கி வைக்கும் வகையில் எல்லாம் நடக்கின்றன. சில நேரங்களில் முஸ்லிம்கள் வாழும் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கும் வகையில் எல்லாம் நடக்கின்றன. சில நேரங்களில் ஒரு தொகுதியிலுள்ள முஸ்லிம் கள் வாழும் பகுதியை ஒதுக்கி வைத்திடும் அள்வில் எல்லாம் நடக் கின்றன.**(Frontline, July 6 2018)**

அலைபேசியில் வந்த குறுஞ்செய்தியை உற்று நோக்கும் போதுதான் தெரிந்தது தேர்தல் ஆணையத்திடம் இருந்து கடந்த நவம்பர் மாதம் ஒரு குறிப்பு எண் வந்துள்ளது என்று. அதை இணைதளத்தில் சரிபார்த்தபோது தான் தெரிந்தது அது பெயர் நீக்குவதற்காக நான் பதிவு செய்த விண்ணப்பத்தின் குறிப்பு எண் என்று **(EYX572790245).** இது எனக்கே தெரியாமல் நடந்திருப்பது தான் இதில் உள்ள குழப்பமே. இங்கே கேள்வி என்னவென்றால்,

*1)*வாக்காளர் அட்டை பதிவு செய்யும் போது அதைப்பற்றி தெளிவாக வரும் குறுஞ்செய்தி ஏன் வாக்காளர் பெயர் நீக்க பதிவிற்கு வருவதில்லை

*2)*பெயர் நீக்கப்படுவதற்கும் அதற்கான சான்றுகளை சமர்பித்தாக வேண்டும். நான் பெயர் நீக்க கோரவில்லை என்றால் யார் இதை செய்தது? அவர்கள் என்ன சான்றுகளை கொடுத்திருப்பார்கள்.

*3)*தகவல் அறியும் சட்டத்தில் பெயர் நீக்க பதிவு செய்த விண்ணப்பத்தின் ஒரு நகலை கேட்டு பல மாதங்களாகியும் எந்த பதிலும் இல்லை.

*4)*தேர்கள் அதிகாரி அலுவலகத்தில் என்னுடைய விண்ணப்பத்தை அவர்களின் கோப்புகளில் தேடும் போது ஒன்றை உணர முடிந்தது. புதிதாக வாக்காளர் அட்டை கோரியிருப் பவர்களில் பெரும்பான்மையானோர் முஸ்லிம்கள் என்று

*5)* சில நாட்களுக்கு முன்பு தேர்தல் ஆணையத்தில் இருந்து சான்றுகளை சமர்பித்தால் உடனே அதனை முடித்து தருவதாக கூறினார்கள், பல கேள்விகளை எழுப்பிய பின்பு.

*6)* தகவல் அறியும் சட்டதிலும் மேல் முறையீடு செய்தும் எந்த ஒரு மாற்றமும் நிகழவில்லை.

இதனை அனைத்தையும் பார்க்கும் போது தமிழக வாக்காளர் பட்டியலில் உள்ள சிறுபான்மையினரின் வாக்குகளை இப்போதே இல்லாமல் அக்க வேண்டும் என்று பாசிச அரசு விரும்புகிறதோ என்று அச்சம்.

இதனை தடுக்க இப்போதே இதன் பணிகளை வீரியமாக செய்து மற்ற மாநிலங்களுக்கும் ஒரு முன் உதாரண மாக தமிழகத்தை காட்டவேண்டிய பொறுப்பு நமக்கு உள்ளது என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

**அபுதாஹிர்**

# ஏழைக்குத் திருமணம்! அதுவே திருமணப் பரிசு!!

நக்மா பேகம்! அவளுக்கு வயது 23 கர்நாடகா பெல்லாதிலைச் சார்ந்த கம்ப்யூட்டர் பொறியியல் மாணவி. திருமணத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார் தந்தை இனாயத்துல்லாஹ்! **S.R.**ரசூல் தான் மாப்பிள்ளை.மகளிடம் தந்தை இனாயத்துல்லாஹ் "திருமணப் பரிசாக உனக்கு என்ன வேண்டும்?" எனக் கேட்டார்.

"திருமணமாகாமலிருக்கும் சில ஏழைப் பெண்களுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும். அதுவே எனக்கு நீங்கள் தரும் திருமண பரிசு." என்றாள். அப்படியே ஆகட்டும் என்றார் தந்தை இனாயத்துல்லாஹ். மகளின் திருமண வரவேற்பு, 13.07.2018 அன்று மாலை ஹராரி மொம்மனஹாலி எனுமிடத்தில் நடந்தது. அன்றே 11 இந்து பெண்களுக்கும் திருமணமும் நடந்தது. மொத்தமாக ஐந்தாயிரம் பேருக்கு விருந்து வைத்தார். தந்தை இனாயத்துல்லாஹ்.

மகள் நக்மா பேகம், எனக்கான திருமணப் பரிசை தாராளமாகவே தந்து விட்டீர்கள் என மகிழ்ச்சி அடைந்தாள். தந்தை மகளை அழைத்து ஓர் அறையைக் காட்டினார். அங்கே, திருமணம் செய்து வைத்த தம்பதியருக்காக வாங்கி வைக்கப்பட்டிருந்த பொருள்கள் குவிந்து கிடந்தன.

திருமணம் செய்து வைக்கப்பட்ட அந்த இந்து தம்பதியருக்கு, உடனே வாழ்க்கையைத் தொடங்குவதற்கான வீட்டு சாமான்கள், படுக்கைகள், என அடிப்படைத் தேவைகள் அனைத்தும் இருந்தன. மகளின் மகிழ்ச்சி இரட்டிப்பானது.

அதன் பின்னர் தான் தந்தை சொன்னார்; இன்று அந்த தம்பதியினர் அணிந்திருந்த ஆடைகள். தாலி, என எல்லாமே என் செலவுதான் என்றார். மகள் இன்னும் சந்தோஷப்பட்டாள் இத்தனை ஜோடிகளை எப்படித் தேடிப் பிடித்தீர்கள் எனக் கேட்ட போது, தந்தை இனாயத்துல்லாஹ்;

"என்னுடைய நண்பர்கள் வட்டாரத்தில் செய்தியைச் சொன்னேன். அவர்கள் இந்தச் சோடிகளைத் தேடிப் பிடித்துத் தந்தனர்." என்றார். இதில் இரண்டு ஜோடிகள் தலீத் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். மூன்று ஜோடிகள் பழங்குடியினர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். இந்தச் செய்தி அடுத்த நாள் நாளிதழ்களில் முதல் பக்கச் செய்தியாக வந்தது குறிப்பிடத்தக்கது. (செய்தி ஆதாரம்:**The Hindu Eng, Coimbatore Edition, July 15, 2018**)

**M.G.M**

# முஸ்லிம் அமைப்புகளின் கருத்துக்கள்

முஸ்லிம்களை அரசியல் ரீதியாக ஒன்று மில்லாதர்களாக ஆக்கிடும் சதிகள் இப்போது தொடங்கியவைகள் அல்ல. மாறாக அவை நீண்ட நெடுங்காலமாகவே நடந்து கொண்டிருக்கின்றன. என அழுத்தம் திருத்தமாக கூறுகின்றன.

இந்த சதியின் முதல் கட்டம், நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதிகளின் சீராய்வு மறு அமைப்பு **(Delimitation)** என்ற பெயரில் தொடங்கின.

இந்த சதிகள் காங்கிரஸ் கட்சியின் ஆட்சியின் போதே தொடங்கி விட்டன. **Delimitation** தொகுதிகள் மறு சீராய்வு என்ற பெயரில் முஸ்லிம் வாக்காளர்கள் அதிகமாக இருந்த தொகுதி களெல்லாம் **(Reserved constituency)** ஒதுக்கப் பட்ட தொகுதிகளாக ஆக்கப்பட்டன.

இந்த ஒதுக்கப்பட்ட தொகுதிகள் பட்டியல் இன மக்களுக்கு, அதாவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டன.

இதில் குரூரம் நிறைந்த செயல் என்னவெனில் 55% முஸ்லிம் வாக்காளர்கள் உள்ள தொகுதிகள் கூட, ஒதுக்கப்பட்ட தொகுதிகளாக அறிவிக்கப்பட்டு முஸ்லிம்களிடமிருந்து பறிக்கப்பட்டன.**(Source; Frontline July 6.2018)**

அடுத்து முஸ்லிம் வாக்காளர்கள் அதிகமாக இருக்கும் தொகுதி தான் பல கூறுகளாகப் பிரிக்கப்பட்டு வேறு பல தொகுதிகளுடன் இணைக்கப்பட்டன. இதனால் இணைக்கப்பட்ட தொகுதிகளில் முஸ்லிம் வாக்காளர்கள் குறைவாக ஆனார்கள்.

அவர்களின் வாக்குகளைப் பற்றி கவலைப் படுவார் யாரும் இல்லை. என்றானது. அவர்களும் ஓட்டுப் போடுவதில் பயனேதுமில்லை, என எண்ணி வாக்குச் சாவடிகளுக்கே போவதில்லை.

இப்படி முஸ்லிம்களின் வாக்குகள் தங்களுக்குப் பிரதிநிதித்துவத்தைத் தர முடியாதவையாக ஆக்கப்பட்டு விட்டன.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது முஸ்லிம்களை மையமாகக் கொண்டு தொடங்கப்படும் கட்சிகள் எதையும் சாதிக்க முடியாமல் போவதில் வியப்பேதுமில்லை.

**M.G.M**

## காணாமல் போகும் முஸ்லிம் வாக்காளர்கள்

**பிரண்ட்லைன் ஏட்டுக்கு அபூஸாலிஹ் ஷரீஃப் அளித்தப் பேட்டியில்;**

"முஸ்லிம் வாக்காளர்களின் எண்ணிக்கை வருடந்தோறும் குறைந்து கொண்டே வருகின்றது.

இது பல ஐயங்களை எழுப்புகின்றது. அவை முஸ்லிம்கள் பாரபட்சத்துடன் நடத்தப்பட இருக்கின்றார்கள்.

அரசியல் ரீதியாக அவர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படும் வாய்ப்புகள் **(political exclusion)**, அவர்களைப் பூண்டோடு ஒழிக்க ஏற்பாடுகள்**(Total Elimination)** இன்னும் இது போன்றவைகளாகும்.

***Frontline: July 6, 2018***

**இதர சமுதாயத்தவர்களின் வாக்குகள் காணாமல் போகவில்லையா?**

இந்தக் கேள்விக்கு அபூ ஸாலிஹ் ஷரிஃப் தரும் பதில்;

“அங்கொன்றும் இங்கொன்றுமாக இதர சமுதாயங்களின் வாக்குகள் காணாமற் போயிருக்கின்றன.

(அவை 15% கீழ்தான்)ஆனால் முஸ்லிமளின் வாக்குகள் 25% க்கும் மேல் காணமற் போயிருக்கின்றன. முஸ்லிம்களின் **House Hold** ஐ வீடுகளில் கூட்டுக் குடும்பமாக வாழ்பவர்களிடயே போகும் வாக்குகள் 50% க்கும் மேல் உள்ளது.

***Frontline: July 6, 2018***



மீண்டும் சிரியா

# சிரியாவில் அதிகமாக அப்பாவி மக்களைக் கொலை செய்தது அமெரிக்காவும் ரஷ்யாவுமே!

# ஐக்கிய நாடுகளின் சபை அறிக்கை.



**அறிக்கை கூறுகின்றது;**

கடந்த 2017இல் ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் வான்வழி தாக்குதல்கள் தாம். சிரியாவில் அதிகமான அப்பாவி மக்களைக் கொலை செய்தன.

ரஷ்யாவும் அமெரிக்காவும் அனுப்பிய ஆளில்லா விமானங்கள், சிரியாவின் இந்த இலக்கைத் தான் தாக்கிட வேண்டும் என அனுப்பப்படவில்லை. சிரியாவின் எந்த பகுதியை வேண்டுமானாலும் தாக்கிடலாம் என்ற அளவில் தான் அவை சிரியாவிற்குள் அனுப்பப்பட்டன.

அவற்றிற்கு **Unguided Weapon** “எந்த வழிகாட்டுதலுமில்லாத ஆயுதங்கள்” என்று பெயர். இந்த ஆயுதங்கள் **“Russian Fixed Wing Air Craft”** (ரஷியன் ஃபிக்ஸட் விங் ஏர் கிராஃப்ட்” என அழைக்கப்படுகின்றன. இவை “அட்டாறப்” மார்க்கெட் என்ற அங்காடி வீதியில், 84 அப்பாவி மக்களைக் கொலை செய்தன. இவர்கள் அங்காடியில் பொருட்களை வாங்கிச் சென்றவர்கள்.

இந்தத் தாக்குதல் சர்வதேசிய சட்டங்களின் படி போர் குற்றமாகும். **“Arrount to War Crimes”.** இதனால் போர் குற்ற நடவடிக்கைகளுக்காக குற்றம் சாட்டப்பட வேண்டும்.

அதே போல அமெரிக்கா போட்ட குண்டுகளால், 150 பேர் இறந்தார்கள். அமெரிக்கா 2017 ஆம் ஆண்டு “அல்-பதிய,

ரக்கா", ஆகிய இடங்களில் இருந்த பள்ளிக் கூடங்களின் மேல் குண்டுகளைப் போட்டது. இதில் 150 பேர் இறந்தார்கள்.

இதனை அப்போது அமெரிக்காவின் பார்வைக்குக் கொண்டு சென்ற போது, அமெரிக்கா அங்கே **ISIL** இஸ்லாமிய கிலாபத் போராளிகள் ஒளிந்திருந்ததாக கூறியது. இது பொய்! அதேப் போல 15 போராளிகள் தாம் கொல்லப்பட்டார்கள் என்றுக் கூறியது. இதுவும் பொய். கொள்ளப் பட்டவர்களும், காயமடைந்தவர்களும் அப்பாவி பொது மக்கள். இதில் ஒருவர் கூட போராளி அல்ல.

இது, பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் (ஐக்கிய நாடுகள் மேற்கொண்ட விசாரணையில் தெரிய வந்தது.)

இதே இடங்களிலிருந்த இன்னொரு பள்ளிக் கூடத்தையும் அமெரிக்கா தாக்கித் தகர்த்தது. அப்போது அமெரிக்காவின் இராணுவத் தலைமையகம், அங்கே 30 போராளிகள் ஒளிந்திருப்பதாக அறிவித்தது. இதுவும் பொய் என்பது பின்னர் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

சில தாக்குதல்களுக்கு, அமெரிக்கா இராணுவ தலைமையகம் சொன்னக் காரணம், சிரியாவின் கபிசுல் அஸாத் அரசு, இரசாயன குண்டுகளைப் பயன்படுத்தியது என்பதாகும்.

ஆனால் 2013இல் இரசாயன ஆயுதங்களுக்கு எதிரான ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடும் போது சிரியா எல்லா இரசாயன குண்டுகளையும் சர்வதேச கண்காணிப்பாளர்களிடம் ஒப்படைத்து விட்டது.

அமெரிக்கா, ரஷ்யா இவை நடத்தும் தாக்குதல்களின் நோக்கம், பள்ளிக்கூடங்கள், மருத்துவக்கூடங்கள் போன்ற பொது மக்களுக்கு பயன்படும், பொதுக் கட்டுமானங்களை **(Civil Infrastructure)** அழிப்பதாகும் என்பதும் தெரிய வந்துள்ளது.(ஆதாரம்: **Report UN COMMISSION OF ENQUIRY**)

**குறிப்பு;**

இந்த அறிக்கை 500 பேரை பேட்டிக் கண்டு தயாரிக்கப்பட்டதாகும். இதில் சிரியாவில் வாழ்பவர்களும், சிரியாவிற்கு வெளியே அகதிகள் முகாம்களில் வாழ்பவர்களும் உண்டு.

சிரியா அரசாங்கம் இந்த விசாரணைக் குழுவை உள்ளே அனுமதிக்க பலமுறை மறுத்தது.

சிரியாவில் வாழும் முஸ்லிம்களை அழிப்பதும், அங்குள்ள கலாச்சார சின்னங்களையும் கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள், அங்காடிகள் போன்ற பொது மக்களுக்குப் பயன்படுவற்றை அழிப்பதுமே இங்கே நோக்கம் - என்பதை மக்கள் மன்றத்தில் தெளிவுப் படுத்திட விரும்புகின்றோம்.

அங்கே நடப்பது முஸ்லிம்களுக்கிடையே உள்ள பிளவுவாறி வினையினால் நடப்பது அல்ல என்பதை இந்த ஆய்வு தெரிவுப்படுத்துகின்றது.

இனி அமெரிக்கா, ரஷ்யா ஆகியவை செய்திருப்பது **(War Crime)** போர் குற்றங்கள். இவற்றின் மீது ஐக்கிய நாடுகள் சபை நிச்சயமாக நடவடிக்கை எடுக்காது என்பதையும் நாம் அறிவோம்.

**MGM**


வைகறை வெளிச்சம்
மாத இதழில் புதியதாக
சந்தாதாரராக
இணைய தொடர்பு
கொள்ளவும்
81481 29887

வாங்கிப் படியுங்கள்
26/11 நீதித்துறையும்
மயங்கியது ஏன்?
விலை. ரூ. 220.



கத்தாருடன் ஈரான்!



சவுதியுடன் அமெரிக்கா

# கத்தார் மீதான தடை! வென்றது யார்?

கத்தார் தீவிரவாதத்திற்கு ஆதரவு தருகின்றது என்று கூறி ஓராண்டிற்கு முன் ரமளான் மாதத்தில் அதாவது ஜூன் 2017இல் கத்தார் உடனான ராஜ்ய உறவுகளை முறித்து கொண்டன, சவுதி அரேபியா, **U.A.E**, பஹ்ரைன் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள்.

**தடை எதனால்? எப்படி?**

2011இல் ஏற்பட்ட அரபு வசந்தத்தில் சவுதியின் நீண்ட கால நண்பரான எகிப்தின் தலைவர் ஹோஸ்னி முபாரக்கிற்கு உதவி செய்யாமல் கைவிட்டது அமெரிக்க ஒபாமா அரசு. இதனால் ரியாத் ஏமாற்றமும் ஆத்திரமும் அடைந்தது.

2013இல் ஈரானுடன் ஒபாமா அரசு மேற்கொண்ட அணுசக்தி ஒப்பந்தம் ரியாத்தை மேலும் எரிச்சலடைய செய்தது. ரியாத் பலமுறை எதிர்ப்பு தெரிவித்த பின்னமே இந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. எனவே நவம்பர் 2016இல் டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற பின் அவரை நண்பராக்கும் முயற்சியில் ரியாத் ஈடுப்பட்டது.


மார்ச் 2017இல் சவுதியின் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் துணைப் பட்டத்து இளவரசருமான முஹம்மது பின் சல்மான் வாஷிங்டனுக்கு விஜயம் செய்தார். இதன் பின்னர், அமெரிக்காவிடமிருந்து பெருமளவு ஆயுதங்களை சவுதி வாங்கப் போவதாகவும், அமெரிக்காவில் சவுதி பெருமளவு முதலீடு செய்து வேலை வாய்ப்பை உருவாக்கப் போவதாகவும் அறிவித்தார் டிரம்ப்.

அமெரிக்காவின் வழக்கப்படி புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் கனடா அல்லது மெக்சிகோ நாட்டிற்கு தான் முதலில் விஜயம் செய்வர். ஆனால் டிரம்ப் தனது முதல் விஜயத்தை மே 20, 2017இல் ரியாத்தில் இருந்து ஆரம்பித்தார்.

55 முஸ்லிம் நாடுகளின் தலைவர்கள் ரியாத்திற்கு வருகை புரிந்து டிரம்பை வரவேற்றனர். அங்கு தீவிரவாதத்திற்கு எதிரான போரில் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்ற கருத்தை மையப்படுத்தி மாநாடும் நடைபெற்றது.

மே22, 2017இல் ரியாத்திலிருந்து கிளம்பினார் டிரம்ப். அதன் அடுத்த நாளே கத்தார் நாட்டின் அரசு இணையதளமான **QNA - Qatar News Agency** ஹேக் செய்யப்பட்டது.

அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கையை விமர்சித்தும், ஈரானை புகழ்ந்தும் கத்தாரின் அமீர் தமீம் கூறுவது போன்ற செய்தி ஒளிப்பரப்பானது. இந்த செய்தி வெளியானவுடன் அடுத்த 20 நிமிடங்களில் சவுதி அரேபியாவும், **U.A.E.**யும் மிகப்பெரிய அளவில் இச்செய்திக்கு கவரேஜ்




கொடுத்தன. (பின்னாலில் மேற்கொண்ட ஆய்வுகளில், கத்தாரின் இணையதளத்தை முடக்கி செய்தி வெளியிட்டது சவுதி அரேபியாவும், **U.A.E.**யும் என்று நிருபனமானது - **Frontline**)

முதலில் பஹ்ரைன் கத்தார் உடனான ராஜ்ய உறவை ஜூன் 5, 2017இல் துண்டித்தது. பஹ்ரைனை தொடர்ந்து சவுதி அரேபியா, **U.A.E.**, எகிப்து மற்றும் எமன் ஆகிய நாடுகள் ராஜ்ய உறவை துண்டித்தன.

கத்தாருக்கு செல்லவிருந்த அபுதாபி, துபாய், சவுதி அரேபியா விமானங்கள் நிறுத்தப்பட்டன. சவுதி தனது எல்லைகளை மூடியது. தரைவழி, கடல்வழி மார்க்கங்களும் மூடப்பட்டன. லிபியா, மாலத்தீவு, எமனும் உறவை துண்டித்தன. குவைத், ஓமன் ஆகிய நாடுகள் இத்தடைக்கு ஆதரவளிக்க வில்லை.

தடை விதித்த மறுநாளே டொனால்ட் டிரம்ப் டுவீட் செய்தார். "தீவிரவாதத்தின் திகில்கள் முடிவுக்கு வருவதன் ஆரம்பமாக இந்நடவடிக்கை இருக்கலாம்" என்று.

சவுதிக்கு ஆதரவாக டிரம்ப் டுவீட் செய்த பின், பாதுகாப்பு செயலாளரும் "ரெக்ஸ் டில்லர்சன்" மாகாணத்தின் செயலாளருமான ஜேம்ஸ் மேத்தியூஸ் "கத்தாரில் அமெரிக்காவின் மிகப் பெரிய இராணுவ தளம் ஒன்று இருப்பதையும், அப்படைகள் சிரியாவிலும், ஈராக்கிலும் நடக்கும் தீவிரவாதத்திற்கு எதிரான சண்டை யில் ஈடுபட்டு வருவதையும்" டிரம்பிற்கு ஞாபகமூட்டினார்.

இங்கே ஒரு ராஜதந்திர தவறை சுட்டிக்காட்டிட வேண்டும். தடையை மேற்கொண்ட நாடுகள் கத்தாரின் மீது பல குற்றச் சாட்டுகளை எந்த வித தெளிவுமில்லாமல் முன் வைத்தன. கத்தாரிடமிருந்து என்ன எதிர்ப் பார்க்கின்றோம் என்று முதலில் தெளிவாக கூறவில்லை. கோரிக்கையை எழுத்து வடிவில் முன் வையுங்கள் என்று வாஷிங்டன் கூறியிருக்கக் கூடும். அதன் பின்னரே 13 நிபந்தனைகளுடன் 10 நாட்கள் கெடுவும் விதித்தன சவுதி தலைமையிலான நாடுகள்.

**கத்தாரின் பதில்**

13 நிபந்தனைகளைக் கொண்ட கோரிக்கையை கத்தாருக்கு வழங்கியது குவைத். கத்தார் சாதுர்யமாக இக்கோரிக்கையைப் பொதுமக்கள் பார்வைக்கு வைத்து நான்கு நாடுகளின் எதிர்ப்பு நிலையை வெளிச்சம் போட்டு காட்டி விட்டது.

10 நாள் காலக்கெடுவையும் தைரியமாக நிராகரித்தது. தடையை முதலில் நீக்குங்கள், உட்கார்ந்து பேசலாம் என்று கூறிவிட்டது. தீவிரவாதத்திற்கு உதவி புரிகிறோம் என்று கூறுவது ஆதாரமற்றக் குற்றச்சாட்டு என்று மருத்தது கத்தார். தடை கத்தாரின் இறையாண்மைக்கு எதிரானது. தடையால் தங்களுடைய குடிமக்களுக்கும் அங்கே வசிப்பவர் களுக்கும் எந்த வித பாதிப்பும் ஏற்படாமல் இருக்க கத்தார் செயலாற்றும் என்றும் கூறியது.

**எதிர்மறையான விளைவுகள்**

அல்ஜஸீரா ஊடக நிறுவனத்தை மூடுவது, ஈரான் உடனான ராஜ்ய உறவை குறைத்துக் கொள்வது, தோஹாவின் அருகில் வீற்றிருக்கும் துருக்கியின் இராணுவத் தளத்தை மூடுவது போன்ற நிபந்தனைகளும் கோரிக்கையில் வைக்கப்பட்டன.

கத்தார் தங்கள் நாட்டின் உணவுத் தேவையில் 80% உணவை அண்டை அரபு நாடுகளிடம் இருந்தே பெற்று வந்தது. ஆனால் தடைக்கு பின் நிலைமை மாறிற்று. உணவு பொருட்களையும் காய்கறி களையும் சுமந்து வந்தன ஈரான் விமானங்கள். கத்தார் மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்தன. கடந்த வருடத்தில் ஈரானுக்கும் கத்தாருக்கும்

இடையேயான வர்த்தகம் இரண்டு பில்லியன் டாலர் அதிகரித்துள்ளது.

கத்தாரில் இராணுவத் தளத்தை அமைத்ததன் மூலம் வளைகுடா நாடுகளில் பாதுகாப்பில் தனது பங்கையும் முதன் முதலாக பதித்தது துருக்கி.

**Bloom berg** தந்த தகவலின் படி, இத்தடையினால் 43 பில்லியன் டாலர் மதிப்பிலான பொருளாதார நெருக்கடிகளை கத்தார் சந்தித்திருக்கும் ஆனால் எதிர்ப்பார்த்ததை விட கத்தார் சமய சார்புடன் எழுந்து நின்று விட்டது.

**கத்தார் சவுதியின் பக்கமா? ஈரானின் பக்கமா?**

2015இல் எமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சவுதி தலைமையிலான கூட்டுப்படைகள் தாக்குதல் நடத்தின. கத்தாரும் அதற்கு ஆதரவாக தனது படைகளை அனுப்பியது.

சவுதியின் தூதரகம் கலவரக்காரர்களால் தெஹ்ரானில் தாக்கப்பட்ட போது தனது கண்டனத்தை பதிவு செய்யும் விதமாக, சவுதிக்கு ஆதரவாகவும் தெஹ்ரானிலிருந்து கத்தார் தங்கள் நாட்டுத் தூதரை அழைத்து கொண்டது.

பஹ்ரைனில் பொருளாதாரத்தை உயர்த்தும் நோக்கில் நிதி உதவி செய்யவும் கத்தார் ஒத்துக் கொண்டது. பஹ்ரைன் மன்னரும், பட்டத்து இளவரசரும் இது குறித்து கலந்தாலோசிக்க பிப்ரவரி, மார்ச் 2017இல் தோஹா வந்தார்.

2014இல் ஏற்பட்ட நெருக்கடிக்கு பின் ஏற்பட்ட தீர்மானத்தின் படி, தோஹா **GCC** நாடுகளுடன் உடனான தொடர்பை நன்கு முன்னேற்றியே வந்துள்ளது கத்தார். 2016இல் டொனால்ட் டிரம்ப் பதவியேற்ற பின், இந்த நிலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. **(Al Jazeera 4 june 2018)**

**தடை ஏன் வெற்றியடையவில்லை?**

கத்தார் மீது அழுத்தம் கொடுத்து விட்டோம். கத்தார் இறங்கி வரும் அல்லது சிக்கல்களை எதிர்கொள்ளட்டும் என்றே சவுதியும் அதன் கூட்டணி நாடுகளும் எதிர்ப்பார்த்தன.

கொடுத்த அழுத்தங்களை தாங்கி கொண்டு தடையை எதிர்த்து போராட முடிவு செய்தது கத்தார். தடை விதித்து ஓராண்டு நிறைவடைந்து விட்டது. எதிர்ப்பார்த்ததை விட அதிக வளம் மிக்க நாடாக கத்தார் மாறிவிட்டது. தடைக்கு பின் நிலைமை இன்னும் மோசமடையாமல் இருக்க அமெரிக்கா உடனான உறவில் தெளிவாக செயல்பட்டு அதன் பாதுகாப்பை உறுதி செய்தது கத்தார்.

ஜனவரி 2018இல் வாஷிங்டனில் நடந்த அமெரிக்கா - கத்தார் வருடாந்திர ராஜ்ய உறவுகள் குறித்த முதல் விவாதத்திற்கு பின், அமெரிக்க வெளியுறவுத் துறை பின்வரும் அறிக்கையை வெளியிட்டது. அதில்;

“ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கு முரண்படும் விதத்தில் கத்தாரின் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கு விடுக்கப்படும் வெளிப்புற அச்சுறுத்தல்களை கத்தாருடன் இணைந்து தடுக்கவும் போராடவும் அமெரிக்கா விரும்புகிறது” என அறிவித்தது. **(Aljazeera)**

தடையின் காரணமாக கத்தாருக்கு செல்லும் வழித்தடங்களை முடக்கிய பின், கத்தாருக்கும் ஈரானுக்குமுடனான வர்த்தகம் 2 பில்லியன் டாலர் உயர்ந்துள்ளது. உணவு, தண்ணீர் மற்றும் மருந்து பொருட்களை கத்தாருக்கு அனுப்பியது ஈரான்.

சவுதி தலைமையிலான நான்கு நாடுகளும் இணைந்து கத்தாரின் மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளும் திட்டமும் இருந்தது. கத்தாரின் பணமதிப்பை குறைத்து விடும் நடவடிக்கையிலும் **U.A.E.** ஈடுபட்டது. அமெரிக்க நிறுவனமான **(Black Water)** பிளாக் வாட்டரின் உதவியுடன் கத்தாருக்குள் கூலிப்படைகளை இறக்கி விடும் எண்ணமும் **U.A.E.** விடம் இருந்துள்ளது.

**S-400** ஏவுகணை நுட்பத்தை ரஷ்யாவிடமிருந்து கத்தார் வாங்கினால், கத்தார் மீது இராணுவ நடவடிக்கையை எடுப்போம் என வெளிப்படையாகவே மிரட்டியது சவுதி.

ஆனால் மத்திய கிழக்கில் கத்தாரில் அமெரிக்காவின் மிகப்பெரிய இராணுவ மையம் அமைந்துள்ளது. இதை கருத்தில் கொண்டே அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சகம் எச்சரிக்கையை விடுத்திருக்க வேண்டும்.

நிதி நெருக்கடிகளை ஈரான் துருக்கியின் உதவியால் சமாளித்தது கத்தார். தடை விதித்து ஓராண்டு ஆகிவிட்டது. சவுதியும் அதன் கூட்டணி நாடுகளும் இன்னும் தங்களின் தோல்வியை ஒத்துக் கொள்ளவில்லை.

**- அபூ ஹாசின்**






# சுவிஸ் வங்கியில் குவியும் பணம் யாருடையது?

நாங்கள் ஆட்சிக்கு வந்தால், சுவிட்சர் லாந்தில் இந்திய குடிமக்கள் குவித்து வைத்திருக்கும் கறுப்புப் பணத்தை ஒட்டு மொத்தமாகக் கைப்பற்றிடுவோம். கைப்பற்றியவுடன் அந்தப் பணத்தை பிரித்து ஒவ்வொரு குடிமகனின் வங்கிக் கணக்கில், ரூபாய் 15 லட்சம் போடுவோம். (வாயை பிளந்து கொண்டு இருங்கள்)

இந்த அதிசயத்தை நாங்கள் ஆட்சிக்கு வந்து நூறு நாட்களுக்குள் நடத்திக் காட்டுவோம். என அறிவித்தது மோடியின் கட்சி பாரதீய ஜனதா கட்சி! இஃதொரு இமாலயப் புரட்டு, மக்கள் இதெல்லாம் நடந்து விடும் என நம்பினார்கள்.

ஆனால் ஆட்சிக்கு வந்த பின் அவர்கள் சொன்னது வாக்களித்தது அத்தனையையும் காற்றிலே பறக்க விட்டார்கள். ஒரு விஷ பாசிசத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நாள் தவறாமல் பட்டப்பகலில் படுகொலைகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆட்சிக்கு வந்த பின் மக்கள், "என்னவாயிற்று? சுவிட்சர்லாந்து வங்கிகளில் வைக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணம்" எனக் கேட்ட போது, "இதோ நாங்கள் ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழு, **SIT** என்ற **Special Investigation Team** என்றொன்றை அமைத்துள்ளோம். அவர்கள் அனைத்தையும் சாதித்து விடுவார்கள்" என்றார்கள்.

இந்த சிறப்புப் புலனாய்வுக் குழு சுவிட்சர்லாந்து நாட்டுக்கு பறந்து கொண்டிருக்கின்றது என்றொரு பரபரப்பையும் உருவாக்கினார்கள். ஆனால் எல்லாமே பம்மாத்து என்பது பகீர் எனத் தெரிய வந்தது.

**தொடரும் ஏமாற்றங்கள்**

அடுத்த கட்டமாக நாங்கள் சுவிட்சர்லாந்து நாட்டோடு ஒப்பந்தங்களை செய்யப்போகின்றோம். அந்த ஒப்பந்தங்களின் படி யார், யார் எவ்வளவு பணத்தை சுவிட்சர்லாந்து நாட்டில் பதுக்கி வைத்திருக்கிறார்கள் என்பது தெரிந்திட வந்திடும் என்றார்கள்.

இந்த உண்மை தெரிந்ததும் நாங்கள் அவர்களை 'லபக்' என அமுக்கி விடுவோம் என்றார்கள். இதில் கவனிக்க

வேண்டியது என்னவெனில் 1987 முதலே சுவிட்சர்லாந்து நாடு தன்னிடம் பணம் வைப்பவர்களின் தகவல்களை வெளியிட்டு வருகின்றது. ஆனால் அரசுகள் அதைக் கண்டு கொள்ளவில்லை.

அந்தத் தகவல்கள் வந்தனவா? என நாட்டு மக்கள் கேட்டார்கள். பாசிச பாரதீய ஜனதா கட்சி அரசு வழக்கம் போல இழுத்தடித்து, பின்னர் மக்கள் தொடர்ந்து கேள்விக் கணக்குகளைக் கேட்கவே நிலைமையை சமாளிக்க சுவிட்சர்லாந்து அரசோடு போட்ட ஒப்பந்தம் வெற்றிப் பெற்றது.

அவர்கள் யார் சுவிட்சர்லாந்து வங்கியில் பணத்தைக் குவித்து வைத்திருக்கிறார்கள், என்பது தெரிந்து விட்டன. விரைவில் நவடிக்கை எடுக்கப்படும் என்றார்கள்.

மக்கள், "சுவிட்சர்லாந்து வங்கியில் கருப்புப் பணத்தை பதுக்கி வைத்திருக்கும், தேசத் துரோகிகள் யார், யார்? என்பதை அறிந்திட ஆர்வமாக இருந்தார்கள். ஆதனால் அந்தப் பெயர் பட்டியலை வெளியிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள். மோடி அரசு அதனை வெளியிட மாட்டோம் எனக் கூறிவிட்டது.

**உச்ச நீதிமன்றம் - ஊழல்**

மக்கள் போராடிடத் தொடங்கினார்கள். இந்தப் போராட்டம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு என முடிந்தது. ஆமாம்! சுவிட்சர்லாந்து வங்கியில் பணம் குவித்து வைத்திருக்கும் மோசடியாளர்களின் பெயர்களை வெளியிட அரசுக்கு ஆணையிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

அந்நிலையில் உச்ச நீதிமன்றம் வேறொரு கோலம் கொண்டிருந்தது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா மீது ஊழல் குற்றச்சாட்டு ஒன்று "விஸ்வரூபம்" எடுத்தது. அதுவும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கானது.



இந்த வழக்கில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தன் மீதுள்ள ஊழல் குற்றச் சாட்டை தானே விசாரிப்பேன் என அடம் பிடித்தார். இந்தியாவில் நீதி மடிந்து விட்டது என அறிவித்தார். இந்த ஊழல் வழக்கை முன்னின்று நடத்திய மூத்த வழக்கறிஞர் பிராசாந்த் பூஷன். ஆக! உச்ச நீதிமன்ற நீதிபதி தீபக் மிஸ்ரா, ஆளும் பாசிச பரிவாரத்திற்கெதிராக தீர்ப்பு வழங்கிட மாட்டார் என்ற நிலை வந்தது.

**பாசிசம் உச்ச நீதிமன்றம் வழியாக**

உண்மையைச் சொன்னால் இந்த பாசிஸ்டுக்கள், தங்கள் இந்துத்துவ பாசிசத்தைச் செயல்படுத்திட உச்ச நீதிமன்றத்தைப் பயன்படுத்தி வருகின்றார்கள்.

ஆக! சுவிட்சர்லாந்தில் கொட்டிக்கிடக்கும் பணம் யாருடையது என்பதை அறிந்திட எந்த வழியுமில்லை என்றானது. உச்ச நீதிமன்றமும் கையை விரித்தது.

ஆக! குடிமக்களுக்கு 15 லட்சம் ரூபாயு மில்லை. ஏன் தகவல்கள் கூட கிடைக்கவில்லை. உச்ச நீதிமன்றம் வரை வழக்குத் தொடர்ந்து பணத்தையும், நேரத்தையும், பாழாக்கியது தான் மிச்சம். மொத்தத்தில் சுவிட்சர்லாந்து வங்கியில் தான் இரகசியம் காக்கிறார்கள் என்பது இல்லை. அதை விட அதிகமான இரகசியத்தை இந்திய அரசு பாரதீய ஜனதா பாசிஸ அரசு காக்கின்றது என்பது தான் உண்மை.

**அரசின் பீற்றல்**

இப்படி எந்தத் தகவலையும் தரமாட்டேன் என அடம் பிடிக்கும் பாரதீய ஜனதா கட்சியின் அரசு, இடையே இன்னொரு சாதனையை சாதித்து விட்டதாக அறிவித்தது.

அது இனி யாராவது இந்தியாவிலிருந்து சுவிட்சர்லாந்து வங்கியில் பணம் போட்டால் அந்தத் தகவல் உடனேயே இந்திய அரசுக்கு வந்து விடும் என்றார்கள். காரணம் நாங்கள் சுவிட்சர்லாந்து வங்கியுடன் அப்படியொரு ஒப்பந்தத்தை செய்து சாதித்து விட்டோம், என்றார்கள்.

இவர்கள் சாதித்தது உண்மையானால், இவர்கள் சுவிச்சர்லாந்தில் கறுப்புப் பணத்தை பதுக்கி வைத்திருக்கும், பண முதலைகளின் பெயர்களை மக்கள் மன்றத்தில் வைத்திட வேண்டும். இதை அவர்கள் செய்வதாகத் தெரியவில்லை.

**பெயர்களை ஏன் வெளியிட மறுக்கின்றார்கள்?**

இங்கே ஒரு கேள்வி! கறுப்புப் பண முதலைகளின் பணத்தை சுவிட்சர்லாந்து வங்கியிலிருந்து 100 நாட்களில் இந்தியா கொண்டு வந்து விடுவோம் என தம்பட்டம் அடித்தவர்கள்,

# WHERE IS BLACK MONEY

தொடர்ந்து நாங்கள் அத்திசையில் சாதித்துக் கொண்டிருக்கின்றோம் எனக் கூறியவர்கள், ஏன் அந்த தேசத் துரோகிகளின் பெயர்களை வெளியிட மறுக்கின்றார்கள்? ஏன் அந்தப் பணங்களை கைப்பற்றிடப் பயப்படுகிறார்கள்?

நிச்சயமாக இவர்களை எதிர்ப்பவர்களின் பணமாக அந்த பணமிருந்திருந்தால் அந்தப் பணத்தை கைப்பற்றியிருப்பார்கள். அத்தோடு ஆட்களின் பெயர்களை வெளியிட்டு அவர்களை மக்கள் மன்றத்தில் அவமானப் படுத்தியிருப்பார்கள். தங்களைத் தேசப்பக்தர்களாகக் காட்டியிருப்பார்கள்.

இந்த செய்திகளிலிருந்து வெளிப்படும் உண்மை என்னவெனில் சுவிட்சர்லாந்தில் பணத்தை பதுக்கி வைத்திருப்பவர்கள், இவர்களின் ஆட்கள் மற்றும் இவர்களுக்கு வேண்டியவர்கள் என்பதே! அதனால் தான் பெயர்களை மறைக்கிறார்கள், நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்கிறார்கள்.

ஆகவே இவர்களின் ஆட்கள் தாம் சுவிட்சர்லாந்த் வங்கியில் பணப் பதுக்கல் என்ற தேசத் துரோகத்தைச் செய்து கொண்டிருப்பவர்கள் என்பது தெளிவு.

இங்கே நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அது, 2014 தேர்தலில் **APCO** ஆப்கோ என்ற யூத கம்பெனிக்குப் பணத்தைக் கொட்டித் தந்துதான், இவர்கள் ஆட்சியைப் பிடித்தார்கள். இந்த யூத கம்பெனிக்கு பணத்தைக் கொட்டிக் கொடுத்தவர்கள் இங்கிருக்கின்ற இவர்களின் கார்ப்பரேட்கள் தாம்.

இவர்களின் பணம் தான் சுவிட்சர்லாந்தில் கொட்டிக் கிடக்கின்றது. அதனால் தான் இவர்கள், சுவிட்சர்லாந்தில் பணம் வைத்திருப்பவர்களின் தகவல்கள் தங்களுக்குக் கிடைத்த பின்பும், அதனை நமக்கு மக்களுக்குச் சொல்லமாட்டேன் என்றார்கள்.

**பணமதிப்பு நீக்கம்**

மக்களின் கவனத்தை சுவிட்சர்லாந்தில் குவித்து வைத்திருக்கும் பணத்திலிருந்து திருப்பிட, இன்னொரு உத்தியை கையாண்டார்கள். அதுதான் பணமதிப்பு நீக்க நடவடிக்கை. இதனை நவம்பர் 8, 2016 இல் திடுதிப்பென நள்ளிரவில் அறிவித்தார் மோடி.

அதில் கறுப்புப்பணம் ஒழிந்து விடும் என்றார். ஆனால் எதுவும் ஒழியவில்லை. ஒழிந்ததும், அழிந்ததும் சராசரி மக்கள் தாம்.

பண மதிப்பு நீக்கம் நடவடிக்கையால் கறுப்புப் பணம் ஒழியவில்லை. என்பது மட்டுமல்ல, 200 பேர் - ஏழைகள், தங்கள் சொந்தப் பணத்தை மீட்க வரிசையில் நின்று மாண்டார்கள். பல தொழில்கள் வீழ்ந்து பல தொழிலதிபர்கள் தொழிலாளர்களானார்கள்.

**2018இல் அதிர்ச்சித் தகவல்**

இந்நிலையில் தான், சுவிட்சர்லாந்த் வங்கி **SNB - Swiss National Bank** அந்த அதிர்ச்சித் தகவலை ஜூலை திங்கள் 2018இல் வெளியிட்டது. அதில் இந்தியாவிலிருந்து சுவிட்சர்லாந்து வங்கியில் 2017ஆம் ஆண்டில் கொண்டு குவிக்கப்பட்ட பணம் 50.2% சதவிகிதம் அதிகரித்துள்ளது என்றது.



15 ஆண்டுகளுக்குப் பிறகு 50%க்கு மேல் கருப்புப் பணம் அதிகமாகப் போடப்பட்டது மோடியின் ஆட்சியில் தான்.

இது 2004 ஆம் ஆண்டிற்கு பிறகு இதுவே அதிகமான விழுக்காடுகள் என்றும் அறிவித்தது சுவிஸ் வங்கி.( 2004 ஆண்டில் 56.2%) இதில் இன்னொரு உண்மையும் சுயப் பிரசவமாக வெளி வந்தது.

அது இந்தியாவில் அதிகமாக தேசத்துரோகம் செய்பவர்கள் மோடி வகையறாக்கள் தாம். இப்போது மோடியின் ஆட்கள் புதிய உற்சாகத்தோடு சுவிஸ் வங்கியில் பணத்தை பதுக்கு கிறார்கள்.

ஒரு வேளை இந்தப் பணம் 2019 நாடாளு மன்றத்

தேர்தலில், தேர்தல் களத்தில் பாயலாம்.

**பதுக்கப்பட்ட தொகை?**

நேரடியாக டெபாஸிட் என செலுத்தப்பட்ட பணம் - 7000 கோடி. பினாமிகள், நம்பிக்கைக் குறியவர்கள் என்பவர்களால் செலுத்தப்பட்ட பணம் - 112 கோடி வேறு வங்கிகள் வழி சுவிஸ் வங்கியில் செலுத்தப் பட்ட தொகை - 2640 கோடி வாடிக்கையாளர்கள் வைப்புத் தொகையாக வைக்கப்பட்ட பணம் - 1050 கோடி.(ஆதாரம்: **Data Released by Swiss National Bank)**

**நிதி அமைச்சர் அருண் ஜெட்லியின் விளக்கம்**

சுவிஸ் வங்கியில் இருக்கும் பணம் கறுப்புப் பணமல்ல. அவை வெள்ளைப் பணம் தான். என்றொரு விளக்கத்தை, இந்தியாவின் இப்போதைய கேடுகெட்ட நிதியமைச்சர் அருண் ஜெத்திலி கூறியுள்ளார்.

இவர் நம் நாட்டுப் பொருளாதாரத்தை சீரழித்தவர். கார்ப்பரேட்களுக்கு வரிச் சலுகைகளை வாரி வாரி வழங்கியவர். இவர் இப்போது சுவிட்சர்லாந்தில் வெள்ளைப் பணத்தை கண்டுபிடித்துள்ளார்.

ஆனால் அவர் ஒரு கேள்விக்கு பதில் சொல்லவில்லை."சுவிஸ் வங்கியில் இருக்கும் பணம் கருப்புப் பணம் இல்லையென்றால், ஏன் அதை சுவிஸ் வங்கியில் வைக்க வேண்டும்? இந்தியாவில் இருக்கும் வங்கிகளிலேயே வைத்திருக்கலாம் அல்லவா?"

அது திருட்டுப் பணம் அதனால் தான் அது சுவிஸ் வங்கியில் வைக்கப்பட்டிருக்கின்றது.

இதிலிருந்து பெறப்படும் இன்னொரு உண்மை என்னவெனில், இப்போது சுவிஸ் வங்கியில் அதிகமாக பணத்தை வைத்திருப்பவர்கள் அருண் ஜெட்லியின் ஆட்கள் தாம். இவர்களிடமிருந்து இந்தியாவைக் காக்க எழுவோம்.

**MGM**

# தாழ்த்தப்பட்டவர் என்பதால் சமையல் பணியாளர் மீது தாக்குதல்

திருப்பூர் மாவட்டத்தின் எல்லையில் உள்ள கடைக்கோடி கிராமம் திருமலைக் கவுண்ட பாளையம்.

அவினாசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அவ்வூரிலுள்ள உயர்நிலைப் பள்ளியில் சத்துணவு செய்யும் பணியாளர் பாப்பாள் என்பவரை அவ்வூரில் வசிக்கும் ஆதிக்க சாதியினர் சக்கிலியர் சமைத்து எங்கள் குழந்தைகள் எப்படி சாப்பிடுவது என ரகளையில் ஈடுபட்டுள்ளனர்.

முதல்நாள் தான் அங்கே பணியில் சேர்ந்துள்ளார் பாப்பாள். திருமலைக்கவுண்டபாளையம் சொந்த ஊராக இருந்த போதிலும் இதேப் பிரச்சினையால் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பே பதினாறு கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒச்சா பாளையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

அங்கேயும் சாதி தெரிந்து பல்வேறு தொல்லைகள். இருந்த போதும் குடும்ப சூழ்நிலையால் தினமும் பயணம் செய்து வேலை செய்து வந்துள்ளார்.

இந்நிலையில் திருமலைக் கவுண்ட பாளையத்தில் சமையல் பெண் ஓய்வுப் பெற்றதால் பாப்பாள் சொந்த ஊரிலேயே பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். அப்போது தான் சாதி வெறியால் மீண்டும் இழிவுபடுத்தப்பட்டார்.

ஆனால் தகவல் தெரிந்து தலித் அமைப்புகள் தீவிரமாக போராட்டத்தில் குதித்தன. சாலை மறியல், ஆர்ப்பாட்டம் போன்றவைகளில் ஈடுபட்டனர். தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்திடம் சம்பவத்தை கொண்டு சென்றனர்.

அதன் பின்பே காவல்துறை வழக்குப் பதிவு செய்தது. அவிநாசி தொகுதியானது தாழ்த்தப் பட்டோருக்காக ஒதுக்கப்பட்ட தொகுதியாகும். சட்டமன்ற உறுப்பினர் தனபாலும் பாதிக்கப்பட்ட பாப்பாளும் ஒரே சாதியை சார்ந்தவர்கள். மேலும் தனபால் சபாநாயகர் ஆவார். இதுமட்டுமல்லாது பாப்பாளின் கணவர் அ.தி.மு.க. வில் பொறுப்பில் உள்ளார்.

மேலும் அந்த பள்ளியில் ஆதிக்க சாதியினருக்கு தனியே சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரும் தலித்களுக்கு தனியே சுத்திகரிக்கப்படாத தண்ணீரும் வழங்கப்படுகிறது. பள்ளி பாடப்புத்தகங்களில் எழுத்தளவில் மட்டுமே தீண்டாமை பெருங்குற்றம் என உள்ளது. பள்ளியில் பணி புரிவோரும் இந்த தீண்டாமை கொடுமைக்கு உதவியுள்ளனர். ஆதிக்க சாதியினருக்கு அஞ்சி மீண்டும் ஒச்சாபாளையத்திற்கே பணியிட மாற்றம் செய்தார் வட்டார வளர்ச்சி அலுவலர் மீனாட்சி.

செய்திகள் வெளியாகி நிலைமை பூதாகரமாக ஆனதால் அது ரத்து செய்யப்பட்டு திருமலைக் கவுண்டபாளையத்திற்கே பணி வழங்கப்பட்டுள்ளது.



தீண்டாமையால பாதிக்கப்பட்ட பாப்பம்மாளை சந்தித்து தாருல் இஸ்லாம் சார்பில் "சாதி ஒழிந்தது" நூல் கொடுக்கப்பட்டது.

அடிமட்ட ஊழியரானாலும் குடியரசுத் தலைவரானாலும் சாதி வெறிக்கு தப்ப முடிவதில்லை. இதனால் தான் அம்பேத்கர் இந்துவாக பிறந்தது என் குற்றமல்ல ஆனால் நான் நிட்சயமாக இந்துவாக சாக மாட்டேன் என்றார். பெரியார் இன இழிவு நீங்க இஸ்லாமே நன்மருந்து என்றார். மேலும் இஸ்லாத்தை ஏற்றால் ஐந்து நிமிடத்தில் தீண்டாமை ஒழிந்துவிடும் என்றார். முஸ்லிம்களுக்கு புனிதப் பள்ளிகள் மூன்று. இம்மூன்றிலும் தொழுகை அழைப்பான பாங்கை முதன் முதலில் சொன்னவர் தாழ்த்தப்பட்டு ஒடுக்கப்பட்டு விலங்குளை விட கேவலமாக நடத்தப்பட்டு வந்த கறுப்பர் பிலாலே. இஸ்லாம் சாதி இன நிற ஒடுக்கு முறைகளை சொல்லளவிலும் செயலளவிலும் ஒழித்து கட்டுகிறது.

தீண்டாமையை ஒழித்து சட்டமே இயற்றி இருந்தாலும் நடைமுறையில் தீண்டாமை இருக்கவே செய்யும். எண்ணற்ற பாப்பம்மாக்கள் கண்ணுக்கு தெரியாமல் சாதிக் கொடுமையால் சிக்கி சின்னாபின்னம் ஆகி கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கான விடுதலை இஸ்லாத்திலே மட்டுமே உள்ளது. இறைவன் கூறுகிறான்.

**மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன். (அல்குர்ஆன் : 49:13)**

# தாழ்த்தப்பட்ட ஜாதியைச் சார்ந்த மாணவி தொட்டதால் தீட்டுப்பட்ட உணவு குப்பையில் கொட்டப்பட்டது.

இந்தக் கொடுமை நமது இராஜஸ்தான் மாநிலத்தில் நடந்துள்ளது. ஜூலை 2, 2018 அன்று உதைப்பூர் என்னுமிடத்தில் அரசு பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்கான உணவை சமைத்து வைத்திருந்தார் சமையல்காரி கமலா வைஸ்ணவி.

இதனை தாழ்ந்த சாதியைச் சார்ந்த எட்டாம் வகுப்பு மாணவி ஒருவர் தொட்டு விட்டார். இதனால் அந்த மொத்த உணவும் தீட்டுப்பட்டு விட்டதாம். அதனால் அந்த உணவு முழுவதையும் குப்பையில் கொட்டி விட்டார் சமையல் காரி.

இந்த மொத்த நிகழ்வையும் செல்போனில் பதிவு செய்து சுழல விட்டுவிட்டார்கள். இது நாளுக்கு நாள் தாழ்ந்த சாதியினரிடையே வேகமாகப் பரவி வந்தது. மக்களின் ஆத்திரமும் உடன் வளர்ந்தது. அது போராட்டமாக வெடித்தது. மக்கள் பள்ளிக் கூடத்தையும், பள்ளி தலைமை ஆசிரியரையும் முற்றுகையிட்டனர்.

ஜாதிவெறியைத் - தீண்டாமையை செயல் படுத்தியதற்காக சமையல் காரி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கவே, அந்த சமையல்காரி, பள்ளியிலிருந்து நீக்கப்பட்டாள்.

இதில் தீண்டாமையைச் செயல்படுத்திய அந்த நிகழ்வை செய்தியாகத் தராத, பத்திரிக்கைகள், 10 நாட்கள் போராட்டத்திற்கு பின் சமையல்காரி பதவியிலிருந்து நீக்கப்பட்டதை மட்டும் செய்தியாக விளம்பின.

இராஜஸ்தான் மாநிலம் பாசிஸ பரிவாரத்தால் ஆட்சிச் செய்யப்படும் மாநிலம். இந்த பாஸிஸ்டுகள் ஆட்சியில் அமர்ந்த நாள் முதலே ஜாதிக் கொடுமைகள் அதிகமாக நடக்கும் மாநிலமாக அது மாறி வருகின்றது.

இந்த மாநிலத்திலிருந்து தான் லலித் மோடி என்ற பெரும் பண முதலை, மக்கள் பணத்தைக் கொள்ளையடித்தவன், பத்திரமாக வெளிநாடு அனுப்பி வைக்கப்பட்டான். இது இவர்கள் ஆட்சியில் அமர்ந்தவுடன் நடந்தது. இதுதான் பாசிஸம். (செய்தி ஆதாரம்: **The Hindu eng July 10, 2018**)

பாதிக்கப்பட்ட மாணவியின் வீடியோ லிங்க்
**https://youtu.be/lyWFp5UvKxw**

**M.G.M**

# இஸ்லாம்! அரசியல்! அதிகாரம்!

## அரபுலக எழுச்சி



இறைவனைத் தவிர மற்ற அதிகார சக்திகளுக்கு அடி பணிவதும் அவ நம்பிக்கையின் ஒரு பகுதி என்றே குதுப் கருதினார். அவர் இப்படி எழுதினார் "இஸ்லாத்தில் இறை வணக்கம் என்பது வெறும் சடங்குகளை மட்டும் பின்பற்றுவதல்ல. மாறாக இறைவன் மீது முழுமையான நம்பிக்கை கொண்டு அவனுடைய கட்டளைக்கு, விருப்பத்திற்கு முழுவதுமாக அடிபணிவது ஆகும்.

**ஜாஹிலிய்யா, ஹாகிமிய்யா**

ஜாஹிலிய்யா சமூகம் எது என்பதை இப்படிக் கூறினார். "இஸ்லாத்திற்கு மாற்றமான கொள்கைகளை கொண்ட சமுதாயம் ஜாஹிலிய்யா சமூகம். இன்னும் தெளிவாக சொல்வதென்றால் இறைவைனைத் தவிர மற்ற எந்த ஒரு அரசு நிறுவனத்திற்கும் ஆட்சியதிகாரம் (இறையாண்மை) உண்டு என நம்பி அதை ஏற்றுக் கொண்ட சமுதாயம். இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகளே இல்லாத சமுதாயமும் ஜாஹிலிய்யா சமூகம் தான்".

குதுப்-ஐ பொறுத்தவரை ஜாஹிலிய்யா என்பது ஒரு மனிதனின் மீது மற்ற மனிதன் செலுத்தும் ஆதிக்கம் அல்லது அதிகாரம். நவீன உலகில் ஜாஹிலிய்யாவை எப்படி புரிந்து கொள்ள வேண்டும் என்றால் அங்கே மதமும் அரசும் தனித்தனியாக செயல்படும். நபியவர்களின் வருகைக்கு முன்னிருந்த ஜாஹிலிய்யா கொள்கை மீண்டும் உயிர்தெழுந்து இன்று உலகை கவ்விக் கொண்டுள்ளது என்று குதுப் எடுத்துரைத்தார்.

ஹுக்ம் (ஆட்சி செய்தல், அரசாளுதல்) என்ற அரபி வார்த்தையிலிருந்து ஹாகிமிய்யா என்ற கருத்தை முன் வைத்தார் குதுப். ஹாகிமிய்யா என்பது எல்லாவற்றிக்கும் மேலான தலைமை அரசாங்கம் மற்றும் சட்ட அதிகாரம் படைத்தது. அல்லாஹ்வே தலைமை அரசன், சட்ட அதிகாரம் படைத்தவன். குதுப் உடைய வார்த்தையில் சொல்வதென்றால் ஹாகிமிய்யா என்பது அல்லாஹ்வின் ஷரியத்தே சட்டத்தின் அடிப்படை ஆகும். இறைவன் இவ்வுலகில் வந்து ஆட்சி செய்யவில்லை ஆனால் தன்னுடைய ஷரியாவை அதற்காக அனுப்பியுள்ளான். ஜாஹிலிய்யாவில் மனிதனின் ஹாகிமிய்யா உள்ளது. இஸ்லாத்தில் இறைவனின் ஹாகிமிய்யா உள்ளது.

**இந்தியாவில் ஏற்பட்ட இஸ்லாமிய அரசியல் மறுமலர்ச்சி**

அரபு உலகில் மட்டும் தான் இஸ்லாமிய அரசியல் மறுமலர்ச்சி ஏற்பட்டது என்று சொல்லிவிட முடியாது. தெற்கு ஆசியாவிலும் இஸ்லாத்தை மையப்படுத்தி அரசியல் எழுச்சி ஏற்படவே செய்தது. 1707லிருந்து 1857 வரை உள்ள முகலாயர்களின் ஆட்சி பலவீனமான ஆட்சி என்றே கூறப்படுகிறது. இந்த காலக்கட்டத்தில் தான் இஸ்லாமிய மறுமலர்ச்சியை ஏற்படுத்திடவும், மேலை நாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் கலாச்சார மற்றும் அரசியல் தாக்குதல்களுக்கு எதிராகவும் போராடிட சிலர் முன் வந்தனர். அவர்களுள் முன்னோடியாக இருந்தவர் ஷா வலியுல்லாஹ். அதன் பின்னர் செய்யத் அஹ்மத் ஷஹீத்.

**ஷா வலியுல்லாஹ்**

அரசியல், தத்துவம், ஆன்மீகம், ஆய்வறிவு மற்றும் சமயம் இவற்றில் ஷா வலியுல்லாஹ் விட்டு சென்ற கொள்கைகள் அவருக்கு அடுத்து வந்த உலமாக்கள் தலைமுறையில் மட்டும் அதிர்வலைகளை ஏற்படுத்திடவில்லை. மாறாக அவரின் தாக்கம் இன்றும் இருந்து கொண்டு தான் இருக்கின்றது. தெற்கு ஆசியாவில் இன்று ஏற்படுத்தப்பட்டிருக்கும் பல பாடசாலைகளிலும் இஸ்லாமிய அறிவு ஜீவிகளின் வட்டாரத்திலும் அவருடைய தாக்கம் இல்லாமல் இல்லை.

ஷா வலியுல்லாஹ்வின் குடும்பம் டெல்லியில் வாழ்ந்த முஸ்லிம் அறிஞர்களை கொண்ட குடும்பம். அவர்களுடயை குடும்பத்தில் தோன்றிய பலர் மிகச்சிறந்த அறிஞர்களாகவும் கல்விமான்களாகவும் வாழ்ந்து பல சமூக சீர்திருத்தங்களை

மேற்கொண்டுள்ளனர். ஷா வலியுல்லாஹ்வின் வழித் தோன்றல்கள் ஹதீஸ் துறையிலும், இந்திய துணை கண்டத்தில் பல கல்விக்கூடங்களை ஏற்படுத்துவதிலும் மிகச்சிறந்த பங்களிப்பை செய்துள்ளனர்.

முஹலாய மன்னர் ஔரங்கசீப் மறைவிற்கு நான்கு ஆண்டுகள் முன் *1703*ஆம் ஆண்டு ஷா வலியுல்லாஹ் பிறந்தார். அவரின் தந்தையான அப்து அர்ரஹீமும் மிகச்சிறந்த இஸ்லாமிய அறிஞர் ஆவார். குர்ஆனை முழுமையாக மனனம் செய்தார் ஷா வலியுல்லாஹ்.

இலக்கணம், தர்க்கவியல், தத்துவவியல், பெர்சியன் மற்றும் அரபி மொழிகளை ராஹிமிய்யா என்ற அவருடைய தந்தை ஏற்படுத்திய மதரசாவில் கற்றுணர்ந்தார். அறிவுத்தேடல், மெய்ஞானம் இவற்றில் அவருடைய தந்தை கொண்ட ஈடுபாட்டினை கண்டு மிகவும் உத்வேகம் பெற்றார் ஷா வலியுல்லாஹ்.

ஒரு தருணத்தில் இப்படிக் கூறினார். "நான் சிறுவனாக இருக்கும் பொழுதும், மாணவனாக இருக்கும் பொழுதும் என்னுடைய தந்தை என் மீது செலுத்திய கவனிப்பு, காட்டிய அக்கறையைப் போன்று எந்த தந்தையும் தன் மகனுக்கு வழங்கி யிருக்க முடியாது" **(Saints and Saviours of Islam).**

ஹதீஸ் துறையில் ஷா வலியுல்லாஹ்வின் போதனை முறையை கவனித்தால் அவர் எந்த அளவுக்கு அறிவுத்திறமை மிக்கவர் என்று புலப்படும்.

ஹிஜாசில் தங்கியிருந்த ஒன்றரை வருடம் சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்ளவும், சமயம், அரசியல், சமூகம் தொடர்பான கருத்துகளில் புலமை பெறவும் அவருக்கு உதவியாக அமைந்தது.

அவரின் சிந்தனைகள் அனைத்துமே அறிவு, கல்வி சீர்திருத்தம் இவற்றில் சுழன்று வந்தாலும் எந்த ஒரு சீர்திருத்தமும் ஆயுத போராட்டம் இல்லாமல் முழுமையான பயனை தந்திடாது என்று கூறினார்.

ஆப்கான் மன்னர் அஹ்மத் ஷா அப்தலிக்கும் முகலாய பேரரசின் பிரதம மந்திரிக்கும் இரண்டு கடிதங்களை ஷா வலியுல்லாஹ் எழுதினார். முஸ்லிம்களின் அரசியல் பலம் வீழ்ந்து வருவதை குறித்துத் தன்னுடைய கருத்தையும் கவலையையும் அந்த கடிதத்தில் பிரதிபலித்திருந்தார்.

மன்னர் அப்தலிக்கு எழுதிய முதல் கடிதத்தில், முஸ்லிம் சமுதாயத்தின் ஒற்றுமைக்கு எதிராக யாரெல்லாம் செயல்படுகிறார்கள் என்பதை குறிப்பிட்டிருந்தார்.

"நான் எதற்காக இக்கடிதத்தை எழுதுகிறேன் என்றால் இஸ்லாத்தின் மரியாதையும் அதன் கண்ணியமும் இப்பொழுது ஆபத்தில் உள்ளது. உறுதியான ஆட்சியாளரால் இதனைத் தடுத்திட முடியும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

முகலாயப் பேரரசருக்கு எழுதிய கடிதத்தில், "முஸ்லிம்களின் ஆட்சியை மீண்டும் நிலை நாட்ட வேண்டும் என்றால் நாம் முதலில் ஜிஹாது புரிய வேண்டும். அதனால் இம்மையிலும் மறுமையிலும் நாம் எதிர்பார்த்த பலன் கிடைக்கும்" என்று எழுதினார் ஷா வலியுல்லாஹ்.

அவரின் சிந்தனைகள் ஆன்மீக கருத்துகளோடு மட்டும் நின்று விடவில்லை. அரசியல், பொருளாதாரம் குறித்தும் தனது ஆலோசனைகளை அவர் வழங்கியுள்ளார்.

வறியவர்களுக்கும் செல்வந்தர்களுக்கும் இடையே உள்ள சமத்துவமின்மை மற்றும் இடைவெளியை குறைக்க நிலச் சீர்திருத்தம் குறித்தும் பேசியுள்ளார். அரசியல் பிரச்சனைகள் பற்றி ஆய்வு கட்டுரைகளை அதிகமாக எழுதியுள்ளார் ஷா வலியுல்லாஹ்.

**Hujjat Allah al-Balighah** மற்றும் **Al-Budur al Bazighah** போன்ற கட்டுரைகளில் தன்னுடைய அரசியல் பார்வையை பதிவு செய்துள்ளார்.

கிலாபத்தை நிறுவுதலே இஸ்லாமிய அரசியல் அமைப்பின் தனி அடையாளம் என்ற அவருக்கு முன் வாழ்ந்தவர்களின் கருத்தையே ஷா வலியுல்லாஹ்வும் கொண்டிருந்தார்.

கிலாபத்தை ஏன் நிறுவ வேண்டும் என்பதற்கு அவர் இரண்டு காரணங்களை கூறினார். ஒன்று, நீதியை வழங்கிட. இரண்டு, முஸ்லிம் சமுதாயதிற்காக. கிலாபத் அவசியம் என்றே அவர் வாதாடினார்.

நபி(ஸல்) அவர்களின் குறிக்கோளை நிறைவேற்றிடவே கிலாபத் நியமிக்கப்பட்டுள்ளது என்று கருதினர் ஷா வலியுல்லாஹ்.


கிலாபத் இல்லையென்றால் மனித இனம் குழப்பத்தில் மூழ்கி விடும் என்று ஷா வலியுல்லாஹ் கூறிய கருத்தை தான் செய்யத் குதுப் *250* வருடங்களுக்கு பின் கூறினார். இன்ஷா அல்லாஹ் தொடரும்

**- அபூ ஹாசின்**



# இவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள்?

## தமிழகத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சாதாரண முஸ்லிம்களின் வரலாறு



இஸ்லாம் எதிர்ப்பால் வளர்ந்த மார்க்கம் என்றதொரு கருத்து பரவலாக காணப்படுகிறது. இஸ்லாம் தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை எதிரிகள் இந்த மார்க்கத்தை அழிப்பதற்கு பல்வேறு சூழ்ச்சிகளை கட்டவிழ்த்து விடுகின்றனர். ஆனால் அந்த சூழ்ச்சிகளையெல்லாம் முறியடித்து எல்லாம் வல்ல அல்லாஹ் இந்த மார்க்கத்தை மேலோங்கச் செய்து விடுகின்றான். ஆம் இஸ்லாத்தை அழிப்பதற்காக அவர்கள் செய்யும் செயல்களை அடிப்படையாக கொண்டு இஸ்லாத்தை ஆராய்பவர்கள் கடைசியாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு இந்த மார்க்கத்தை மேலோங்க செய்கின்றனர்.

2001ஆம் ஆண்டு அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட போதும் இதுதான் நடந்தது. அதுவரை இல்லாத அளவிற்கு அமெரிக்காவில் இஸ்லாம் வேகமாக பரவ ஆரம்பித்தது. பிரிட்டனின் பிரபல பத்திரிக்கையாளர் சகோதரி யுவான்னி ரிட்லியும் அதன் தாக்கத்தால் இஸ்லாத்தில் இணைந்தவரே. நான் நேர்வழி பெற்ற சம்பவமும் இப்படித்தான் நடந்தது...

என்னுடைய பெயர் அஷ்ரஃப் இஸ்லாம். என்னுடைய பழைய பெயர் கேசவன் தேவா. வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னையை பூர்வீகமாக கொண்டவன் நான். என்னுடைய குடும்பம் மிகப் பெரிய கூட்டுக் குடும்பமாகவும், ஹிந்து மதத்தைப் பின்பற்றக் கூடியவர்களாகவும் இருந்தனர்.

பிறப்பால் நான் இந்துவாக இருந்தாலும், சிறு வயதிலேயே எனக்கு இந்து மதத்தின் மேல் இருந்த நம்பிக்கை போய் விட்டது. அதற்கு காரணம் இந்து மத கடவுள்கள் பற்றிய சரியான விளக்கம் எனக்கு கிடைக்காததேயாகும். ஆதலால் நான் ஆறாம் வகுப்பு படிக்கும் போதே கடவுளே இல்லை என்ற பெரியாரிசக் கொள்கைக்கு சென்று விட்டேன்.

பெரியாரிய கருத்துக்களை எல்லாம் தெரிந்து கொண்டு இந்து மத கடவுள்களை விமர்சித்து வந்தேன். எந்த அளவிற்கு என்றால் என்னுடைய நண்பர்களில் சிலர் ஒவ்வொரு வருடமும் சபரி மலைக்கு மாலைப் போடுவார்கள். அவர்களிடத்தில் நான் மோசமாக விவாதிப்பேன். என்னுடைய பேச்சைக் கேட்ட சில நண்பர்கள் மாலைப் போடும் பழக்கத்தையே விட்டுள்ளனர். சிலர் என்னுடைய நட்பையும் துண்டித்துள்ளனர். இப்படியே என்னுடைய வாழ்க்கை சென்றுக் கொண்டிருந்தது.

**இன்னோசன்ஸ் ஆஃப் முஸ்லிம்ஸ்**

2012 செப்டம்பர் மாதம் முஸ்லிம்கள் அவ்வளவு எளிதில் மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கின்றேன். கோடிக்கணக்கான இஸ்லாமியர்களின் உயிரினும் மேலான முஹம்மத் நபி(ஸல்) அவர்களை இழிவுப்படுத்தும் வகையில் இன்னோசன்ஸ் ஆஃப் முஸ்லிம்ஸ் என்ற திரைப்படம் ஒன்று வெளிவந்தது.

உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்களின் உணர்வலைகளை தூண்டிய இத்திரைப்படம் மொத்தமாக 75 முஸ்லிம்களின் உயிரை காவு வாங்கியது. உலகம் முழுக்க போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள். தமிழக முஸ்லிம்களும் விதி விலக்கல்ல. சென்னையில் அமெரிக்கத் தூதரகம் முற்றுகை போராட்டத்தில் தாக்கப்பட்டது. தமிழகம் முழுவதும் ஆங்காங்கே போராட்டங்கள் வெடித்தன.

முஸ்லிம்கள் வெளிக்காட்டிய இந்த உணர்வலைகள், உலகம் முழுவதும் உள்ள மாற்று மதத்தவர்களை யார் இந்த முஹம்மத்(ஸல்) என்று சிந்திக்கத் தூண்டியது. நெதர்லாந்தின் பிரபல அரசியல்வாதி அர்னாடு வேண்டுன் உட்பட பல மேற்கத்திய சிந்தனையாளர்கள் இஸ்லாத்தைத் தழுவினார்கள்.

மேற்கத்திய நாடுகளில் மட்டுமல்ல இதன் தாக்கம் ஆசிய கண்டத்தையும் விட்டு வைக்க வில்லை. கம்யூனிஸ நாடான சீனாவில் இந்த சம்பவத்திற்கு பின் தான் இஸ்லாம் மேலோங்க ஆரம்பித்தது. இந்தியாவிலும் இதே நிலைதான். அந்த வரிசையில் நானும் ஒருவன்.

அந்த திரைப்படம் வருவதற்கு முன் எனக்கு முஹம்மத்(ஸல்) அவர்கள் யார் என்றே தெரியாது. எனக்கு சிறு வயதிலிருந்தே சில இஸ்லாமிய நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த மனிதரைப் பற்றி யாரும் எனக்கு கூறியதில்லை.

இன்னோசன்ஸ் ஆஃப் முஸ்லிம்கள் என்ற திரைப்படத்திற்கு தமிழக முஸ்லிம்கள் காட்டிய எதிர்ப்பை கவனித்த நான், யார் இந்த முஹம்மத்(ஸல்), எதற்காக அவருக்காக இவ்வளவு வீரியமாக போராடுகிறார்கள். அவர் அப்படி இந்த உலகிற்கு என்னதான் சொன்னார்? என்று சிந்திக்க ஆரம்பித்தேன். அதன் பின் நான் இந்த மனிதரைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்று முடிவெடுத்தேன்.

**என்னைக் கவர்ந்த முஹம்மத்(ஸல்)**

அதற்காக தேடிக் கண்டுபிடித்து பெரம்பூர் IFT யில் முஹம்மத்(ஸல்) அவர்களைப் பற்றின ஒரு வரலாற்று புத்தகத்தினை வாங்கினேன்.

அந்தப் புத்தகத்தைப் படிக்க தொடங்கும் போது நான் என்ன நினைத்தேன் என்றால் இவர் ஒரு மதத்தின் தலைவர் நிச்சயமாக இவருடைய வாழ்வு ஓர் அதிசயம் போல இருக்கும். மிகப்பெரிய செல்வந்தராக இருந்திருப்பார். அவருக்கு நிறைய சக்திகள் இருக்கும் அதைக் கொண்டு அவர் மக்களின் குறைகளை தீர்த்திருப்பார் என்று தான் நினைத்துப் படிக்கத் தொடங்கினேன்.

நான் எதிர்பார்த்தது போலவே அவரது பிறப்பின் சம்பவங்களைப் படிக்கும் போது, அவர் பிறந்த போது வானத்தில் ஒரு பேரொளி தென்பட்டது. அதன் வெளிச்சத்தால் சிரியாவின் கோட்டைகள் மிளிர்ந்தன என்றெல்லாம் இருந்தது. ஆனால் அடுத்தடுத்து அவரது வாழ்வைப் பற்றிய வாசிப்பில் பயணிக்கும் போது நான் அதிர்ந்து விட்டேன்.

அவருடைய குழந்தை பருவம், அவருடைய இளமைப் பருவம், அவருக்கு இறைச் செய்திக் கிடைக்கும் தருணம், அதை மக்களிடையே எடுத்து வைக்கும் போது அவர் பெற்ற துன்பங்களும் இன்னல்களும், கொண்ட கொள்கைக்காக பிறந்த ஊரை விட்டு வேறு ஊருக்கு சென்றது, அடுத்த பத்தாண்டுகளில் அந்த சமுதாயத்தை மிகச்சிறந்த சமுதாயமாக மாற்றியது என அவருடைய வாழ்வின் வாசிப்பில் பயணித்து முடித்தவுடன் இவரை விட மிகச் சிறந்த மனிதரின் வாழ்வை நான் கண்டதில்லை என்ற நிலைக்கு நான் வந்து விட்டேன்.

ஆனால் அவர் போதிக்கும் ஒரே ஒரு விஷயம் மட்டும் என்னுடைய கொள்கைக்கு மாறுபட்டதாக இருந்தது.

அதுவரை கடவுளே இல்லை என்ற கொள்கையில் இருந்த நான், கடவுள் இருக்கிறானா? இல்லையா? என்ற ஒரு குழப்பமான மன நிலைக்கு மாறினேன். இறைவனைப் பற்றியத் தேடலில் இறங்கினேன்.

**கடவுளைப் பற்றின தேடலின் விடை கிருஸ்தவமா?**

அந்த சமயத்தில் நான் ஓர் ஏற்றுமதி நிறுவனத்தில் வேலை செய்துக் கொண்டிருந்தேன். அங்கு என்னுடன் ஜோஷ்வா ராஜா என்ற சகோதரர் பணி புரிந்து வந்தார். அவர் தீவிரமான கிருஸ்தவர் ஆவார். அவரிடத்தில் நான் ஒரு முறை கடவுள் என்று ஒருவர் உண்மையில் இருக்கிறாரா? என்று கேட்டேன்.

அதற்கவர் ஆம். கர்த்தராகிய இயேசு கிருஸ்து தான் கடவுள். அவர் தான் மனிதர்களுக்கு வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறார் என்று கூறி வரும் வாரம் என்னுடன் சர்ச்சிற்கு வா என்று என்னை அவர் வழிபடும் சர்ச்சிக்கு அழைத்து சென்றார்.

அங்கே போனவுடன் வியந்து விட்டேன். காரணம் அது சர்ச் மாதிரியே இல்லை. சினிமா தியேட்டர் போல இருந்தது. நிறைய பணக்காரர்கள் அங்கு வந்தனர். காலை 6 மணிக்கு இறை வணக்கம் ஆரம்பித்தது.

ஒரு மனிதர் கோர்ட் ஷூட்டெல்லாம் போட்டுக்கொண்டு பைபிளில் உள்ள வசனங்களை வாசித்து பிரசங்கித்தார். இயேசுவை கடவுளாகவும், கடவுளுடைய குமாரனாகவும் ஏற்றுக் கொள்ளாத வரை நீங்கள் பரலோக ராஜ்ஜியத்தை அடைய முடியாது என்று பிரசங்கித்தார்.

பின்னர் பாடல்கள் ஆரம்பித்தது. முதலில் மெல்லிய மெட்டுக்களுடன் பாடல்களை தொடங்கினர். பின்னர் பரவச நிலையை அடைந்த பலர் அழுதுப் புலம்பினர். சிலர் கைகளைத் தட்டிக்கொண்டு ராஜா தெரிகிறார் ராஜா தெரிகிறார் என்று கத்தினர். பின்னர் மீண்டும் மெல்லிய மெட்டுடன் முடித்தனர்.

பின்னர் காணிக்கைக்கான பிரசங்கம் நடந்தது. அவர் பேசி முடித்தவுடன் ஒருவர் உண்டியலுடன் ஒவ்வொருத்தரிடமும் வந்தார். நிறைய பேர் ஆயிரம் ஐநூறு என போட்டார்கள்.

அதன் பின் ஒரு சில நிமிடங்கள் மௌனமாக இருந்து ஜெபம் செய்தனர். சபையே அமைதியானது. பின்னர் அனைவரும் கலைந்தனர். அப்போது என்னை அழைத்து வந்த ஜோஷ்வா என்ற சகோதரர் என்னை அந்த பாஸ்டரிடம் அறிமுகப்படுத்தினார்.

அவர் என் நெற்றியில் கை வைத்து பரலோகத்தில் இருக்கும் பிதாவே உன் அடியானாகிய இந்த பாலகனுக்கு நேர்வழிகாட்டு என்று பிரார்த்தித்து எனக்கு ஒரு பைபிளையும், ஒரு சில கிருஸ்தவ புத்தகங்களையும் கொடுத்தார். பின்னர் என்னிடம் ஞானஸ்தானம் எடுத்துக் கொள்கிறீர்களா? என்று கேட்டார் நான் சிறிது காலம் சென்றவுடன் எடுத்துக் கொள்கிறேன் என்று கூறினேன்.

அன்று முதல் கிருஸ்தவ மதத்தில் ஈடுபாடோடு இருக்க ஆரம்பித்தேன். நான் கிருஸ்தவனாக மாறப்போவதாக வீட்டில் கூறினேன். அவர்களும் சரி இவன் கடவுளே இல்லை என்று சுற்றிக் கொண்டிருந்தான். இப்போதாவது புத்தி வந்ததே என்று விட்டு விட்டார்கள்.

தினமும் காலை மூன்று மணிக்கு எழுந்து நானும் ஜோஷ்வா பிரதரும் அவரது வீட்டில் பிரார்த்தனை செய்வோம். வாரம் தோறும் தவறாமல் சர்ச்சுக்கு சென்று விடுவோம். மூன்றே மாதங்களில் பைபிளைப் படித்து கிருஸ்தவ மதத்தை பிரச்சாரம் செய்யும் அளவுக்கு மிகவும் ஈடுபாடோடு இருந்தேன்.

என்னுடைய உறவினர்களுக்கு கிருஸ்தவ மதத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்தேன். இனி என்னுடைய வாழ்வு கிருஸ்தவ மதத்தில் தான் என்று நினைத்து நிறைய திட்டங்களெல்லாம் வகுத்து வைத்திருந்தேன். ஆனால் வல்லோன் அல்லாஹ் என்னுடைய வாழ்வில் வேறு திட்டங்களை வகுத்து வைத்திருந்தான். ஆம்....

**இஸ்லாமா? கிருஸ்தவமா? எது நேர்வழி?**

நான் பணிபுரிந்த அந்த நிறுவனத்தில் செய்யது முஹம்மது என்ற ஓர் இஸ்லாமிய சகோதரர் புதிதாக வேலைக்கு வந்திருந்தார். அவருடன் எனக்கு இரவு நேர வேலைப் போடப்பட்டது. நானும் சரி என்று ஒத்துக் கொண்டேன்.

முதல் நாள் நாங்கள் இருவரும் சந்தித்துக் கொண்டு வேலையை தொடங்கினோம். தேனீர் இடைவேளை வந்தது. அப்போது நான் அவரிடம் எனக்கு உங்கள் மதத்தலைவர் முஹம்மத்(ஸல்) அவர்கள் பற்றி தெரியும் நல்ல மனிதர் அவர் என்று கூறினேன். அதற்கவர் நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட சகோதரரா? என்று கேட்டார்.

இல்லை நான் ஒரு கிருஸ்தவன். இயேசு தான் என்னுடைய கடவுள். முஹம்மத்(ஸல்) அவர்கள் பற்றி படித்திருக்கின்றேன் என்று கூறி நான் படித்தவற்றை அவரிடம் கூறினேன். அதற்கவர் என்ன தம்பி நீ இவ்வளவு தெரிந்து வைத்திருக் கிறாய் இன்னும் இஸ்லாத்தை ஏற்கவில்லையா? என்று கேட்டார்?

நான் ஏன் இஸ்லாத்தை ஏற்க வேண்டும். இயேசுதான் பரலோக ராஜ்ஜியத்திற்கான வழி என்று அவரிடம் கூறினேன். அதற்கவர் நீ குர்ஆன் படித்திருக்கிறாயா? என்று என்னிடம் கேட்டார். நான் அவரிடம் இல்லை என்று கூறினேன்.

உடனே அவர் சரி நீ நாளைக்கு வரும் போது பைபிள் கொண்டு வா, நான் வரும் போது குர்ஆன் கொண்டு வருகின்றேன். இருவரும் விவாதிப்போம் என்றார். நானும் சரி என்றேன்.

அடுத்த நாள் அவர் குர்ஆனோடு வந்தார். நானும் சொன்ன படி பைபிளை கொண்டு வந்தேன். அதே போல தேனீர் இடைவெளியில் அமர்ந்தோம். அவர் என் கையிலிருந்து பைபிளை வாங்கி புதிய ஏற்பாட்டில் ஓரிறைக்கொள்கையை போதிக்கும் பல வசனங்களை படித்துக் காட்டி அதற்கான விளக்கத்தையும் கொடுத்தார். அதன் பின் பைபிளில் இயேசுவுக்கு பின் ஒரு இறைத் தூதர் வருவார். அவர்தான் நீ தெரிந்துக் கொண்ட முஹம்மத் நபி(ஸல்) என்று கூறி அதற்கான வசனங்களையும் காட்டினார். அந்த தருணத்தில் எனக்கு உண்மையில் அசிங்கமாக இருந்தது. இத்துனை நாளாக ஏமாந்து விட்டோமே என்று.

அதன் பின் அவர் இஸ்லாம் பற்றி ஒவ்வொன்றாக எனக்கு விளக்க ஆரம்பித்தார்.

அவர் பேசி முடித்தவுடன் எனக்குள் ஒரு விதமான பயம் வந்து விட்டது. அதன் பின் எங்களுடைய வேலை நேரம் முடிந்ததால் கிளம்பிவிட்டோம். கடைசிவரை அவர் கொண்டு வந்த குர்ஆனை காட்டவேயில்லை. அப்படியே கொண்டு சென்று விட்டார். அடுத்த நாள் அவர் வேலைக்கே வரவில்லை. வேலையை விட்டு நின்று விட்டார்.

பைபிளில் அவர் கூறிய வசனங்கள் எனக்குள் ஓடிக்கொண்டிருந்தது. அன்று வெள்ளிக்கிழமை. நாளை மறு நாள் சர்சுக்கு போய் பாஸ்டரிடம் அவர் கேட்ட கேள்விகளை கேட்க வேண்டும் என்று முடிவு செய்தேன். ஆனால் இடையில் சனிக்கிழமை அன்று ஜோஷ்வா பிரதரிடம் இதைப் பற்றி கேட்டேன். அவர் என்னிடம் அந்தாள் கூடலாம் பேசாத இப்படிதான் மூளைய குழப்புவானுங்க பைத்தியக்காரனுங்க என்று கூறிவிட்டார்.

அடுத்த நாள் ஞாயிற்றுக் கிழமை சர்ச்சுக்கு சென்றவுடன் நேராக பாஸ்டரிடம் சென்று அந்த சகோதரர் பைபிளில் எடுத்துக் காட்டிய குற்றச்சாட்டுகளை அப்படியே அவரிடம் கேட்டேன். அதற்கவர் இப்படியெல்லாம் உன்னுடைய சிந்தனைகளை மிகைப்படுத்தாதே. கர்த்தரின் கற்பனைகளில் சந்தேகம் வந்தால் பரலோக ராஜ்ஜியத்தை இழந்து விடுவாய் என்று கூறினார்.

அவருடைய இந்த பதில் எனக்கு திருப்தியளிக்கவில்லை. இதில் ஏதோ தவறுள்ளது என்பதை மட்டும் என்னால் புரிந்துக் கொள்ள முடிந்தது. அன்று தான் நான் சர்ச்சுக்கு சென்ற கடைசி நாள் ஆகும். அதன் பின் நான் சர்ச்சுக்கு செல்வதை தவிர்த்தேன்.

அந்த நாட்களை என்னால் மறக்கவே முடியாது. என்னுடைய வாழ்வில் மிக மோசமான நாட்கள் அவை. பகுத்தறிவு சிந்தனையாளனாக இருந்து, கிருஸ்தவ மதத்தில் இணைந்து இஸ்லாத்தைப் பற்றி அரைகுறையாக தெரிந்து வைத்திருந்த அந்த காலக்கட்டத்தில் எனக்கு மிகவும் குழப்பமாகவே இருந்தது. என்னுடைய இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது.

**என்னை மாற்றிய குர்ஆன்**

அந்த நேரத்தில் தான் குர்ஆன் பற்றிய சிந்தனை வந்தது. நாம் இன்னும் குர்ஆனைப் படிக்கவேயில்லையே. சரி அதில் என்ன இருக்கிறது என்று தெரிந்துக் கொள்வோம் என்று குர்ஆனைப் படிக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன். ஆனால் எங்கு சென்று யாரிடம் கேட்பது என்று தெரியவில்லை.

அப்போது தான் என்னுடைய முகநூலில் "எனக்கு இஸ்லாம் பற்றி தெரிந்து கொள்ளவும், குர்ஆனைப் படிக்கவும் ஆர்வமாகவுள்ளது சரியான முறையில் இஸ்லாத்தைப் போதிப்பவர்கள் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள் என்று என்னுடைய போன் நம்பரையும், விலாசத்தையும் எழுதி பகிரங்கமாக ஒரு பதிவை போட்டேன்.

சுப்ஹானல்லாஹ்! அடுத்த ஒரு மணி நேரத்தில் 70க்கும் மேற்பட்ட தொலைப் பேசி அழைப்புகள் வந்தது. ஒரு சகோதரர் போன் செய்து, "ஜி நான் உங்கள் வீட்டிற்கு முன்னால் தான் நிற்கிறேன் வெளியில் வாருங்கள் என்று கூறினார். வெளியில் சென்று பார்த்தேன். ஒரு சகோதரர் நின்று கொண்டிருந்தார். கையில் குர்ஆன் ஒன்றும் இருந்தது.

அவர் என்னைப் பார்த்ததும் கட்டியணைத்துக் கொண்டார். பின் கையில் இருந்த குர்ஆனை என்னிடத்தில் கொடுத்துவிட்டு அவசரமாக வெளியில் செல்லவேண்டியுள்ளது. பிறகு வந்து உங்களை சந்திக்கிறேன் என்று கூறி சென்று விட்டார்.

என் கையில் குர் ஆன் வந்து விட்டது. ஆனால் நான் உடனே குர்ஆனைப் படிக்கவில்லை. காரணம் இந்தக் குர்ஆனில் என்ன இருக்கும். ஒரு வேலை நாம் குர்ஆனைப் படித்தவுடன் முஸ்லிமாக மாறிவிடுவோமோ என்ற பயத்தால் குர்ஆனை நான் படிக்கவில்லை. ஒரு வாரகாலமாக அதை படிக்காமலேயே வைத்திருந்தேன்.

ஆனாலும் எனக்குள் ஒரு தைரியம் பிறந்தது. இதில் என்னதான் இருக்கிறது என்று பார்த்துவிடலாம் என முடிவெடுத்து அதிகாலை 2 மணியிருக்கும் அதுவும் வெள்ளிக்கிழமை தான் எங்கள் வீட்டின் மொட்டை மாடிக்கு சென்று போர்வையை இழுத்து போர்த்திக் கொண்டு செல்போனில் வெளிச்சத்தில் குர்ஆனை திறந்தேன்.

திறந்தவுடன் என் கண்ணில் பட்ட வசங்கள் சூறத்துல் பகரா இரண்டாவது அத்தியாயத்தில் ஆரம்ப ஏழு வசனங்கள் தான். அந்த வசனங்களைத் தொடர்ந்து அந்த அத்தியாயத்தை வாசிக்க ஆரம்பித்தேன். வாசிக்கும் போதே எனக்குள் ஏதோ ஒரு உளவியல் மாற்றம் ஏற்படுவதை என்னால் உணர முடிந்தது. உடனே குர்ஆனை மூடி தரையில் போட்டுவிட்டேன். அதன் பின் அந்த குர்ஆனை எடுத்துக் கொண்டு போய் என்னுடைய அலமாரியில் மறைத்து வைத்து விட்டு படுத்து விட்டேன்.

ஆனால் தூக்கமே வரவில்லை. அந்த வசனங்கள் தான் சிந்தனையில் இருந்தன. உண்மையில் அந்த வசனங்கள் எனக்குள்

மிகப்பெரியத் தாக்கத்தை ஏற்படுத்தி விட்டன. இதற்கு முன் நான் இரண்டு முறை பைபிளை முழுமையாக(புதிய ஏற்பாடு) படித்துள்ளேன். ஆனால் இது போன்ற உணர்வு எனக்கு எப்போதும் ஏற்பட்டதில்லை. ஆனால் குர்ஆனின் வெறும் ஏழு வசனங்கள் நமக்குள் இவ்வளவு மாற்றத்தை ஏற்படுத்திவிட்டதே என்று ஆச்சரியமாக இருந்தது. மேலும் படித்தால் என்னவாகும். நான் குர்ஆனிய சிந்தனைகளுக்கு கட்டுப்பட்டு விடுவேனா? என்றெல்லாம் எண்ணங்கள் ஓடியது. அடுத்த ஒரு வாரம் இதைப் பற்றிதான் யோசனைகள் இருந்தன.

அதன் பின் துணிந்து ஒரு முடிவெடுத்தேன். இனி என்ன ஆனாலும் சரி. இந்தக் குர்ஆனை முழுவதுமாக நாம் படித்து முடித்து விட வேண்டும். ஒரு வேளை நான் முஸ்லிமாகத்தான் ஆக வேண்டும் என்று என்னுடைய விதியில் இருந்தால் அது அப்படியே நடக்கட்டும் என்று முடிவு செய்து குர்ஆனை படிக்க ஆரம்பித்தேன்.

நான் பயந்தது போலவே நடந்தது. ஆம் குர்ஆனை நான் முழுவதுமாக கூட படிக்கவில்லை. மர்யம் சூறா முடிக்கும் போதே எனக்குள் ஈமான் வந்து விட்டது. அதுவும் ஆழமாக வேரூன்றி விட்டது. உடனே என்னுடைய முகநூல் நண்பர் முஹம்மத் நிஜாம் என்பவருக்கு போன் செய்து எனக்கு தொழக் கற்றுக் கொடுங்கள் என்று கேட்டேன்.

அடுத்த நாள் அவர் என்னை அழைத்து சென்று பெரம்பூரில் உள்ள ஐ.எஃப்.டி.யில் அறிமுகப்படுத் தினார். அங்கு முஹம்மத் அஷ்ரஃப் என்ற ஒரு சகோதரர் என்னை தொழுகைக்கு அழைத்து சென்றார். அது ஜும்ஆவுடைய தினம். அதன் பின் அண்ணாநகர் சென்று நிஜாம் அவர்களை சந்தித்தேன். அவர் எனக்கு அந்தப் பகுதியிலுள்ள பள்ளிவாசலில் தொழுகையெல்லாம் கற்றுக் கொடுத்தார்.

பின்னர் இஸ்லாம் குறித்த சில புத்தகங்களையும் சமரசம் மாத இதழ் சிலவற்றையும், வைகறை வெளிச்சம் 2012 ஆகஸ்டு மாத இதழ் ஒன்றையும் கொடுத்துப் படிக்க சொன்னார்.

அதை வாங்கிக் கொண்டு வீட்டிற்கு வந்து அடுத்த ஒரு வாரத்தில் அவர் தந்த எல்லாப் புத்தகங்களையும் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது வைகறை இதழில் "காஷ்மீரின் பாதி விதவைகள்" என்ற கட்டுரையில் ஒரு காஷ்மீரத்துப் பெண்ணின் கண்ணீர் கடிதம் ஒன்று இடம் பெற்றிருந்தது. அந்தக் கட்டுரையைப் படித்த போது நிஜாம் அவர்களுக்கு போன் செய்து இந்த கட்டுரையின் ஆசிரியர் பற்றி விசாரித்தேன்.

அதற்கு அவர், "அந்த கட்டுரையின் ஆசிரியர் தமிழ் நாட்டோட மூத்த பத்திரிக்கையாளர் அந்த பத்திரிக்கையும் அவர் தான் நடத்துகிறார்" என்று கூறினார். அவரை சந்திக்க முடியுமா? என்றுக் கேட்டேன். அதற்கு அவர் முயற்சிப்பதாக கூறினார். அத்தோடு அதை நான் விட்டு விட்டேன்.

அதன் பின் IFT யின் நூலகத்தில் உறுப்பினராக தொடர்ந்து இஸ்லாம் குறித்த நூல்களையெல்லாம் படித்து இஸ்லாம் குறித்த தெளிவான புரிதலை ஏற்படுத்திக் கொண்டேன்.

பின்னர் நிஜாம் அவர்களுக்கு போன் செய்து நான் கலீமா கூற தயாராக இருப்பதாக கூறினேன். அவர் என்னை அன்று மாலை அண்ணாநகர் பள்ளிவாசலில் கலிமா சொல்ல ஏற்பாடு செய்துள்ளதாக கூறி அங்கு வரச் சொன்னார். நானும் அங்கு சென்றேன். ஆனால் அந்த பள்ளியின் இமாம் வெளி வேலையாக சென்றிருந்ததால். "நீ ஒரு முறை போனில் கேட்டாயல்லவா? ஒரு பத்திரிக்கையாளர் பற்றி அவரிடத்தில் கலீமா சொல்ல ஏற்பாடு செய்துள்ளேன் அங்கு செல்லலாம்" என்று கூறினார்.

இருவரும் அவரது வீட்டிற்கு சென்றோம். அன்றைய தினம் வெள்ளிக்கிழமை மாலை மஃக்ரிபிற்கு பின் வைகறை ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் கூற நான் கலீமா கூறி இஸ்லாமிய மார்க்கத்தை உளப்பூர்வமாக ஏற்றுக் கொண்டேன். பின்னர் ஏற்கனவே நான் தேர்வு செய்து வைத்திருந்த "அஷ்ரஃப் இஸ்லாம்" என்ற பெயரையே எனக்கு சூட்டப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ்.

**- அஷ்ரஃப் இஸ்லாம்.**


# வாங்கிப் படியுங்கள்

# மால்கம் - எக்ஸ்

**அமெரிக்க நிறவெறிக் கொள்கைக்கு எதிராகப் போராடிய**

## மாவீரனின் வரலாறு

# விலை. ரூ. 80.



# இஸ்லாமிய வங்கி முறை

# பங்கு வர்த்தகத்தின் மாற்று - சுகுக்..

பணம், முதலீடு மற்றும் வியாபாரத்தை சுற்றி இஸ்லாமிய வங்கி முறை திட்டம் அமைந்துள்ளதால் சுகுக் பற்றி தெரிந்து கொள்ளவேண்டியது அவசியம் ஆகிறது. இஸ்லாமிய வங்கிகளும் தங்களது பணத்தேவையை அதிகரிக்க சுகுக் முறையை அணுகுகின்றன.

சாதாரணமாக ஒரு நிறுவனம் நிதியை அதிகரிக்க நாடினால் அது அதன் பங்குகளை வெளியிடும். கிடைக்கும் தொகையில் தொழில் முதலீடு செய்து வருமானத்தை பெருக்கும் போது அதன் பங்குகள் மதிப்பும் உயரும். வாடிக்கையாளர் அதனை பங்கு சந்தையில் விற்று லாபம் அடைவர். அவர் வைத்திருந்த காலகட்டத்தில் அந்த நிறுவனம் ஈவுத்தொகை வழங்கினால் அதன் மூலமும் பயன் பெறுவார். இது பங்குசந்தையில் நீண்ட கால திட்டம் என்பர் **(long term investment ).**

மற்றொரு திட்டத்தின் பெயர் **intraday investment** ஆகும்.. **intraday** என்றால் ஒரு நாளுக்குள் என்று அர்த்தம்.

அதாவது இன்று நான் **intraday** திட்டத்தில் பங்குகளை வாங்கினால் அதனை இன்றைக்குள் விற்றுவிடவேண்டும். அதன் தொகை ஏறும்போது விற்றால் லாபம் அடைவோம். அதன் மதிப்பு சரிந்தால் நஷ்டம் அடைவோம். இப்படி யூகங்கள் அடிப்படையில் முதலீடு செய்வது சூதாட்டத்துக்கு சமம். இப்படி இருக்கும் பங்கு வர்த்தகத்தில் இஸ்லாம் எவ்வாறு தொழில் பெறுக வாய்ப்பு வழங்கியுள்ளது என்று பார்ப்போம்.

சுகுக் - இதன் அரபு மூல வார்த்தை சக் ஆகும், அதன் பொருள் சான்றிதழை குறிக்கும். சுகுக் என்பது பன்மை வார்த்தை ஆகும். இதை பற்றிய குறிப்பு ஹிஜ்ரி முதலாம் ஆண்டில் இருந்தே கிடைக்கிறது. இமாம் மாலிக் அவர்களின் முஅத்தா நூலில் இதை பற்றி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

7ம் நூற்றாண்டில் உம்மையாக்களின் ஆட்சியில் அரசே அதன் பணியாளர்களுக்கும் ராணுவ வீரர்களுக்கும் முதலீடு பத்திரத்தை (சுகுக்) வெளியிட்டுள்ளது.

ஒரு நிறுவனமோ, வங்கியோ, அரசோ தனது வளத்தை பெருக்கி கொள்ள இத்தகைய முதலீடு பத்திரங்களை தனது வாடிக்கையாளரிடம் விற்கலாம்.

அதற்கு சில அடிப்படை நிபந்தனைகள் உள்ளன.

1)முதலீடு பெறுவதற்கு தகுதியான சொத்துக்களை முதலில் கண்டுகொள்ளவேண்டும்.

2)அது இஸ்லாமில் அனுமதிக்கப்பட்ட பொருளாக இருக்க வேண்டும்.

3)அளவிடக்கூடியதாக இருக்க வேண்டும்

4)வருமானம் வழங்க கூடியதாக இருக்க வேண்டும்.

5)முதலீடு பத்திரத்தை எப்போது அந்நிறுவனம் திரும்பி பெற்றுக்கொள்ளும் என்கிற பின்தேதி குறிப்பிடவேண்டும்.

6)அடையப்போகும் லாப - நஷ்டத்தில் வாடிக்கையாளர் எவ்வளவு பெறுவார் என்று விளக்கவேண்டும்.

வாடிக்கையாளர் தனது பணத்தை முதலீடு செய்து முதலீடு பத்திரத்தை பெற்றுக்கொள்வார். அவரது பொருள்**(asset)** அங்கே பயன்படுவதால் அந்நிறுவனத்தின் லாபத்திலும் பங்கு பெறுவார்.

உதாரணம்:

ஒரு விமான நிறுவனம் முதலீடு நாடி தனது விமானங்களை அடிப்படை சொத்தாக வைத்து வாடிக்கையாளரிடம் ஒரு தொகையை பெறுகிறது. அவரவர் முதலீட்டுக்கேற்ப அந்த விமானத்தின் உரிமையை பெருவர். விமான நிறுவனத்தின் வழங்கிய சுகுக் முதிர்வு காலம் **(maturity period)** 5

ஆண்டுகள் என்று வைத்து கொள்வோம்.

இந்த 5 ஆண்டுகளில் மாத மதமோ அல்லது வருடத்திற்கோ விமான நிறுவனம் அடையும் லாபத்தில் அதன் பங்குதாரர்களுக்கு விமான நிறுவனம் வழங்கிக்கொண்டே இருக்கும்.

அதன் முதிர்வு காலம் முடிந்ததும் அவரவர் முதலீடு செய்ய தொகையை திருப்பு கொடுத்து தனது சொத்துக்களை மீட்டு தன்னகத்தே வைத்துக்கொள்ளும்.

விமான நிறுவனத்தின் பணத்தேவையும், வாடிக்கையாளருக்கு லாபம் கொண்டு சேர்க்கும் திட்டமே சுகுக் ஆகும். இது இப்போது பெரும் வளரச்சி அடைந்து கொண்டிருக்கும் திட்டம் ஆகும். லாப நஷ்டங்களை பகிர்தல் என்பது இஸ்லாத்தில் அடிப்படை என்பதால் இதில் ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டாலும் முதலீட்டிற் கேற்றவாறு பாதிக்கும்.முதிர்வு காலத்திற்கு முன் வாடிக்கையாளர் அவரது முதலீடு பத்திரத்தை பங்கு சந்தையில் விற்று பணமாக கூட மாற்றிக்கொள்ளலாம் என்னும் போது இது இப்போது உள்ள பங்கு வர்த்தகத்திற்கு மாற்றாக வரப்போகும் திட்டம் என்பது உணரமுடிகிறது.

**sukuk.com** என்ற இணையத்தளத்தில் பார்த்தால் பல நிறுவங்களின் திட்டங்கள் அவர்களுக்கு தேவையான தொகை மற்றும் முதிர்வு களமும் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

பங்கு சந்தை நிறுவனத்தில் முதலீடு செய்து அவர்கள் கொடுக்கும் அறிக்கையை மட்டும் நம்புவதை காட்டிலும் தனது பணம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது மேலும் தனது முதலீட்டிற்கு பாதுகாப்பாக உள்ள சொத்து எது என்று காட்டும் சுகுக் திட்டம் பல வகையில் சிறந்து விளங்குகிறது.

மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சட்டமானாலும் பொருளாதார திட்டமானாலும் நாசத்தை தான் தரும். காரணம் அதனை இயற்றியார் மனோஇச்சையை பின்பற்றி இருக்க கூடும் அல்லது ஒரு சார்பு சிந்தனையை கொண்டுருக்கலாம் அல்லது மனிதன் தவறு செய்வான் என்ற விதியில் அடங்கி போகும்.

இதற்கு உதாரணம் நம் கண் முன்னே பல இருக்கின்றன. சந்தையில் முதலீடு பெற்று கொண்டு பின்நாட்களில் காணாமல் போன நிறுவனங்களின் கணக்கோ எண்ணிக்கையில் அடங்கா.இவை அனைத்திற்கும் ஒரே தீர்வு ஷரீஅத் அடிப்படையில் அமைந்த இறை சட்டங்களே. இன்ஷா அல்லாஹ் தொடரும்

**அபுதாஹிர்**



# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.

ஒரு நீண்ட நெடும் காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடந்து நடந்து வருகின்றன. அல்லாஹ் எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறைகளையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றுள்ளார்கள். அன்பகம் கடந்த பத்து ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டிடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

இன்ஷா அல்லாஹ் அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழனுகும் படி அன்புடன் வேண்டுகிறோம்.

அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.

இவண்,

மு. குலாம் முஹம்மது, பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி, ஹாஜி. அப்துல் ரவூஃப்

**செக், டி.டி. அனுப்புவோர்**

## DARUL ISLAM FOUNDATION TRUST

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்

52/1, மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண் 7, மண்னடி, சென்னை - 600 001.

Please draw your cheques / DD infavour of **DARUL ISLAM FOUNDATION TRUST**
**CANARA BANK A/c. 1287101017301** branch St,mary's Road, R.A.puram, Chennai.
and send to: 52/1, Mannady Street, 4th Floor, Room No.7, Mannady, Chennai-600001
**Mobile : 81481 29887,** website: www.darultrust.in, Email: darultrust@yahoo.com,

# அண்ணல் அம்பேத்கரின் 127வது பிறந்த நாள்





அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 127வது பிறந்த நாளை முன்னிட்டு பீம் சேனா அமைப்பின் சார்பில் சென்னை புளியந்தோப்பு பகுதியில் சிறப்புக் கருத்தரங்கு நடத்தப்பட்டது. அதில் கலந்து கொண்டு சிறப்பித்தது தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்.

நமது தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக வைகறை வெளிச்சம் மாத இதழின் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது அவர்கள் "அமெரிக்காவின் நிறவெறிக் கொடுமைகளும் மாவீரன் மால்கம்–எக்ஸ் வாழ்க்கை வரலாறும்" எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்ச்சி குறித்த விரிவானத் தகவல்கள்;

சென்னை புளியந்தோப்பு லண்டன் மஹாலில் இனிதே தொடங்கிய நிகழ்ச்சியின் முதல் பேச்சாளராக தமிழ் நாடு மக்கள் கட்சியின் தலைவர் சே.இளையராஜா. உரையாற்றினார்.

ஆழமாக பல்வேறு தகவல்களை எடுத்துரைத்த அவர் பொதுமக்களாகிய நம்மை எப்படியெல்லாம் இந்த அரசு அடிமைப் படுத்துகிறது என்பதையும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், நம்மை சுற்றி நடக்கக் கூடிய போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் போன்ற வற்றின் பின்னணி என்ன என்பதை அவர் சுட்டிக் காட்டியது பயனுள்ளதாக இருந்தது.

# சென்னை புளியந்தோப்பில் சிறப்பு கருத்தரங்கம்.



அடுத்ததாக பேசிய சமத்துவ மக்கள் இயக்கத்தின் தலைவர் வழக்குறைஞர் விஷ்ணுகுமார் அவர்கள் தலித்களும் இஸ்லாமியர்களும் ஒன்றிணைவதின் தேவையைப் பற்றியும்,

“இந்த நாட்டின் மிகப்பெரிய பதவிகளில் இருப்பவர்களைக் கூட இந்துத்துவம் கோவில்களுக்குள் விடுவதில்லை. ஆனால் இஸ்லாம் சாதாரண மனிதனைக் கூட அரவணைத்து சகோதரத்துவத்தை நிலை நாட்டுகிறது.” என்று கூறி இஸ்லாம் முன்னிறுத்தும் சகோதரத்துவத்தை எடுத்துரைத்த போது பார்வையாளர்கள் மத்தியில் பலத்த கைத்தட்டல்கள் எழுந்தது.

மேலும் அண்ணல் அம்பேத்கரின் தீண்டாமையை குறித்தப் பார்வையைப் பற்றி குறிப்பிடும் போது “தீண்டாமை என்பது நடக்கும் தெருவிலோ, குடிக்கும் டம்ளரிலோ இல்லை. நமது உள்ளத்தில் தான் இருக்கிறது. அதை நாம் தூக்கி வீச வேண்டும். அதற்கு இஸ்லாம் தான் சரியானத் தேர்வு” என்று அவர் குறிப்பிட்டார்.

அடுத்து பேசிய நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அப்துர் ரஹ்மான் அவர்கள் “நான் ஏன் இஸ்லாத்தை ஏற்றேன்?” என்று விளக்கி கூறினார்.

அவர் இந்து மதத்தில் இருந்த போது அவருக்கு ஏற்பட்ட சாதிய தீண்டாமை கொடுமைகளையும் அதை எதிர்த்து போராடிய போது அவருக்கு ஏற்பட்ட இன்னல்களையும் எடுத்துரைத்தார்.

கிராமத்திலிருந்து நகரத்திற்கு வந்தால் சாதியை ஒழித்து விடலாம். நகரங்களில் சாதிய தீண்டாமையெல்லாம் இல்லை என்றெண்ணி நகரத்திற்கு வந்த அவர், “தாழ்ப்பட்ட மக்களுக்கு இங்குள்ள நகரவாசிகள் வீடு கொடுப்பதற்கே யோசிக்கிறார்கள்” என்பதைக் கூறிவிட்டு “சாதி என்பது இந்த சமூகத்தில் இந்து மதம் இருக்கும் வரை இருந்துக் கொண்டே தான் இருக்கும். இந்து மதம் ஒழிந்தால் தான் சாதியத் தீண்டாமையும் ஒழியும்” என்ற அம்பேத்கரின் கருத்துக்களை நினைவுப் படுத்தினார்.

அடுத்து பேசிய எழுத்தாளர் யாக்கன் அவர்கள் “இந்தியாவில் தீண்டாமைக் கொடுமைகளும். அம்பேத்கர் அவர்களின் போராட்ட வரலாறும்” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் போராட்ட வரலாறுகள் குறித்த நிறைய பயனுள்ளத் தகவல்களை எடுத்துரைத்தார். அதில் “சரியாக அம்பேத்கர் பொது வாழ்விற்கு வந்து தீண்டாமைக்கு எதிராக குரல் கொடுக்கத் தொடங்கும் அதேக் காலக்கட்டத்தில் தான் ஆர்.எஸ்.எஸ். பாசிச இயக்கம் தொடங்கப்



படுகிறது" என்று கூறிய போது அவர் எடுத்துரைத்த செய்திகளின் முக்கியத்துவம் புரிந்தது.

அடுத்ததாக நமது தாருஸ் இஸ்லாம் சார்பில் வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு.குலாம் முஹம்மது. அவர்கள் உரையாற்றினார்கள்.

"அமெரிக்காவின் நிறவெறிக்கொடுமைகளும், மாவீரன் மால்கம் எக்ஸ் அவர்களின் போராட்ட வரலாறும் என்ற தலைப்பில் அவர் உரையாற்றினார்.

தனது உரையில் இந்தியாவிற்கு ஏன் சுதந்திரம் வழங்கப்பட்டது? இந்திய சுதந்திரத்திற்கு காந்திக்கும் என்ன சம்பந்தம்? என்பதைக் கொண்டு ஆரம்பித்த அவர், "இந்தியா ஓர் இலாபமில்லாத நாடு என்பதால் தான் அவர்கள் நமக்கு சுதந்திரம் வழங்கியுள்ளார்கள். மாறாக நாம் போராடிப் பெற்ற சுதந்திரம் அல்ல இது" என்பதை பல்வேறு ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டினார்.

மேலும் இன்றைக்கு இந்துத்துவ பாசிஸ்டுகள் எப்படி ஆட்சிக்கு வந்தனர் என்பதையும், மோடியின் பாசிஸ ஆட்சி இப்போது எப்படி செயல் பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும், "கர்கரேயை கொலை செய்தது யார்? மற்றும் "26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?" போன்ற நூல்களை மேற்கோள் காட்டி விளக்கினார்.

பின்னர் தனது தலைப்பிற்குள் சென்ற அவர் "அமெரிக்காவின் நிறவெறிக்கொடுமைகளுக் கெதிராகப் போராடி தீர்வாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட" மால்கம் எக்ஸ் பற்றி உரையாற்றினார்.

அமெரிக்காவின் நிறவெறிக்கெதிராக துணிந்து நின்ற மால்கம் - எக்ஸ் எப்படி இஸ்லாத்திற்கு வந்தவுடன் அதை ஒழித்தார் என்பதை இந்தியாவின் அம்பேதரின் தீண்டாமைக்கெதிரான போராட்டத்தை ஒப்பிட்டு உரையாற்றினார். அது பார்வையாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை கொடுத்தது.

மேலும் இஸ்லாம் நடைமுறைப்படுத்தும் சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும் வந்திருந்தவர்களுக்கு விளக்கிக் கூறினார்.

நிகழ்ச்சியின் போது வேர்கள் வெளியீட்டகத்தின் புத்தகங்களான 26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்?, இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு ஆர்.எஸ்.எஸ். போன்ற நூல்களை, எழுத்தாளர் யாக்கன், வழக்குறைஞர் விஷ்ணுகுமார் மற்றும் இளையராஜா அவர்களுக்கு மு. குலாம் முஹம்மது அவர்கள் அன்பளிப்பாக வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் ஜாதி ஒழிந்தது நூல் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

அண்ணன் உமர் ஃபாரூக் அவர்களின் சாதி



ஒழிந்தது நூல் தமிழகத்தில் ஆயிரக் கணக்கானோரின் தீண்டாமைகளை ஒழித்து இஸ்லாத்தில் இணைய வைத்திருக்கிறது. இந்த வரிசையில் நிகழ்ச்சியில் நூலை அன்பளிப்பாகப் பெற்று சென்ற அனைவருக்கும் இஸ்லாம் விடுதலையளிக்க அர்ரஹ்மானிடம் பிரார்த்திப்போம். இன்ஷா அல்லாஹ்.

**நமது நிருபர்**



# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி(ரஹ்) 3

### மார்க்கத்தோடு விளையாடியவர்கள்

இஸ்லாத்தின் அடிச்சுவடுகளை பின்பற்றுவதில் மிகவும் உறுதியானவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். இஸ்லாத்திற்கு எதிராக அல்லது இஸ்லாத்தின் உண்மையான கொள்கைகளோடு விளையாடும் விதமாக யாரையும் நடந்து கொள்ள அவர் அனுமதித்ததில்லை. அப்படி யாராவது விளையாட முற்படுவார்களேயானால் அவர்களின் குற்றத்திற்கு ஏற்றாற்போல் தண்டணை வழங்கப்பட்டது. இதில் அவர் தனி கவனம் செலுத்தி வந்தார்.

இதைப்பற்றி அவரிடம் கேட்கப்பட்ட போது "நாம் சாலைகளை பொதுமக்கள் திருடர்களின் பயமின்றி பயன்படுத்தும் வகையில் பாதுகாப்பாக்கி வைத்திருக்கும் போது மார்க்கத்தை பாதுகாக்க முடியாதா? சாலைகளின் பாதுகாப்பை விட மார்க்கத்தை பாதுகாப்பது முக்கியமானதல்லவா?" என்று பதிலளித்தார்.

### அல்இமாதல் கதீப்

அல் இமாதல் கதீப் என்பவர் நூருத்தீன் ஸங்கி அவர்களின் ஆட்சி காலத்தில் ஷஃபான் 562ல் (கி.பி.1167இல்) டமாஸ்கசிற்கு வந்தார். ஹிஜ்ரி 569இல் அதாவது நூருத்தீன் ஸங்கி அவர்கள் இறந்த ஆண்டில் நடந்த சில சம்பவங்களை அவர் எழுதியுள்ள அல் பர்க் அஷ்ஷமி என்ற நூலில் நமக்கு சுட்டிக்காட்டுகிறார்.

"இந்த வருடத்தில் நூருத்தீன் ஸங்கி அவர்கள் தங்களுடைய பட்ஜெட்டில் தரும அறக்கட்டளைகளுக்கும் பழைய மஸ்ஜிதுகளை புதுப்பிக்கவும் அதிக நிதி ஒதுக்கினார். ஜிஸ்யா என்ற வரியையும் கரஜ் என்ற நில வரியையும் தவிர மற்ற வரிகளை நிறுத்தினார்.

நான் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைச்சுற்றேடுகளை இந்த வரி மாற்றம் சம்பந்தமாக தயாரித்து அனுப்ப பணிக்கப்பட்டேன். அந்த மாதங்களில் அவர் ஏழைகளுக்கு அளித்திருந்த தருமத்தினை கணக்கு பார்த்த போது அது 30000 தினார்களை தாண்டியிருந்தது. அவர் நாட்டின் எல்லா பகுதிகளில் இருந்தும் நேர்மையான மனிதர்களை வரச்செய்து அவர்கள் பகுதிகளில் தேவையான மனிதர்கள் யார் என்பதை கேட்டு பட்டியல் தயார் செய்து அதன்படி உதவி செய்தார்."

### பரிசுகள், அன்பளிப்புகள்

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் அவருக்கு பல மன்னர்கள் பரிசுகளை அனுப்பி வந்தார்கள். நூருத்தீன் ஸங்கி அவர்கள் அதனை தன் கையால் தொட்டது கூட கிடையாது. அவற்றையெல்லாம் நீதிபதிகளின் முன்னிலையில் கொண்டு வந்து அந்த பணத்தையெல்லாம் பழைய மஸ்ஜிதுகளை சீர் செய்யவும் புதிய மஸ்ஜிதுகளை கட்டவும் பயன்படுத்தினார்.

அவ்வாறு தேவையுள்ள மஸ்ஜிதுகள் டமாஸ்கசில் என்னென்ன என்று கணக்கிட்ட போது 100க்கும் மேற்பட்ட மஸ்ஜிதுகள் அவ்வாறு

சரிசெய்யப்பட வேண்டிய தேவையுள்ளவை என கண்டறியப்பட்டன. அந்த மஸ்ஜிதுகளை சரி செய்ய ஆஸ்திகளை அள்ளிக் கொடுத்தார்கள் ஸங்கி அவர்கள்.

அவர் செலவு செய்த தருமங்களை கண்டறிந்து எழுத வேண்டியிருந்தால் இந்த புத்தகம் போதாது அதனை எழுத. சுருக்க சொல்வதென்றால் அந்த கட்டடங்களை பார்த்தாலே ஸங்கி அவர்களின் அர்ப்பணிப்பை காண இயலும்.

நாட்டின் சில பகுதிகளில் சட்டம் ஒழுங்கு சரியில்லை என்றால் உடனே மார்க்கத்தை பிரசங்கம் செய்யும் நபர்களை அந்த பகுதிக்கு ஸங்கி அவர்கள் அனுப்பி வைப்பார்கள். இப்படி அவர்களுடைய அரசாங்கம் அதிக தாக்கம் கொண்டதாகவும் கட்டுக்கோப்பானதாகவும் திகழ்ந்தது." என்று கூறுகிறார் அல்இிமாதல் கதீப்.

### நபி (ஸல்) அவர்களை அப்படியே பின்பற்றுபவர்

அபுல் பர்கதுல் ஹசன் இப்னு ஹிபத்துல்லாஹ் என்பவர் ஒருமுறை தன் மாமாவுடன் நூருத்தீன் ஸங்கி அவர்களின் சபையில் பங்கேற்றார்.

பொதுவாக அந்த சபையில் மார்க்க சொற்பொழிவு நடைபெறுவது வழமை. இதன் மூலம் சில உபயோகமான பாடங்களை பெற்று வரலாம் என்பதற்காகத் தான் பர்கதுல் ஹசன் பங்கேற்றார்.

அப்போது நபி (ஸல்) அவர்களை பற்றிய நபிமொழி எடுத்து கூறப்பட்டது. அதில் நபி (ஸல்) அவர்கள் தங்களுடைய கழுத்தில் போர்வாளை தொங்கவிட்டவாறு வெளியில் சென்று வந்தார்கள் என்று கூறப்பட்டது. இது நூருத்துன் ஸங்கி அவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

அன்றைய நாட்களில் போர்வீரர்கள் தங்களுடைய இடுப்பு பகுதியில் தங்களுடைய வாளை தொங்கவிடுவது தான் வழக்கம். ஆனால் நபி (ஸல்) அவர்களோ தங்களுடைய கழுத்தில் வாளை கட்டித் தொங்கவிட்டு கொண்டு வந்ததாக கூறப்பட்டது நூருத்தீன் அவர்களுக்கு வியப்பை ஏற்படுத்தினாலும் அது அவர்களுக்கு ஒரு சுன்னத்தாகப் (நபி வழியாக) பட்டது.

அடுத்த நாள் கோட்டையில் நூருத்தீன் ஸங்கி அவர்களை காண பொதுமக்கள் பலர் காத்துக்கொண்டிருந்தனர். நூருத்தீன் ஸங்கி அவர்களும் வந்தார்கள் தங்கள் கழுத்தில் வாளை தொங்கவிட்டவாறு. அவர்கள் மட்டுமா? அவர்களுடைய படைவீரர்களும் அவரைப் பின்பற்றி அப்படியே வாளை தங்கள் கழுத்தில் தொங்க விட்டவாறு வந்தார்கள். இப்படி ஒரு நபி வழியை எந்த பிரச்னையும் எந்த கேள்வியும் இன்றி உயிர்ப்பித்தார்கள் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

நபி (ஸல்) அவர்களுடைய அடிச்சுவட்டை அப்படியே பின்பற்ற எண்ணிய நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு அல்லாஹ் வெற்றியை அள்ளிக்கொடுத்ததில் வியப்பென்ன இருக்கின்றது.

### சலவைக் கனவு

ஒருமுறை அவருடைய அமைச்சர் முவஃப்ஃபகத்தீன் இப்னு அல்கைசரானி என்பவர் ஒரு கனவு கண்டார். அதில் நூருத்தீன் ஸங்கி அவர்கள் தங்களுடைய ஆடைகளை அவரே துவைத்துக் கொண்டிருப்பது போல கனவு கண்டார். இதனை நூருத்தீன் அவர்களிடம் சொல்லவும் செய்தார்.

இதை செவிமடுத்த நூருத்தீன் அவர்கள் சற்று நேரம் சிறிது நேரம் சிந்தனை செய்து விட்டு வரிகளை தள்ளுபடி செய்தார். பின்னர் நீங்கள் கண்ட கனவின் விளக்கம் இதுதான் தன் அமைச்சரிடம் கூறினார்.

### ஜிஹாதுக்காகவே

இரவுத்தொழுகைகளில் நூருத்தீன் அவர்கள் யாஅல்லாஹ்! பொதுமக்களிடமிருந்து வரி வசூலிக்கும் மனிதன் மீது கருணை வைப்பாயாக! என்று பிரார்த்திக்கும் வழமையுடையவராக இருந்தார்.

அந்த வரிகளை நீக்கும் போது பொதுமக்களை அழைத்து தன்னை அந்த வரி வசூலித்ததற்காக மன்னிக்கும் படி கோருவார். பின்னர் அவர்களை நோக்கி அல்லாஹ்வின் மீது சத்தியமாக ஜிஹாதிற்காக அன்றி இந்த வரிகளை நான் பெறவில்லை என்று கூறுவார்.

### அநாதை சிறுவனின் சொத்து

ஒருமுறை செல்வசெழிப்பு மிக்க வியாபாரி ஒருவர் அலெப்போவிற்கு நூருத்தீன் ஆட்சியின் போது வந்தார். அவருக்கு ஒரே ஒரு சிறுவன் மட்டுமே வாரிசு. திடீரென்று ஒருநாள் அவர் இறந்து விட்டார்.

அலெப்போவை சேர்ந்த சிலர் நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினர். அதில் அந்த பணக்கார வியாபாரி பற்றியும் அவர் விட்டுச்சென்ற சொத்துக்கள் பற்றியும் அவருடைய 10 வயது மகன் பற்றியும் எழுதி இருந்தனர். அந்த வியாபாரி கிட்டத்தட்ட 20000 தினார்களுக்கும் மேலாக சொத்துக்களை விட்டு சென்று இருந்தார்.

அந்த மக்கள் இதனை குறிப்பிட்டு அந்த சிறுவன் வளர்ந்து பெரியவனாகும் வரை அந்த

சொத்துக்களை கருவூலத்தில் பாதுகாக்கும் படியும் அதன் பின்னர் அந்த சொத்தில் சிலவற்றை அவனுக்கு கொடுத்து விட்டு மற்றவற்றை அரசே எடுத்துக்கொள்ளலாம் எனவும் யோசனை கூறி இருந்தனர்.

நூருத்துன் ஸங்கி அவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்,"இறந்தவர் மீது அல்லாஹ் கருணை பொழிவானாக! அந்த சிறுவனை அல்லாஹ் உயர்த்துவானாக! அல்லாஹ் பணத்தின் மீது சாபத்தை இறக்கட்டும் ! அந்த சிறுவனின் சொத்தை அபகரிக்க நினைக்கும் அனைவரையும் அல்லாஹ் அழிப்பானாக !"

வாய்ப்பு கிடைத்தால் பொதுமக்களின் சொத்துக்களை அபகரிக்கும் ஆட்சியாளர்களுடன் ஒப்பிட்டு பாருங்கள். ஏன் இறைவன் நூருத்தீன் ஸங்கிக்கு வெற்றியளித்தான் என்பது புரியும்.

**இறை சட்டத்தை விட சிறந்த சட்டம் உண்டா?**

நூருத்தீன் ஸங்கி அவர்கள் நோன்பு மாதம் வந்தால் ஷேக் உமருல் மல்லா என்பவருக்கு செய்தி அனுப்பி நோன்பு திறக்க ஏதாவது அனுப்பித் தரும்படி கோருவார்கள். ஷேக் உமருல் மல்லா அவர்கள் உலக பற்றற்றவர். சிறந்த இறைநம்பிக்கையாளர்.

உமர் அவர்களும் ஸங்கி அவர்களுக்கு காய்ந்த ரொட்டித்துண்டுகளையும் இன்னும் இதுபோன்ற சிலவற்றையும் அனுப்பித்தருவார்கள். இதைத்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள் நோன்பு திறக்கும் போது உண்பார்கள்.

நூருத்தீன் அவர்கள் மொசூலுக்கு வரும் போது உமருல் மல்லா அவர்கள் கையால் சாப்பாடு சாப்பிடுவார்கள். நூருத்தீன் அவர்கள் மொசூலை வெற்றி கொண்டார்.

அதன் ஆட்சியாளர் கமஷ்தகீனிடம் இஸ்லாமிய ஷரீயா சட்டத்தை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். தீர்ப்புகள் அதன் அடிப்படையிலேயே தரப்பட வேண்டும் என்று கூறி இருந்தார்.

ஷேக் உமருல் மல்லாவை கலந்தாலோசிக்காமல் நீதிபதியும் அவருடைய பிரதிநிதிகளும் எந்த முடிவையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் கட்டளையிட்டார்.

ஒருமுறை நீதிபதியும் அவரின் ஆதரவாளர்களும் கமஷ்தகீனிடம் ஒழுக்கக்கேடானவர்கள் அதிகரித்து விட்டனர், அதனால் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது, இதனை கடுமையான தண்டனையின்றி தடுக்க இயலாது என கூறினர்.

அதாவது இஸ்லாமிய ஷரீயா சட்டத்தை தாண்டி சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டும் என்பது அவர்களின் கோரிக்கை. இதனை நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் எடுத்து சொல்லி அதற்கான அனுமதியை பெற்றுத்தரும்படி அவர்கள் கோரினர்.

அதற்கு அவர் எனக்கு அதற்கான தைரியம் இல்லை என்று கூறிவிட்டார்.

எனவே அவர்கள் உமருல் மல்லா அவர்களை அணுகி இதுபற்றி நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு எழுதி பதில் பெற்றுத்தரும்படி கோரினார்கள்.

உமரும் நூருத்தீனுக்கு பின்வருமாறு கடிதம் எழுதினார், ஒழுக்கக்கேடு, லஞ்ச லாவண்யம், நெடுஞ்சாலை வழிபறிப்புகள் பெருகிவிட்டன. அவை கடுமையான தண்டனைகளின் மூலமே தடுக்கப்பட முடியும். ஒருவருடைய உடைமைகள் பாலைவனத்தில் பறிக்கப்பட்டால் திருடப்பட்டால் அவர் அதற்கான சாட்சியை எங்கிருந்து கொண்டு வர இயலும்?"

இதற்கு நூருத்தீன் ஸங்கி அவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்கள், அல்லாஹ், அவனுக்கே புகழனைத்தும், அவனே மனிதர்களை படைத்தான், அவர்களுக்கு எது சிறந்தது என்பதை அவனே அறிவான்.

மக்கள் பயன்பெறுவதற்காகவே அவன் ஒரு சட்டத்தை அமலாக்கியுள்ளான். இஸ்லாமிய சட்டத்தை பின்பற்றுவதின் மூலமே மக்களுக்கான நல்வாழ்வை முழுமையாக பெற முடியும். இஸ்லாமிய ஷரீயா சட்டத்தினை விட சிறந்த ஒன்று இருந்திருக்குமேயானால் அதனை அல்லாஹ் நிச்சயம் நமக்கு தந்திருப்பான். எனவே, நமக்கு அதைத் தவிர்த்த வேறொரு சட்டம் தேவையே இல்லை.

ஷேக் உமருல் மல்லா அவர்கள் மக்களை ஓரிடத்தில் கூட்டினார், நூருத்தீன் ஸங்கி அவர்களின் கடிதத்தை படித்தார். பின்னர் இவ்வாறு கூறினார்,"ஓர் அரசனுக்கு ஓர் அடியான் எழுதிய கடிதத்தை பாருங்கள், அதே போல் ஓர் அடியானுக்கு ஓர் அரசன் அளித்துள்ள பதிலையும் பாருங்கள்" என்று கூறி கண்ணீர் விட்டழுதார்.

குறிப்பு - இன்று அல்லாஹ் நமக்களித்த ஷரீயா சட்டங்களை தூக்கி தூர எறிந்து விட்டு மற்ற சட்டங்களில் சமன் காணும் நம்மவர்களுக்கு நூருத்தீன் ஸங்கி அவர்களின் இந்த கருத்தில் நிச்சயம் பாடம் உண்டு. - தொடரும் இன்ஷா அல்லாஹ்...

**அபூ அஃப்ரா**



# சிலுவைப் போர் 2.0

# "Shariah The Threat to America"

## "ஷரிஅத் அமெரிக்காவின் மிகப்பெரிய ஆபத்து"

சென்ற இதழில், சிலுவைப் போர் 2.0 ஏன் நடக்கின்றது? அதாவது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் ஏன் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் இடை விடாமல் தாக்குகின்றன? என்பதற்கான காரணத்தை ஜான் ஃபெப்பர் அவர்கள் சொல்லியிருந்தார்கள்.

அது "இஸ்லாம் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் உலகெங்கும் செலுத்தும் ஆதிக்கம், அதிகரித்து வருகின்றது." என்பது தான், என்றார். அவர் ***"Modern Mainstream Islam"***, நவீன பொதுத்தள இஸ்லாம் என்றொரு சொற்றொடரைப் பயபடுத்தியிருக்கிறார்.

அவருடைய பார்வையில் ***Modern Mainstream Islam***, நவீன பொதுத்தள இஸ்லாம், என்றொன்று இருக்கிறது. இதனை அவர் நம்புகிறார். ஆனால் இஸ்லாம் ஒன்றே ஒன்றுதான் இருக்கின்றது. "அது இஸ்லாம்" அவ்வளவுதான். அதற்கு அடை மொழிகள் தேவையில்லை.

ஆனால் நவீன சிலுவை போரை நடத்திக் கொண்டிருப்பவர்கள், இந்த இஸ்லாத்திற்குப் பயப்படுகின்றார்கள். அஞ்சுகின்றார்கள். இஸ்லாத்தின் மீதுள்ள வெறுப்பு இப்படித்தான் வருகின்றது.


ஜான் பெப்பர் அவர்களின் இந்த சொற்றொடருக்கு என்ன பொருள்? அவருடையப் பார்வையில் பொதுவான முஸ்லிம்கள் என்பவர்கள் இவர்கள் தான். இவர்கள் இஸ்லாத்தின் விதிகளை அப்படியே பின்பற்றுபவர்கள்.

முஸ்லிம்களுக்குள், பிளவுகள், ஷியா, சுன்னி, சலபி என்றெல்லாம் பிளவுகள் இருக்கின்றன என்று யாராவது பிரஸ்தாபித்தால் அதைப் பற்றி கவலைப் பட மாட்டார்கள் ஈமான் கொண்டவர்கள்!

அல்லாஹ்வை நம்புபவர்கள் எல்லோரும் முஸ்லிம்களே! என எடுத்துக் கொள்கிறார்கள். இந்தப் பின்னணியில் அனைவரையும் ஒன்றாய் அரவணைத்து இஸ்லாத்தின் எதிரிகளை சந்திப்பதில் முனைப்போடு இருப்பவர்கள் இஸ்லாம் எனும் இலட்சியத்தை முன்னே கொண்டு செல்பவர்கள்.

இவர்கள் இஸ்லாத்தை நிலைநாட்டுவதில், இஸ்லாமிய அரசியல் அமைப்பை ஆட்சியை மீண்டும் கொண்டு வருவதில் முன்னணியில் நிற்பார்கள். அதற்காக அனுதினமும் உழைப்பவர்கள்.

இஸ்லாத்தின் வீழ்ச்சியால் மனித இனம் முழுமையாக மிகப் பெரிய இழப்புக்குகளுக்கு உள்ளாகி நிற்கின்றது என கவலைப் படுகின்றார்கள். இந்த இழப்பிலிருந்து மனித இனத்தை மீட்க தங்களால் இயன்றதையெல்லாம் செய்திட வேண்டும் என உறுதி பூணுகின்றார்கள். அதற்கான




**2018 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ஐரோப்பிய முஸ்லிம்களின் மக்கட்தொகை**

திட்டங்களை வகுத்து செயல்படுகின்றார்கள்.

அத்தோடு இஸ்லாத்தை அதை அறியாதவர்களுக்கும் எடுத்து சொல்லுகின்றார்கள். இவர்களின் முயற்சியில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை பெருகுகின்றது. புதிய மனித சக்தி இஸ்லாத்திற்குக் கிடைக்கின்றது.

எதிலும் நடுவு நிலை தவறாமல் நடந்து கொள்கிறார்கள். இவர்கள் தங்களுக்கு வரும் எந்த இழப்புகளையும், எதிர்ப்புகளையும் பொருட்படுத்துவதில்லை. இழப்புகளை இன்முகத்தோடு ஏற்றுக் கொள்கின்றார்கள்.

அல்லாஹ்வின் பாதையில் எதை எதை இழந்தோம் என்றே கணக்குப் பார்க்கின்றார்கள். ஏனெனில் அல்லாஹ்வின் பாதையில் ஏற்படும் இழப்புகள் தாம் நமக்கு நாளை மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில், பன் மடங்குக் கூலிகளைப் பெற்றுத் தரும். இது தான் அவர்களின் எண்ண ஓட்டம். அறுதி இலக்கு.

பின் நவீனத்துவம், முன் நவீனத்துவம், நவீனம், மதவாதம் என்ற போர்வையில் வரும் விவாதங்கள், வாதங்கள் இவற்றையெல்லாம் சிரித்துக் கொண்டே எதிர் கொண்டு விடுகிறார்கள்.

இதர கொள்கைகளைக் கொண்டு வருபவர்கள் விவாத அரங்குகளில் இவர்களை வெல்ல முடிவதில்லை. முடிந்ததில்லை. அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

வரலாற்றின் ஒரு காலக்கட்டத்தில் ஆங்கிலேயர்களிடமிருந்து அடர்ந்து வந்த படைகள், ஆயுதந்தாங்கிய தாக்குதல்கள், தத்துவப் படையெடுப்புகள், கலாச்சார ஆக்கிரமிப்புகள், இவற்றையெல்லாம் உரிய முறையில் எதிர்கொண்டு வெற்றிக் கொண்டார்கள். இன்று அந்த ஆங்கில நாட்டில் இஸ்லாமிய கலாச்சாரம் பரவி வருகின்றது.

70-80 ஆண்டுகளாக அமெரிக்கா அற்றும் ஐரோப்பிய நாடுகள் அணிசேர்ந்து இஸ்லாத்தைக் கொள்கை ரீதியாகத் தாக்கி வருகின்றார்கள். முஸ்லிம்களைப் பல்வேறு காரணங்களை கூறி கொலை செய்து வருகின்றனர். 1990 முதலே முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழும் முஸ்லிம் நாடுகளில் குண்டு மழைகளைப் பொழிந்து

வருகின்றார்கள். பிண மலைகளை உருவாக்கி வருகின்றார்கள். இஸ்லாத்தை ஒழித்து விட வேண்டும் என வரிந்து கட்டிக்கொண்டு நிற்பவர்கள் முஸ்லிம்கள் அடர்த்தியாக வாழும் நாடுகளில் வீசிய குண்டுகள், குறைந்த சக்தியுள்ள அணுகுண்டுகள், விஷ வாயு குண்டுகள், பெல்லட் குண்டுகள் என்ற பார்வையைப் பறித்து வாழ்க்கையைப் பறிக்கும் வாழ்நாள் முழுவதும் முடமாக்கிடும் குண்டுகள் என பலதரப்பட்டவை.

இவை வாழும் தலைமுறையை மட்டுமல்ல வரப்போகும் தலைமுறையையும் தாக்கிற்று. ஆமாம் முஸ்லிம் பெண்களின் கருவிலிருந்த குழந்தையைக் கூட இவர்கள் விட்டு வைத்திட வில்லை.

இத்தனைக்குமிடையே இந்த பொதுவான முஸ்லிம்கள், ஐரோப்பாவை வெற்றிக் கொள்ளும் அளவிற்கு இஸ்லாத்தை ஐரோப்பியர்களிடம் பரப்பிவிட்டார்கள். எந்தளவிற்கு என்றால் , ஐரோப்பாவில் இப்போதைய விவாதம் இந்த முஸ்லிம்களை எப்படி இல்லாமலாக்குவது? என்பது தான். இதற்காக அவர்கள் வகுத்தத் திட்டங்கள் பலப்பல. எதுவும் வெற்றி பெறவில்லை.

ஐரோப்பாவில் நடந்த விவாதத்தில் முஸ்லிம்கள் ஐரோப்பாவில் வந்தேறிகள் என்றால் அவர்களை வெளியேற்றி விடலாம். வந்த இடங்களுக்கே திருப்பி அனுப்பி விடலாம். இவர்கள்(***Migrant Population***) வேற்று நாடுகளில் இருந்து வந்து குறியேறியவர்கள் அல்ல. மாறாக, ***"The same Europe. Europeans are living, but they are now Muslims. (Future fast Forward: by Mathias Charing)***

அதாவது; "அதே ஐரோப்பா, ஐரோப்பியர்கள் தாம் வாழுகின்றார்கள். ஆனால் அவர்கள் இப்போது முஸ்லிம்கள் என்ன செய்வது?" என்று ஓடிக் கொண்டிருக்கிறது விவாதம்.

செய்வதறியாது தினறிப் போய் நிற்கின்றார்கள், ஐரோப்பாவில் இஸ்லாத்தை எதிர்ப்பதையே முழு நேரப் பணியாகக் கொண்டவர்கள்.

அமெரிக்காதான் இன்று இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் பயங்கரத் தாக்குதல்களை, கொடூரத் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இதில் யூதர்கள் எல்லா நாசகார செயல்களையும் செய்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் அமெரிக்கர்களுக்கு மிகவும் பிடித்த மார்க்கம் இஸ்லாம். ஷரியத் சட்டங்களின் நுண்மாண் நுழைபுலங்களை அந்த மக்கள் விரும்புகின்றார்கள்.

ஷரிஆ அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்குத் தருகின்ற யதார்த்தமான தீர்வுகள் அவர்களை அமெரிக்கர்களை மலைக்க வைக்கின்றது. அவற்றால் அதி வேகமாக கவரப்பட்டு வருகின்றார்கள்.

இனி அமெரிக்கர்கள் ஷரிஆ இஸ்லாமியச் சட்டங்களின் வழி வாழ்ந்திடத் தலைப்பட்டு வருகின்றார்கள் என அமெரிக்க உளவுத்துறைகள், அமெரிக்கா அரசுக்கு எச்சரிக்கையை விடுத்திருக்கின்றன.

2012 ஆம் ஆண்டு அமெரிக்க உளவுத்துறையின் 400 பக்க அறிக்கை ஒன்றை அமெரிக்க அரசுக்குத் தந்தது. அந்த அறிக்கைக்கு அமெரிக்க உளவுத்துறை தந்த பெயர் **"Shariah The Threat to America"**. இதன் பொருள் "ஷரிஅத் அமெரிக்காவின் மிகப்பெரிய ஆபத்து".

(இந்த 400 பக்க அறிக்கையை நாம் வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு 2012 வைகறையில் அட்டைப்பட கட்டுரையாக தந்தோம்.)

இது போன்றவற்றை சாதித்தவர்களைத்தான் ***"Modern Mainstream"*** முஸ்லிம்கள் என்கின்றார் ஜான் பெப்பர். இவர்களை நாம் அன்போடு அழைத்திட வேண்டுமானால் "யதார்த்தமான முஸ்லிம்கள்" என்றழைக்கலாம்.

இவர்கள் தங்கள் இஸ்லாமிய இலட்சியப் பயணத்தில் எந்த முஸ்லிமையும், அவர் முஸ்லிமல்ல, நான் தான் உண்மையான முஸ்லிம் எனக் கூறியதில்லை. ஏனைய முஸ்லிம்களோடு சமருக்கு நிற்பதில்லை.

இவர்களின் சாதனைகளில் இன்னும் சிலவற்றை இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் பார்ப்போம். இதை நாம், ஜான் பெப்பர் முதலாய ஐரோப்பியர்கள் ஏன் பொதுவான முஸ்லிம்களைக் கண்டு அஞ்சுகிறார்கள்? இடைவிடாமல் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும், வெறுப்புப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விடுகின்றார்கள், என்பனவற்றைப் புரிந்திட பெரிதும் உதவும்.

**MGM**

Oned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadgur Street, chennai - 600 002